ரிஜிஸ்டர் நெ. 1279. போஸ்ட் பாக்ஸ் நெ. 346. டெலிபோன் நெ. 2581

DRAVIDAN

திராவிடன்

நாடோறும் வெளிவருவது

ஆசிரியர்-திரு. சனக - சங்கர - கண்ணப்பர்.

மலர்—13] சென்னை விபவ-ஹு சித்திரை-மீ 21உ 1928-ஹு மே-மீ 3உ வியாழக்கிழமை [இதழ்—101

பொழுது போக்கு.

"முந்திரிக் கொட்டை" நாயுடுவின் கொந்தளிப்பு

(நாரதர் எழுதுகிறது)

"கான்யூட்" என்ற ஒரு அரசனைப் பார்த்து இரண்டு மூன்று தாஸர்களும் நயவஞ்சகர்களும் "அரசே, உங்கள்பெருமையை நீங்கள் இன்னும் உணரவில்லை நீங்கள் எல்லாம் வல்லவர்; மனம் வைத்தால் சமுத்திரத்தில் மேலெழுந்துவரும் அலைகளைக் கூட அடக்கி விடலாம்" என்று கூறித் தூபம் போட்டார்கள். அந்த ஏமாந்த சோணகிரியும் ஒகோ இதுவும் உண்மைதான் போலும் என்று நினைத்து அலைவாய்க்கரையில் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போடச்செய்து அதன்மீது அமுந்தா் திருத்தமாக உட்கார்ந்து ஒருகனைப்புக் கனைத்து "ஓ அலையே! நான் உனக்கு அரசன். இதோ என் தாஸர்கள் என்னை மகா பெரியவர் என்று கூறி எனதடிகளில் விழுந்து கிடக்கின்றனர். அதுபோல நீயும் என் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அலைக்காமலிரு" என்றுகட்டளையிட்டார். அதற்குப்பதிலாக ஒரு பெரிய அலை வந்து மோதி அவனை நனைத்துவிட்டது என்று ஒரு கதை கூறுவதுண்டு. அதுபோல நமது முந்திரிக்கொட்டை (ஆ! மறந்தோம்) "தேசிய" முந்திரிக்கொட்டை நாயுடுகாரையும் இரண்டு மூன்று வயிற்றுப்பிழைப்புத் தாஸர்களும் சுயராஜ்யக்கட்சி நயவஞ்சகர்களும் சேர்ந்து நீர் பெரிய மேதாவி; எம். டி, எம். பி. பி. எஸ். எல். எம். பி. என்று சொல்லுகிற பரீட்சைகளில் ஒன்று கூடப் பாஸ் செய்யாமல் டாக்டர் ஆகிவிடவில்லையா? தினசரிப்பத்திரிகை நடத்துவதற்கு வேண்டிய ஆங்கிலஅறிவோ தமிழறிவோ ஏதுமில்லாமல் பத்திரிகை நடத்திவரவில்லையா? இரண்டொரு "வாலர்"களை வைத்துக்கொண்டு பெரிய "தலைவர்" என்று பறையடித்துக்கொள்ள வில்லையா? இவ்வளவுக்கு வல்லவரான தாங்கள் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூறி விட்டால் தவிடுபொடியாகி விடாரா நாய்க்கரும் அவர் ஆதரிக்கும் ஜஸ்டிஸ் கட்சியும்" என்று தூபம் போட்டார்கள். அவ்வளவு தான் வைத்தியருக்கு உச்சியிலேறிவிட்டது. பாய்ந்தார் திராவிடன்மீது திராவிடன் இறுக்கிய ஆணித்தரமான பதிலால் இனி நாம் திராவிடன் பக்கங்கூடப் போகிறதில்லை'; என்று சூடுண்ட பூனைபோல் ஓடினர். புலியென நினைத்து பூனையாகிய நம்நாயுடுகாருபாய்ந்ததினால் விளைந்த பலன் என்ன. வென்றால் 1500 ஆக இருந்த 'திராவிடன்' சந்தாதாரர்கள் 3000 ஆகப் பெருகி இப்பொழுது 3500க்கு மேலே சேர்ந்து வருகின்றனர். இதற்குரிய பகுதிவீதம் (தமிழ்அறியாத்)தமிழ்நாடு தினசரி இயல்பாகவே குறைய ஆரம்பித்தது.

* * *

பார்த்தார் முந்திரிக்கொட்டைகாரு! ஒகோ இது விபரீதமாகி விட்டது. இனி நாயக்கரைத்தான் தாக்க வேண்டுமென்று அறிவிலித் தாஸர்களின் வார்த்தைகளைக் கேட்டு "குடியர"சையும் திரு-இராமசாமி நாயக்கரையும் தாக்கினர், வைக்கம் வீரரும், சுயமரியாதைச் சிங்கமும், போலி என்பதில்லாத உயர்ந்த பத்தரை மாற்றுத் தங்கமுமாகிய திரு. நாய்க்கரது பாதங்களில் ஒட்டிய சிறு தூசியினருகில் கூடச் செல்வதற்குத் தகுதியில்லாத (முந்திரிக் கொட்டை) நாயுடுகாரின் ஏமாற்றல்களையும், பகடிகளையும், "தன்னை மெச்சுமாம் தவிட்டுக் குழக்கட்டை" என்றது போன்ற வீண் பெருமையையும் உணர்ந்த தமிழ் மக்களா ஏமாறுவார்கள்? அக்காலம் மலையேறி அநேக நாளாகிவிட்டது. (உப்பு சப்பில்லாத) முந்திரிக்கொட்டையை உண்மைத் தமிழர் ஒருவரும் சட்டை செய்யவில்லை. அதற்குப் பதிலாக திரு நாய்க்கரைப் போட்டிபோட்டு ஆதரிக்க முன் வந்தனர். 3000 ஆக இருந்த குடியரசு 5000 ஆகி, 5000 இப்பொழுது எழாயிரத்திற்கு மேலாகச் சென்று விட்டது. ஆனால் "தமிழ்நாடு" வாரப்பத்திரிகையோ (மூ) தேவிதாஸனுக்குத் திராவிடனில் அளித்த பதில் கடிதத்தில் எழுதியிருந்தது போல் ஒன்று பத்தாகத் திரும்பிவரத் துவங்கி, ஆகாரம் சாப்பிடும்போது கீழே போட்டு உட்காரவும், கை துடைக்கவும் உதவுவதாயிற்று.

* * *

பாவம்! அதையே நம்பியிருந்த முந்திரிக்கொட்டை வீரர் என்னசெய்வார்? எது இது கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோலாயிற்றே என்று தடுமாற்றமடைந்துவிட்டார். இதுதான் சமயமென்று அவரது சுயநல நயவஞ்சக நண்பர்கள் (பார்ப்பனர்கள்) "என்ன நாயுடுகாரு எங்களுக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இதற்கெல்லாம் காரணம் ஜஸ்டிஸ் கட்சிப் பெரியார்களும், மதியிற்சிறந்த மாணிக்கமணியுமான "ஜஸ்டிஸ்" ஆசிரியர், திருமிகு. ஏ. இராமசாமி முதலியாரும் தங்கள் பக்கம் பேசாமல் நாய்க்கரின் இஷ்டப்படி விட்டு வருவதால்தான் இவ்வளவு கஷ்டம் நேருகிறது. தாங்களோ எப்பொழுதும் போல் பிராமணதாசரா யிருப்பதை விட்டு விட்டுச் சற்று அப்பொழுது மிப்பொழுதுமாக ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாகப்பேசி வருகிறீர்களே" என்று கூறினார்கள். அவ்வளவு தான் அமெரிக்கா தேயத்தை முதல் முதல் கொலம்பஸ் என்பவர்கண்டுபிடித்தபோது எவ்வளவு ஆச்சரிய சந்தோஷமுற்றிருப்பாரோ அதை விட ஆச்சரிய மடைந்து நாயுடுகாரு [illegible] மானார். உடனே தமது (தமிழறியா) "தமிழ் நாட்டின்" தலைபங்கத்தில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தங்கள் தமிழ் தினசரிகள் எழுதுவதைக் கண்டிக்கிறதில்லையே யெனக் குறை கூறினர்.

* * *

இந்த நிலைமையில் மாயவரத்தில் காங்கிரஸ் கமிட்டி கூட்டம் கூடிற்று. பருப்பு இல்லாத கல்யாணமா? முந்திரிக்கொட்டையும் அங்கே முன்னே முளைத்தது பார்ப்பனர் மெச்சப் பாங்காக உளறிற்று பனகால்ரசரையும். பார்ப்பனரல்லாதாரி பக்கத்தையும் குறித்து வாயில் வந்தபடியுளறி வழிந்தது "ஜஸ்டிஸ்" பத்திரிகை ஆசிரியர் அவ்வுளறலுக்குச் சரியான சூடு கொடுத்தார். உளறல் குழறலாயிற்று; ஓடி ஓடிப் பத்திரிகைகளுக்குச் செய்திகளனுப்பினர். ஆடினர், பாடினர், அலறினர். நாயுடுகாரு தனக்குள்ள சிறிய அறிவைக் கலக்கிக் கொண்டார்: இவர்பெரிய மலையுச்சியின் மீதேறி அங்கிருந்து ஒரு ஏணியை வைத்து அதன்மீதேறி எட்டித் தாவினாலும் பாதங்கள் இருக்குமிடங்களைக் கூடத் தொடமுடியாத உயர்ந்த தெள்ளிய அறிவு நிலையில் இருக்கும் ஜஸ்டிஸ் ஆசிரியரின் மீது எரிந்து விழுந்தார். இதைக்கண்டு ஆந்திரப் பத்திரிகா, சுதேசமித்திரன், ஆங்கில சுயராஜ்யா என்றபத்திரிகைகள் இம்முந்திரிக்கொட்டையைப் போற்றினவென்று அப்போற்றுதல்களைத் தன் (தமிழறியாத்)தமிழ்நாட்டில் எடுத்துப்போட்டுக் கொண்டார். பாவம் இவைபோன்றபார்ப்பனர் பத்திரிகைகளைத்தவிர வேறு எந்த சுயமரியாதையுள்ள பத்திரிகையும் தன்னை ஆதரிக்காது என்ற உண்மைஇப்பொழுது திரு. நாயுடுகாரின் பெரிய மண்டைக்குள் நுழைந்ததோ இல்லையோ தெரியாது முந்திரிக் கொட்டை நாயுடுகாரு இப்பொழுதாவது அடைந்திருக்கும் கொந்தளிப்பு நிலைமைக்கண்டால் நமக்குக் கள்ளையுண்ட குரங்கு தேளாற்கொட்டுண்ட கதை நினைவிற்குவருகிறது. இந்தக் கொந்தளிப்பு நிலையில் தேசிய முந்திரிக் கொட்டைத் துள்ளிக் குதிப்பதைத் தமிழ்நாடு முழுவதும் வேடிக்கையாகப் பார்த்துச் சிரித்து வருகிறது என்பதை அது அறிந்திருக்கட்டும்.

ஏ. முகைதீன் பரிமள சந்தனதித் தைலம்.

இம்மேலான பரிமள சந்தனதித் தைலத்தில் சோடச புஷ்பங்களாலும் பச்சிலை மூலிகைகளாலும் உயர்ந்த வாசனை புனுனி சரக்குகளாலும் பசும்பால் செவ்விளநீர்களுடன் எங்கள் அனுபோக முறைப்படி மிகப் பிரயாசையுடன் தயார் செய்திருக்கிறபடியால் 5-வயது பாலர் முதல் முதியவர் வரையில் ஆண் பெண் சகல பேர்களும் ஸ்நானம் செய்து வரலாம்.

தீரும் வியாதிகளாவன:—உஷ்ணம், கபாலக் கொதிப்பு, கண்ணெரிச்சல், கண் மறைப்பு, தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டைக் குடைச்சல், பீனிசம், தலையில் செம்பட்டை நரைமயிர், அடிக்கடி மயிர் உதிர்தல், கண்டத்திற்கு மேல்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி முக வசிகரத்தையும் உண்டு செய்யும் ஆண்டவன் உதவியால் உடனே காணலாம்.

பத்தியம்:—உபயோகிக்கும் அன்றைய தினம் தயிர், மோர், பால், ஸ்திரீ சம்போகம் விலக்கவும், சுத்த ஜலத்திலாவது வென்னீரிலாவது ஸ்நானம் செய்யவும்.

எனதன்பார்ந்த சகோதர சகோதரிகளும் இத்தைலத்தை ஒரு முறை வாங்கி உபயோகித்தால் இதன் குணம் நன்கு விளங்கும்.

இன்னும் எங்கள் கம்பெனியில் தயாரிலிருக்கும் பரிமள அரைக்கீரை விதைத் தைலம், அமிர்தபாம், ரோமசங்காரிப் பவுடர் முதலியவகைகளும் தயாரிலிருக்கிறது. தேவையுள்ளவர்கள் ஆர்டர் செய்யும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறோம். இதன் பூரா விபரமும் எங்கள் கம்பெனி கேட்லாக்கில் காணலாம்.

விலை விபரம்.

	ரூ.	அ.	பை.
1. பரிமள சந்தனதி தைலம் 1 சேர் டின் 1-க்கு	1	0	0
2. பரிமள அரைக்கீரை விதைத் தைலம் ஷை டின் 1-க்கு	1	4	0
3. அமிர்தபாம் பாட்டில் 1-க்கு	0	8	0
4. ரோமசங்காரி பவுடர் பாட்டில் 1-க்கு	0	6	0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம் எங்களுக்கு பல இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

எங்கள் விலாசம்:—

ஏ. முகைதீன் பரிமளசாலை,
அய்யம்பேட்டை,
தஞ்சை ஜில்லா, எஸ். ஐ. ஆர்:

(71)

மலாய் நாடு சந்தாதார்களுக்கு

பல நண்பர்களின் வேண்டுகோளின்படி மலாய் நாட்டுச் சந்தாவை வருடமொன்றுக்கு 1—5—28 முதல் ரூபாய் 18—0—0 ஆகக் குறைத்துள்ளோமென்பதை மகிழ்ச்சிப் பெருக்குடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

28—4—28 மானேஜர்,

24 தங்கமெடல்கள் பரிசுபெற்ற

மதராஸ் என். வி. ஷண்முகம் கம்பெனியாரின்

பட்டணம்பொடி

ஒவ்வொரு இந்தியரின் மனதையும் குதூகலிக்கச் செய்கின்றது. மணம், குணம், நிறம், காரம், வாடை, இவ்வைந்தும் ஒருங்கே கமழுகின்றன. தினசரி நூற்றுக்கணக்கான பார்சல்கள் அனுப்பப்படுகின்றன.

தந்தி விலாசம் "மூக்குத்தூள்" மதராஸ்.

என். வி. ஷண்முகம் அண்டு கம்பெனி,
பட்டணம்பொடி தொழிற்சாலை,
வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

(77)

தபால் பெட்டி, 555, மதராஸ்.

வெளிநாட்டுச் செய்தி.

ஆங்கிலோ-எகிப்திய தகராறு.

எகிப்து சர்க்கார் பதில்

பார்லிமெண்டில் கேள்வி.

கயிரோவில் கலவரம்.

கயிரோ. மே 1

பிரிட்டனின் இறுதிக் கடிதத்துக்கு எகிப்திய சர்க்கார் அனுப்பி யிருக்கும் பதில் மிகவும் சிநேகபான்மையானது என்று தெரிகிறது. எகிப்திய பார்லிமெண்டார் சுயாதீனமாய் சட்டம் செய்வதில் தலையிட கிரேட் பிரிட்டனுக்காவது, அல்லது வேறெந்த வல்லரசுக்காவது உரிமையுண்டென்று எகிப்திய சர்க்கார் ஒப்புக் கொள்ள முடியாது. ஆனால் கிரேட் பிரிட்டனுடன் சிநேகபாவமா யிருக்க எகிப்து விரும்புகிறதென்பதை காண்பிக்கும்படி பொதுக்கூட்ட மசோதா அடுத்த பார்லிமெண்ட் கூட்டம் வரையில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. அதனிடையில் எகிப்துக்கும் பிரிட்டனுக்கு சிநேக உறவு ஏற்பட்டு தற்போது ஏற்பட்டிருக்கும் தொல்லை நீங்கிவிடுமென்று எகிப்திய சர்க்கார் நம்புகின்றது என்று அந்தப்பதிலில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தப்பதில் எழுதப்பட்டிருக்கிற மாதிரியினால், எகிப்து தகராறை விருப்பவில்லையென்றும், எகிப்து சர்க்காரின் நடவடிக்கையை இறுதிக் கடிதத்துக்கு திருப்திகரமான பதிலென்றும்பிரிட்டன் ஒப்புக்கொள்ளுமென்று எகிப்திய ராஜதந்திரிகள் நம்புகின்றனர். எகிப்து சர்க்காரின் பதில் பிரிட்டனுக்கு அனுப்பப் பட்டு விட்டது.

லார்ட் பர்க்கன்ஹெட் கண்டனம்

லண்டன் மே 1.

லேடிஸ் இம்பீரியல் கிளப்பில் நடந்த ஒரு விருந்தில் லார்ட் பர்க்கன் ஹெட் எகிப்திய பொதுக் கூட்ட மசோதாவைப் பற்றிப் பேசுகையில் எகிப்திய பொதுக் கூட்ட மசோதா நவம்பருக்குஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. எகிப்து சர்க்காருக்கு இந்த நடவடிக்கை தொந்தர வெல்லாம் வேண்டியதில்லை. அந்த மசோதாவை நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைப்பதால் பிரயோஜனமில்லை. அல்லது 10 வருடத்துக்கோ அல்லது 25 வருடத்துக்கோ ஒத்திவைப்பதாலும் பிரயோஜனமில்லை. சாம்ராஜ்ய உத்தரவாதமும், மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளும், தனது போக்குவரவு மார்க்கங்களை பாதுகாக்க வேண்டிய அத்தியாவசியமுமுள்ள எந்த நாடும் இவ்வித சட்டம் செய்வதை ஒப்புக்கொள்ள முடியாது. என் அபிப்பிராயப்படி இங்கிலாந்தில் எந்தக் கட்சி அரசுபுரிந்தாலும் இப்படிச் சட்டம் செய்யும் ஒருபோதும் முடியாது. என்று கூறினார்.

பிறகு எகிப்து விஷயமாய் திரு. ராம்சே மக்டானல்டின் நடவடிக்கையைப்பற்றி புகழ் பேசினார். அப்படிப் பேசுகையில். திரு. ராம்சே மக்டானல்ட் எனது இந்திய வியவகாரத் தொல்லைகளையெல்லாம் ஒரு ராஜ்ய நிபுணர் நிலைமையிலிருந்து கவனித்து வருகின்றார். அவரும் அவருடைய சகாக்களும் எனக்கு ஒவ்வொரு விதத்திலும் உதவிசெய்து வந்திருக்கின்றனர். அவர் இந்திய வியவகாரத்தை மிகவும் புத்திசாலித்தனமாய் நடத்தி வந்ததற்காக திரு. மக்டானல்டை அவருடைய தேசத்தார் எல்லாரும் போற்றவேண்டும் என்று கூறினார்.

பார்லிமெண்டில் கேள்வி.

காமனஸ் சபையில் திரு. ராம்சே மக்டானல்ட் கேட்ட கேள்விக்கு சர். ஆஸ்டன் சாம்பர்லெயின்பதில் சொல்லுகையில் பிரிட்டிஷ் கடிதத்துக்கு எகிப்து கொடுத்திருக்கும் பதில் இன்னும் வந்து சேரவில்லை. ஆகையால் நான் நேற்று கூறினதற்கு அதிகமாய் ஒன்றும் சொல்லமுடியாது என்று கூறினார்.

பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் எகிப்துக்குப் போகிறதாகச் சொன்ன விவரம் உண்மைதானாவென்று கமாண்டர் கென்வொர்தி கேட்டார். சர். ஆஸ்டின் சாம்பர் லெய்ன் அதற்கு பதில்சொல்லுகையில் நான் ஏற்கனவே இது விஷயமாய்க் கொடுத்த பதிலையேதிரும்பிசொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் பதில் சொல்லும்படி வற்புறுத்தினால் நான் சொல்ல வேண்டியதாகும் ஆனால், திரு. ராம்சே மக்டானல்ட் மீது அவ்வளவு உத்திரவாதத்தைச் சுமத்த இஷ்டமில்லை. ஆனால் இந்தக்கேள்விக்கு நான் இதிலும் அதிக விவரமான பதில் சொல்ல முடியுமென்று நினைக்கவில்லை என்று கூறினார்.

கமான்டர் கென் வொர்த்தி.— எகிப்துக்கு யுத்தக் கப்பல்கள் அனுப்பப்பட்டது. இது தான் முதல் தடவையல்ல அதுவுமன்றி இந்த விவரம் பத்திரிகைகளி லெல்லாம் பிரசாரமாகிவிட்டதால் சர் ஆஸ்டன் சாம்பர்லெய்ன் இது விஷயத்தை மறைத்து வைக்கவேண்டிய காரணமென்ன ?

திரு. தர்ட்டில், காமன்ஸ்சபையில்முன்னாலிருக்கிறவர்கள் கேட்கிறகேள்விகளைப்போலமற்றபக்கங்களிலிருப்போர்கேட்கிறகேள்விகளை முக்கியமானதென்று சர் ஆஸ்டன்சாம்பர் லெய்ன் கருதவில்லை என்றுதோன்றுகிறது என்றார்.

சர் ஆஸ்டன் சாம்பர்லெய்ன் தான் அப்படி ஒருபோதும் கருதவில்லையென்று கூறினார்.

பிரிட்டிஷ் படைக் கப்பல் எகிப்துக்கு போகின்றன என்று வெளியிடப்பட்டால், அதை பொது ஜனங்கள் தவறு என்று நினைப்பார்களென சர் ஆஸ்டன் சாம்பர் லெய்ன் கருதுகிறாரா என்று திரு சக்லத்வாலா கேட்டார். சர். சாம்பர் லெய்ன் அதற்கு பதில் சொல்லுகையில், அப்படி நான் கருதவில்லை: ஆனால் பிரிட்டிஷ் கடிதத்துக்கு எகிப்து சர்க்கார் பதில் கொடுக்கிறவரையில் இது விஷயமாய் ஒன்றும் சொல்லாமலிப்பதே மரியாதையாக இருக்குமென்று கூறினார்.

பத்திரிகை அபிப்பிராயம்

ரக்பி மே 1

"டெய்லி மெய்ல்" பத்திரிகை ஆட்சேபிக்கப்பட்ட எகிப்திய மசோதாவைப் பற்றி எழுதியிருப்பதில் அந்த மசோதா பொதுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கானது என்றுசொல்லப்பட்டாலும் உண்மையில் அது குழப்பத்தையும், கலகத்தையுமே தூண்டிவிடுகிறது. எனவே சர் ஆஸ்டன் சாம்பர் லெய்ன் காமன்ஸ் சபையில் கூறியதையும், அவர் எகிப்துக்கு பலமாய் எச்சரிக்கை செய்திருப்பதையும், ஒரு சில பொது வுடமைக்கட்சிக் காரரும், கிளர்ச்சிக்காரரும் தவிர, பிரிட்டிஷ் பொது ஜனங்கள் அனைவரும் ஆதரிக்கின்றனர். என்று கூறுகின்றது.

"மான் செஸ்டர் கார்டியன்" பத்திரிகை எழுதியிருப்பதில் சார்வட் பாஷா ஆலோசனை தவறி விட்டதனால் தேசியக் கட்சியார் அதிகாரத்துக்கு வந்தனர். அவர்கள் அதிகாரத்துக்கு வந்ததும் பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்கனவே ஆட்சேபித்திருந்த ஒரு மசோதாவை சட்டமாக்க முயன்றனர். நாஹாஸ் பாஷாவும் அவர் சர்க்காரும் உளறி வழிகிறதைப்பார்த்தால் அவர்கள் செய்தது தவறு என்று அவர்களுக்கே பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே எகிப்திய தேசாபிமானிகள் தேசத்தின் உண்மை நிலையை உணர்ந்து ஆங்கிலோ எகிப்திய உறவைச் சரிப்படுத்த முயல வேண்டும் என்று கூறுகிறது.

"டெய்லி நியூஸ்" பத்திரிகை எழுதியிருப்பதில் ஜாக்லுல் பாஷா உயிரோடிருந்தால் இந்தத் தொல்லை நேரிட்டிருக்காது. இந்த மசோதா முதல் முதலாகக் கொண்டு வரப்பட்ட பொழுது அவர் இதைக் கண்டனம் செய்திருக்கிறார். இந்த மசோதா ராஜ்ய முட்டாள் தனமேயன்றி வேறல்ல.

"டெய்லி கிரானிக்கிள்" எழுதியிருப்பதில் இந்த மசோதா சட்டமானால் பொது ஜன சமாதானத்துக்கும் அயல் நாட்டினர் உயிருக்கும் சொத்துகளுக்கும் பாதகம் நேரிடும். ஆகையால் அந்தமசோதாவை ரத்துச் செய்யும்படி முயற்சிப்பதே யன்றி பிரிட்டிஷ் சர்க்காருக்கு வேறு வழியில்லை என்று கூறுகிறது.

சர். ஜாய்சன் ஹிக்ஸ்பேச்சு,

லண்டன் மே. 2

ஹால்பர்னில் சர். ஜாய்சன் ஹிக்ஸ்பேசுகையில் இங்கிலிஷ்காரர்எங்கிருந்தாலும் அவர்கள் உரிமையைப் பாதுகாக்க சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.

எகிப்திலே 1922ம் வருட அறிக்கைபடி நமக்கு விசேஷ உத்தரவாதங்களும், உரிமைகளுமுண்டு. எகிப்திய சர்க்கார் பிரிட்டனுடன் வேடிக்கை செய்து வருவதாய் தெரிகிறது.

சமீபத்தில் தாராளமான ஒரு உடன்படிக்கைத் திட்டம் போட்டு அதை சார்வாட் பாஷா ஒப்புக்கொண்டிருந்தும், எகிப்து சர்க்கார் அதை அங்கீகரிக்க மறுத்து விட்டனர். தற்போதைய எகிப்திய சர்க்கார் பிரிட்டனின் பொறுமையை சோதிப்பதாக தெரிகிறது. ஆனால் கிரேட்பிரிட்டன் எந்த நாட்டுக்காவது இறுதிக்கடிதம் அனுப்புகிறதானால், அது விஷயமாய் என்ன செய்ய வேண்டுமென்று பிரிட்டன் முடிவான தீர்மானம் செய்துவிட்டதென்றும் அதை தேசமுழுவதும் ஆதரிக்கிறதென்பதும் வெளிப்படை என்று கூறினார்.

கயிரோவில் கலவரம்.

கயிரோ, மே, 2.

எகிப்து சர்க்கார் பதில் திருப்திகரமாயில்லாவிட்டால், பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் அலக்சான்டிரியா போர்ட்செய்ட் துறைமுகங்களுக்குள் இன்றிரவு பிரவேசிக்குமா என்றே எல்லாரும் கேட்கின்றனர் ஜனங்களுக்குள் கிளர்ச்சியில்லை. பொதுக்கூட்ட மசோதா ரத்தாகிவிட்டதென்றே எல்லாரும் கருதுகின்றனர். எகிப்து சர்க்கார் என்னவிதமாய் பதில் கொடுத்தபோதிலும், பிரிட்டிஷ் இறுதிக்கடிதம் மிகவும் திட்டமாய் எழுதப்பட்டிருப்பதால் அதை ஏமாற்ற முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் தான் காரியம்எப்படிமுடியுமோவென்று எல்லாரும் கலவரப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்:

சீன யுத்தம்

சிங்டாவில் வடகட்சியார்

சிங்டா, மே, 2

ஏராளமான வடகட்சிக்காரர் சிங்டாவுக்கு வந்திருக்கின்றனர். அவர்கள் தேசியக்கட்சி சேனைகளைப் பலமாய் எதிர்க்கப் போவதாய்ச் சொல்லப்படுகிறது.

பொதுநல ஸ்தாபனங்களை யெல்லாம் ஜப்பானியர் பாதுகாப்பு செய்கின்றனர்.

வடகட்சி தோல்வி

ரக்பி, மே, 2

ஷான்டங் மாகாணத்திலுள்ள வடலுள்ள வடகட்சி துருப்புகளெல்லாம் மஞ்சள் நதிக்கு வடக்கே வலசை வாங்கிப் போய் விட்டதாக பின்வந்த தந்திகள் கூறுகின்றன. சஹென்பு என்னுமிடத்திலிருந்த சாங்சங் சாங்கின் துருப்புகள் பின்வாங்கியபின் தெஞ்கட்சிதுருப்புகள் அங்குபோய் சேர்ந்திருக்கின்றன.

மே திருநாள் கலகம்

இருவர் கொலை-பலருக்கு காயம்

வார்சா மே 1

மே தினத்தன்று இவ்விடத்திய டவுன்ஹால் மைதானத்தில் சோசலிஸ்ட் கட்சியாரும் பொதுவுடமைக்கட்சியாரும் பொதுக் கூட்டங்கள் நடத்தினதில் கலகம் நேரிட்டு கைத் துப்பாக்கிகளால் குண்டுப் பிரயோகம் செய்யப்பட்டது. 50 பேருக்கு குண்டடி பட்டதில் 2 பேர் மரணமடைந்தனர். மற்றவர்கள் காயமடைந்தனர். போலந்தின் மற்ற இடங்களிலெல்லாம் அமைதியாயிருந்தது. ஆனால் முன்னெச்சரிக்கையாக லெம்பர்க் போலீசார் 70 பொதுவுடமைக்கட்சியாரை கைது செய்தனர்.

இங்கிலாந்தில் கொண்டாட்டம்

லண்டன், மே, 1

மே தினக்கொண்டாட்டம் லண்டனில் அமைதியாய் நடைபெற்றது. ஸ்திரிகளும் சிறு பெண்களும் காக்கி உடையும்சிவப்புகழுத்துப்பட்டையும் தரித்துக்கொண்டுபோனது நூதனகாட்சியாயிருந்தது. ஆண்களிலும் சிலர் காக்கி உடையும் சிவப்பு நெக்டையும் தரித்துக் கொண்டிருந்தனர்

பாரிஸில் போலிஸ் பாதுகாப்பு

பாரிஸ், மே. 1

பாரிசில் விசேஷ போலிஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. ஆனால் மே தினக் கொண்டாட்டக்காரர் ஒழுங்காய் நடந்து கொண்டனர் எல்லா பாங்கிகளும் பெரும்பான்மையான கடைகளும் அநேக தொழிற்சாலைகளும் திறந்திருக்கின்றன. குழப்பம் செய்த சிலர் கைது செய்யப்பட்டனர்.

மாஸ்கோவில் கொண்டாட்டம்.

மாஸ்கோ, மே 1

இங்கு மேதினத்தன்று சர்க்கார் அதிகாரிகள் ஸ்தாநிபதிகள் முன்னிலையில் படைப்பயிற்சி நடந்தது. அதன்பின் ஒரு பெரிய ஊர்வலம் நடைபெற்றது. லட்சக்கணக்கான ஜனங்கள் அதில் கலந்துகொண்டனர்.

சைகிலில் உலகயாத்திரை.

வேறு மூவரின் முயற்சி

லாகூர், மே, 1.

இம்மாதம் மத்தியில் லாகூரி லிருந்து புறப்பட்டு, பம்பாய் பார்சிகள் உலகத்தை சுற்றிய நாளைக்காட்டிலும் குறைந்த காலத்திற்குள் சைகிலில் உலகத்தை சுற்றிவரமுத்தால், ரோஸ்மேயர், பார்க்கர் என்னும் மூன்று வாலிபர்கள் புறப்படப் போவதாய் தெரிகின்றது. அவர்கள் குயிட்டாவிலிருந்து டெஹரான், அங்கோரா முதலியவைகள் மார்க்கமாய் டஸ்டாப்பிற்குச் செல்வார்கள்.-பி. பிரஸ்

பம்பாயில் துணிகரமான திருட்டு

லட்ச ரூபாய் நகை போன மாயம்

போலிசார் திகைப்பு

பம்பாய், மே, 1.

பம்பாய் எஸ்பிளநேட் ரோடிலுள்ள பிரபல நகை வர்த்தகக் கம்பெனியாகிய மார்க்ஸ் அண்டு கம்பெனியில் சென்ற ஞாயிற்றுக் கிழமை சுமார் ஒரு லட்ச ரூபாய் பெறுமான நகைகள் திருட்டுப் போனதன் சம்பந்தமாகக் கட்டடத்திற்குள் சில "பூரி" துண்டுகளும், இரண்டொரு விரல் ரேகைக் குறிகளுந்தவிர வேறு எத்தகைய துப்பும் கிடைக்கவில்லை. இக்களவு ஞாயிற்றுக் கிழமை பிற்பகலிலிருந்து திங்கட்கிழமை காலைக்குள் தான் நடந்திருக்கவேண்டு மெனத் தெரிகின்றது.

இக்கம்பெனி வழக்கம்போல சனிக்கிழமை பிற்பகல் அடைக்கப்பட்டது. ஆனால் அக்கம்பெனியின் சொந்தக்காரரான திரு. பிராக்டர் கடிகாரத்திற்குச் சாவி கொடுப்பதன்பொருட்டு ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆங்கு சென்றதாயும், அப்போது எல்லாம் சரியாயிருக்கக் கண்டதாயும் சொல்லப்பட்டது. ஆயினும் திங்கட்கிழமை யன்று காலை 9-30 மணிக்குக் கம்பெனி திறக்கப்பட்டபோது மிக விலையுயர்ந்த நகைகள் வைக்கப்பட்டிருந்த ஆறு காட்சி பீரோக்கள் உடைக்கப்பட்டு அவற்றிலிருந்த லட்சரூபாய் பெறுமானமுள்ள நகைகள் களவுபோயிருக்கக் காணப்பட்டது. உடனே விஷயம் போலீசாருக்கு அறிவிக்கப்பட்டதும் போலீஸ் டெபுடிகமிஷனர் ஹார்ப்பும், சூப்பரின்டென்டென்டுகள் ஜியோப்ரே, சாப்ஜிரால் முதலியவர்களும், இன்ஸ்பெக்டர்கள் புல், பாஸ்டர் முதலியோரும் அங்கு வந்து சேர்ந்தனர். வெளிக்கதவு பூட்டும் மற்று ஜன்னல் முதலியவையும் பூட்டியது பூட்டியபடியும்சாத்தியது திறக்கப்படாமலும் அப்படியே இருந்ததுடன், எத்தகைய கண்ணாடி, கதவு முதலியவையும் உடைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நான்கு காவற்காரர்கள் அங்கு எப்போதும்காவல் புரிந்து வந்திருப்பதாயும் தெரிகின்றது. இத்தகைய மாயத் திருட்டைக் குறித்துப் போலீசார் ஒன்றும் தோன்றாமல் திகைத்துவிட்டனர். ஞாயிற்றுக்கிழமையன்று காலை அக்கம்பெனி சொந்தக்காரர் கடிகாரத்திற்குச் சாவி கொடுக்கக் கதவைத் திறந்தபோது யாரோ ஒருவன் அவருக்குத் தெரியாமல்உள்ளே நுழைந்து எங்காவதுஒளிந்திருந்துபிறகுஅந்தச்சொத்துக்களை கதவுகளின் இடுக்கின் மூலமாகத் தன் சகாவிடம் கொடுத்தனுப்பிவிட்டு மறுநாள் காலை கதவு திறக்கப்படும்வரை எங்காவது பதுங்கிக் கொண்டிருந்து திங்கட்கிழமையன்று காலை வழக்கம்போல கம்பெனி திறக்கப்பட்டதும் யாருக்கும் தெரியாமல் நழுவியிருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது. கதவுகளைத்தள்ளிப்பார்த்தபோது இரண்டு கதவுகளுக்கும் இடையே சிறிது சந்து ஏற்படுவதைக் கண்டறிந்தனர். போலீசார் இம்மாயத்திருட்டைக் குறித்து விசாரித்து வருகின்றனர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பார் தொகை

இந்தியா சர்க்காரின் கண் மூடி கணக்கு

திரு. எம். ஸி. ராஜாவின் மறுப்பு

அகில இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பார் சங்கத்தலைவர் ராவ்பகதூர் எம். ஸி. ராஜா எம். எல். ஏ. கீழ்க்கண்ட அறிக்கை யொன்றை யனுப்பியிருக்கின்றார்:—

இந்திய சட்ட சபையில் சென்ற பிப்ரவரி மாதம் 23ந் தேதி கல்வி இலாகா செக்ரிடெரி திரு. பாஜ்பாய் சர்க்கார் சார்பாகப் பதிலளிக்கையில் தாழ்த்தப்பட்ட வகுப்பு பிரதிநிதிகள் கூறுவது போன்று அவ்வகுப்பாரின் மொத்த தொகை 600 லட்சம் (6 கோடி) யல்லவென்றும், ஆனல் 280 லட்சம் தான் என்றும் கூறினார். நான் அவரை அதன் சம்பந்தமான கணக்குகளைக் கொடுக்கும்படி நேரில் கேட்டுக்கொண்டதால் அவரிட மிருந்து விவரம் கிடைக்கும் வரை அத்தகைய கண்மூடிக் கணக்கைக் குறித்து மறுத்துப் பத்திரிகைகளுக்கு ஒன்றும் எழுதாமலிருந்து விட்டேன். ஆனால் இக்கண்மூடிக்கணக்கை விண்டர்டன் பிரபுவும் ஒப்புக்கொண்டு நம்பி அதனை ஆதாரமாகக்கொண்டு பொதுமக்கட்சபையில் சிமொன்கள் தார்ட்டிலும், வெல்லாக்கும் கேட்ட கேள்விக்குப் பதிலளித்திருப்பதாகத் தெரிகின்றது. சென்ற ஏப்ரல் 23-ந் தேதி விண்டர்டன் பிரபு பதிலளிக்கையில், சமீப ஜனக்கணக்குப்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தொகை 430 லட்சமிருப்ப

போர்ட் ஜெயின்ட் ஜார்ஜ் கெஜட்.

(1—5—1928.)

மதனப்பள்ளி தாலூக்கா போர்டு தலைவர் திரு. டி. என். நாராயண ரெட்டியார் சித்தூர் ஜில்லா கோவில் கமிட்டிக்கும், பட்டுக்கோட்டை தாலூக்காபோர்டு தலைவர் திரு. ஏ. பி. எல். என். வி. நாடிமுத்துப் பிள்ளை நாகப்பட்டணம் சர்க்கிள் கோவில் கமிட்டிக்கும் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

திரு. அப்பாஸ் அலிகான் சாகேப் பகதூர், எம். எல். ஸி. பார்அட்லா, அவர்கள் அவர்கள் சென்னை சிப் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாக வேலைபார்க்க நியமனம்.

சென்னை சொலிஸிட்டர்ஸ் ஷார்ட் பிரூலைச் சேர்ந்த திரு. எல். செ. பிரூஸ் அவர்களை சென்னை நகருக்கு வெளியே சென்னை மாகாண பப்ளிக் புராஸிகியூட்டராக நிர்வாகசபையோடு கூடிய கவர்னர் நியமித்திருக்கின்றார்.

கோயம்புத்தூர் பெண்கள் ரேஞ்சு உதவி இன்ஸ்பெக்டரஸ் மிஸ் பிலிப் ஸ்மித் அவர்கள் ஈரோடு பெண்கள் ரேஞ்சு உதவி இன்ஸ்பெக்டராசாகவிருக்க உத்தரவு.

உதகமண்டலம்ஆஸ்பத்திரிவேடிஅஸிஸ்டெண்டு சர்ஜன் ஸ்ரீமதி எம். பி. கார்டனுக்கு எப்ரில் மாதம் 11-ந் தேதி முதல் 1-மாதம் ரஜா.

ராஜா சர் ராமசாமி முதலியார் ஆஸ்பத்திரி மெடிக்கல் ஆபீசரும் ராயபுரம் மெடிகல் ஸ்கூல் உபாத்யாசகருமாகிய இ. பி. வெங்கட்டகிரி அவர்களுக்கு மே மாதம் 8-ந்தேதி முதல் 20.நாள் ரஜா.

சென்னை வைத்திய கலாசாலை உதவி சர்ஜன் திரு. பி. வி. பிரான்சிஸ் அவர்கள் ராஞ்சி ரேடியம் இன்ஸ்டிடேட்டில் 3 மாதம் பயிற்சிபெற உத்தரவு.

திரு. கே. எம். மதுல்லா அவர்கள் ரஜாவிலிருந்து வந்து சேர்ந்ததும் ஜெனரல் ஆஸ்பத்திரி எக்ஸ்ரே இன்ஸ்டிடூட்டில் 6 மாதம் பயிற்சிபெற உத்தரவு

திரு. எஸ். ஏ. நாகராய முதலியார் ரஜாவிலிருந்து திரும்பிவந்ததும் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூக்கா முனிசிபல் ஆஸ்பத்திரிக்கு மாற்றம்.

திரு. எம். பி. மாரிஸ் எல். எம். எஸ். எல். ஆர். ஸி. பிக்கு 1 மாதம் 15 நாள் ரஜா.

அநந்தபூரிலிருக்கும் திரு. வீ. நரசிம்மம் எல் எம். எஸ். அவர்கள் விசாகப்பட்டணம் வைத்திய கலாசாலைக்கு மாற்றம்.

தா..ம், அவற்றுள் 290 லட்சம் தீண்டாதாரென்றும் கூறியதாகத் தெரிகின்றது. இந்தியா ஆபிஸாரும் உண்மையுணராது திரு. பாஜ்பாயின் கண்மூடிக்கணக்கையே ஒப்புக்கொண்டுவிட்டதற்கு வருந்துகின்றேன். 1919-ம் வருடம் பிப்ரவரி 22-ந் தேதி வெளியான வாக்குரிமைக் கமிட்டி அறிக்கையின்படி பல்வேறு மாகாணங்களிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் (1911-ம் வருடத்து ஜனக்கணக்குப்படி) தொகை வருமாறு:—

சென்னை 6·37 மிலியன், பம்பாய் 5·7 மிலியன், வங்காளம் 99·4 மிலியன், ஐக்கிய மாகாணம் 10·11 மிலியன், பஞ்சாப் 1.73 மிலியன், பீஹார் ஒரிஸா 9.38 மிலியன், ஐக்கிய மாகாணம் 3.76 மிலியன் அஸ்ஸாம் 29 மிலியன் ஆக மொத்தம் 42-15 மிலியன். (மிலியனுக்கு பத்துலட்சம்)

1921-ம் வருடத்து ஜனக் கணக் கணக்கின்படி தீண்டப்படாத மக்களின் தொகையைக் குறித்து 1911ம் வருடத்துஅறிக்கையில் 3.06 மிலியன்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவ்வாறே 1921 ஜனக்கணக்குப்படி வங்காளத்திற்கு 11.5 மிலியன்களாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. மற்ற மாகாணங்களில் ஜனத்தொகை அதிகரித்திருப்பதை நீக்கிப் பார்த்தபோதிலும் கூட 1921ம் வருடத்து ஜனக்கணிதப்படி பம்பாய், வங்காளம், மத்திய மாகாணம் முதலிய மூன்று மாகாணங்களும், 1911 வருடத்திய அறிக்கைப்படி மற்றை மாகாணங்களின் தொகைகளும் சேர்ந்து இந்தியா முழுதுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பார் தொகை 52 1 மிலியன்களாகின்றன. இதனால் திரு. பாஜ்பாய் எடுத்துக்காட்டிய கணக்கு முற்றும்கண்மூடிக் கணக்கென்பது நன்கு விளங்கும்.

அலகாபாத் லிவர்பூல் பிரசின் சொந்தக்காரர் வ. டபிள்யூ. கிரோரோ என்ற ஐரோப்பியர் விடியுருக்கு திருடியதாகக் குற்றஞ் சொட்டப்பட்டு இன்று தீர்ப்பு கூறப்பட்டது. இவர் ஒருவருக்கு விற்ற மோட்டார் வண்டியை அவரது உத்திரவில்லாமல் அப்புறப்படுத்தி விட்டார் என்று சொல்லப்பட்டதற்காக 200 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார். இவருக்கு உதவியாக விருந்த இருவர்களுக்கு தலைக்கு 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அ. பிரஸ்

நீதிமன்ற நிகழ்வு.

அனந்தாழ்வாரின் ஒழுங்கீனம்.

வக்கீல்தொழிலிலிருந்து நீக்க உத்தரவு.

சென்னை, மே, 3.

முறை தவறி ஒழுங்கீனமாக நடந்து கட்சிக்காரர்கள் பண விஷயத்தில் தொழில் முறைக்கு மாறாக நடந்ததாகப் பலவாறும் லெட்டர்ஸ் பேடெண்டின் பத்தாவது, பிரிவின்கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்த சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் டி. வி. எ. அனந்தாழ்வார் வழக்கில் இன்று நீதிபதிகள் பிலிப்ஸ், தேவதாஸ், பீஸ்லி ஆகிய மூவருமடங்கிய முழு பெஞ்சு தீர்ப்பு சொல்லப்பட்டது. இவ்வழக்கு கடந்த மூன்று நாட்களாக முழுபெஞ்சு நீதிபதிகளின் முன் விசாரிக்கப்பட்டு முடிவில் இன்று முழுபெஞ்சர் நீதிபதிகள் சார்பாக நீதிபதி பிலிப்ஸ் தீர்ப்பு சொல்லுகையில் எதிரி குற்றம் செய்திருப்பதாகத் தீர்மானித்து எதிரியை ஹைகோர்ட்டு வக்கீல்களின் பெயர் ஜாபிதாவிலிருந்து நீக்கி விடப்பட வேண்டுமென்று உத்தரவிட்டார்.

ஹைகோர்ட்டு விடுமுறை

கோடை நாட்களுக்காக சென்னை ஹைகோர்ட்டுக்கு மேமாதம் 4ந் தேதியிலிருந்து ஜூலை 14ந் தேதிவரை இருதினங்களுமுட்பட விடுமுறை விடப்பட்டிருப்பதால் நாளை ஹைகோர்ட்டு சாத்தப்படுமென்றும், இதற்குமுன் அறிவிக்கப்பட்டது போல இம்மாதம் 7ந் தேதி யல்லவென்றும் தெரிகிறது.

மோதிர மோசடி வழக்கு

எதிரிகளுக்கு 12 ரூபாய் அபராதம்

சென்னை, மே, 3.

கிருஷ்ணசாமி செட்டி என்னும் நகை வர்த்தகரிடமிருந்து இரவலாக வாங்கிச் சென்ற மோதிரத்தை மோசம் செய்து அபகரித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த மொகிதீன் என்பவனுக்கு ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட்டில் இரண்டாவது பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் ராவ் சாகிப் என். கேலுநாயர் நேற்று முன்தினம் ரூபாய் 12 அபராதம் விதித்தார்.

ஜார்ஜ் டவுன் நாகமணித் தோட்டத் தெருவில் வசிக்கும் நகை வியாபாரியான கிருஷ்ணசாமி செட்டி வீட்டில் குழந்தைகளுக்கு வைத்தியம் செய்து கொண்டு வந்த எதிரிவாதியிடம் ஒரு மோதிரத்தை இரவலாக வாங்கிச் சென்று பல மாதங்களாகச் சாக்குப்போக்குச் சொல்லி வந்து முடிவில் வாதி வர்புறுத்தியதால்நகை கிராமத்திலிருப்பதாயும்? நான்கு மாதங்களுக்குள் சேர்த்து விடுவதாயும் சொல்லி காகிதமொன்று எழுதிக்கொடுத்த எதிரி பிறகு அகப்படாமல் காணாமற்போய் விட்டதாயும், சுமார் பத்துநாட்களுக்கு முன் வாதி எதிரியைத் தற்செயலாக தங்கசாலைத் தெருவில் சந்தித்து உடனே பறைச்சேரிக் கடை போலீஸில் ஒப்புவித்ததாயும் சொல்லப்பட்டது. எதிரி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன், தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டதால் மாஜிஸ்ட்ரேட் எதிரிக்கு ரூபாய் 12 அபராதம் விதித்தார்.

கள்ள அபினி இறக்குமதி

முஸ்லிம் இளைஞனுக்கு ஒரு வருடக் கடுங்காவல்

பம்பாய், மே, 1.

ஜலால் அமத் என்னும் முஸ்லிம் இளைஞன் கள்ளத்தனமாக 7 பவுன் 35 தோலா அபினியை லைசென்ஸ் இல்லாமல் வடமேற்கு பாஸிஞ்சரில் கொண்டு வந்து விக்டோரியா டெர்மினஸ்டேஷனில் இறக்கியதாக கலால் இலாகா இன்ஸ்பெக்டர் ஹட்சனால் குற்றம்சாட்டப்பட்ட வழக்கு சென்ற திங்கட்கிழமையன்று பம்பாய் மூன்றாவது பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் திரு. தஸ்தூர் முன்விசாரணைக்கு வந்தபோது மாஜிஸ்ட்ரேட் எதிரி இதற்கு முன் தண்டனையடைந்திருப்பதை முன்னிட்டு ஒருவருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

எதிரி சில தினங்களுக்கு முன் இந்தூரிலிருந்து பம்பாய்க்கு வந்ததாயும், விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனிலிறங்கிச் செல்லும்போது ஒரு போலீஸ் காரனைக்கண்டு தான் வைத்திருந்த படுக்கையைக் கீழே போட்டுவிட்டுச் சென்றதாயும், சந்தேகத்தினால் அவ்விளைஞனை நிறுத்தி படுக்கையைச் சோதிக்கப்பட்டபோது அதற்குள் மேற்குறிப்பிட்ட அளவுக்கு அபினி மறைத்து வைத்திருக்கக் காணப்பட்டதாயும் சொல்லப்பட்டது. எதிரி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு இந்தூரிலுள்ள ஆமத்நூர் என்பவன் அதனை பம்பாயுக்குக் கொண்டுவரும்படிசொல்லியதாகக் கூறி இதற்கு முன்தான் இத்தகைய குற்றத்திற்காகத் தண்டனையடைந்திருப்பதையும் ஒப்புக்கொண்டான். மாஜிஸ்ட்ரேட் எதிரி குற்றம் செய்திருப்பதாகத் தீர்மானித்து ஒருவருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

டெப்டி கலெக்டர் மோசடி.

எதிரியை ஜாமீனில் விடப்பட்டது,

லக்ஷ்மணபுரி, மே, 1.

ராணுவ உத்தியோகஸ்தர்களின் உபகாரச் சம்பளங்களின் பட்டுவாடா சம்பந்தமாக 1925, 26, 27-ஆக மூன்று வருடங்களில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சுமார் ஒரு லட்ச ரூபாயை மோசம் செய்து அபகரித்ததாக இ, பி. கோ. 120, 509-வது பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு பேத்பூர் ரயில் ஸ்டேஷனில் இரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டரால் கைதிசெய்யப்பட்ட ரேபெரெல்லி டெப்டி கலெக்டரும் வாண்டு டிரஷரி ஆபீஸருமான ராய் சாகிப் பண்டிதபேனி பிரசாத் திவாரியை லட்சுமணபுரி ஜில்லா ஜட்ஜ் 45000 ரூபாய் ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டிருக்கின்றார். இதற்குமுன் ரேபெரில்லி சிப்பாய்களின் போர்டு காரியதரிசியான சுபேதார் சுராஜ் பிரசாத் அஹஸ்தியையும் சில குமாஸ்தாக்களையும் கைதிசெய்யப்பட்டிருந்தது. சுபேதாரை ஜாமீனில்விடப்பட வேண்டுமென்று மனு கொடுக்கப்பட்டிருந்த போது ராய்சாகிப் பண்டித திவாரியை ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஜாமீனில் விட மறுத்துவிட்டார் என்னும் காரணத்திற்காகவே சுபேதாரின் ஜாமீன்விடுதலை மனுவையும் லக்ஷ்மணபுரி பிரதம கோர்ட்டார் நிராகரித்து விட்டனர். ராய்சாகிப் திவாரியின் சார்பாக ஜில்லா ஜட்ஜ்முன் ஜாமீன் விடுதலை மனு தாக்கல் செய்த பாரிஸ்டர் ஹரிஹரநாத் மிஸ்ரா எதிரி டெபுடி கலெக்டராயும், பட்டதாரியாயும் பாராட்டத் தக்கவேலைகள் செய்திருப்பவராதலால் இக்குற்றம் சாட்டப்பட்டதன் சம்பந்தமாக ஓடிவிட மாட்டாரென்றும், அன்றியும் எதிரியில்லாமல் டிபென்ஸ் தரப்பு வக்கீல் ஒன்றையும் தெரிந்து கொள்ள முடியாதென்றும், ஏனெனில் இவ்வழக்கில் 200 பிராஸிக்யூஷன் தரப்பு சாட்சிகளும், 14000 எக்ஸிபிட் பத்திரங்களுமிருப்பதனால் எதிரி தான் டிபென்ஸ் வழக்கை விளக்க முடியுமென்றும் எடுத்துக் காட்டினார். இம்மனுவை எதிர்த்த பப்ளிக் பிராஸிக்யூடர் திரு. கபர்நாத்லி, சட்டத்திற்கு எவ்வளவு கௌரவஸ்தராயிருந்தாலும் தாரதம்மியம் கிடையாதென்றும், எதிரி சில செல்வாக்குள்ள சாட்சிகளையும் கலைக்க முயன்றிருப்பதாயும், ஆதலால் எதிரியை ஜாமீனில்விடாமலிருக்கவேண்டியது அவசியமென்றும் எடுத்துக் காட்டினார். முடிவில் ஜில்லா ஜட்ஜ் எதிரியை 45000 ரூபாய் ரொக்க ஜாமீன் மீது விடுதலை செய்ய உத்தரவிட்டிருக்கின்றார்.

மாஜிஜட்ஜின் சங்கடம்.

சிவில் டிக்ரியால் கைதியானார்.

சிகந்தராபாத், மே, 1

ஹைதராபாத்தை கோர்ட்டு மாஜிஜட்ஜான நவாப்பருக் யார் ஜங் பகதூர் மீது ஹைதராபாத் ரெஸிடென்ஸி பஜாரிலுள்ள சௌகார் சீதாராம் 3660 ரூபாயுக்கு சிவில் தாவாசெய்து டிக்ரிபெற்றிருந்ததன் சம்பந்தமாக சென்ற ஏப்ரல்30ந்தேதியன்று காலை சிகந்திராபாத் ரயில்வே ஸ்டேஷனில் பெய்லிப்டிக்ரியை நிறைவேற்றிக் கைதி செய்தார். உடனே அவரை சிகந்தராபாத்ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜ் முன் ஆஜர் செய்யப்பட்டது. நவாப்சாகிப் தாம் தன் கடனைத்தீர்த்துவிடுவதற்கு இரண்டு நாள் வாயிதா கொடுக்கும்படி ஜட்ஜை கேட்டுக் கொண்டார், ஜட்ஜும் அதற்கிணங்கி அதுவரை அவர் கோர்ட்டில் தற்காலிகமாகக் காவலிலிருக்க வேண்டுமெனத் தெரிவித்தார். நவாப் அலகாபாத்துக்குப் பிரயாணமாகிச் செல்லும் போது அவரை சிவில் வாரண்டில் பிடித்ததாகத் தெரிகிறது.

இந்திய அரசியல் கமிஷன்.

சர். ஜான் சைமன் கருத்து.

லண்டன், மே, 1.

ஹெக் மாண்ட்விக் தேர்தல் தொகுதியில் சர்ஜான் சைமன் பேசுகையில் நான் ஒரு முக்கிய தேச காரியத்தில் ஈடுபட்டிருக்கையில் எனது ஸ்தானத்துக்கு வேறு அபேட்சகரை நிறுத்துவ தில்லையென்று நான் சர் வேட்டிவ் கட்சியார் தீர்மானித்தற்காக மிகவும் சந்தோஷம். இந்த கமிஷன் வேலை செய்வது கட்சி நலத்துக்காகவல்ல. ஆனல் இந்தியாவில் பிரிட்டிஷாருக்குள்ள உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்காகவே கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தியரின் ஒத்துழைப்புடனும் மனப் பூர்வமாய் கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்தால் இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்துக்கு சிறந்த வழி கண்டுபிடிக்க முடியும். கமிஷனில்வேலை இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. கமிஷன் வேலை விஷயமாயுள்ள கஷ்டங்களைக்குறைத்துச்சொல்லஎனக்குஇஷ்டமில்லைஆனல்மூன்று மாதகாலமாய்கஷ்டப்பட்டுசுற்றுப் பிரயாணம் செய்துஆராய்ச்சிசெய்ததில் கமிஷன்மெம்பர்களுக்குள் பூரண நம்பிக்கை யுண்டாக்கி யிருக்கிறது கமிஷன் மெம்பர்களுடைய முயற்சியையும் அபிப்பிராயத்தையும் தேசத்திலுள்ள ஒவ்வொரு கட்சியாரும் ஆதரிக்கின்றார்களென்று கூறினர்.

லண்டனில் விசாரணை

லண்டன் மே 1

இரண்டு வாரம்போல இளைப்பாறியபின் இந்திய அரசியல் கமிஷன் வேலை ஆரம்பிக்குமென்று தெரிகிறது. ஏப்ரில் 20ந்தேதி ஞாயிற்றுக்கிழமை கமிஷன் மெம்பர்கள் பிரிந்து போயினர். அவர்கள் மீண்டும் இம்மாதம் 9ந்தேதி கமிஷன் ஆபீஸில்அந்தரங்கமாய் சபைகூடி இந்தியாவிலிருந்து வாராவாரம் வந்து கொண்டிருக்கும் யாதாஸ்துகளை எப்படி ஆராய்ச்சி செய்வதென்று முடிவு செய்வார்கள்.

பிரிட்டிஷ் வரவு செலவு

கிரோசினுக்கு வரியில்லை.

லண்டன் மே 1

இன்று காமான்ஸ் சபையில் வரவு செலவு திட்டம் விவாதத்துக்கு வந்தது. கிரோசின் எண்ணெய்க்கும் பாரபினுக்கும் வரிவிதிக்கப்படாதென்று தீர்மானிக்கப்பட்டது. தேயிலை வரியை 4 பென்னியிலிருந்து ஒரு பென்னியாகக் குறைக்கவேண்டுமென்று தொழிற்கட்சியார்கொண்டுவந்த திருத்தப பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

பெட்ரோல்வரி உறுதிப்படுத்தப்பட்டது.

எகிப்திய மசோதா.

சர் சாம்பர்லேய்ன் கருத்து.

லண்டன், மே, 2

பிரிட்டிஷ் சர்க்கார் எகிப்து சர்க்கார் கடிதத்துக்குகொடுத்திருக்கிற பதிலிலே எகிப்திய சர்க்கார் சொல்வதெல்லாம் ஒப்புக்கொள்ளத் தக்கதுதான். ஆனல் பொதுக்கூட்ட மசோதாவை நிறைவேற்ற மீண்டும் முயற்சிசெய்யப்பட்டால் அல்லது அதேமாதிரி சட்டம் செய்ய முயற்சித்தால் பிரிட்டன் அதை ஆட்சேபிக்க வேண்டி நேரிடும். 1922 ம் வருட அறிக்கையைப்பற்றி இனி விவாதிக்கவே முடியாது என்று கூறியிருக்கிறது என்று சர் ஆஸ்டன் சாம்பர்லெய்ன் காமன்ஸ் சபையில் கூறினர்,

யுத்தக்கப்பல்கள் நிறுத்தப்பட்டன.

இதனால் சில பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நினைத்திருந்த உத்தரவுகளை நிறுத்தியாய் விட்டது என்றும் அவர் கூறினர்.

ஆஸ்டிரேலியா அங்கீகரிப்பு.

கான்பெரா, மே 2

பிரிட்டன்எகிப்துக்கு இறுதிக்கடிதம்கொடுத்ததை ஆஸ்டிரேலியமந்திரிசபைஅங்கீகரித்து விட்டதாக முதல்மந்திரி புரூஸ் ஆஸ்டிரேலிய பார்லிமெண்டில் கூறினர்.

தென் துருவ பிரயாணம்.

கமான்டர் பர்டின் முயற்சி.

ஆஸ்லோ மே 2

கமான்டர் பர்ட் தென் துருவத்துக்குச் செல்லுவதற்காக சாம்பயன் என்ற 52 டன்னுள்ள ஒரு கப்பலை வாங்கியிருக்கிறார்.

இந்தக் கப்பலில் கமான்டர் பர்டின் விமானமும் கொண்டு போகப்படும். நியு ஜிலாந்துக்கு 3,000 மைல் தூரத்துக்கப்பாலுள்ள பனிக்கட்டிம் வரையில் அந்தக் கப்பல் செல்லும். அதில் பாய்களும் மோட்டர் என்ஜினும் சேர்த்து கட்டப்பட்டிருக்கின்றது.

கமான்டர் பர்ட் தம்முடன் போவதற்காக பல நார்வேக்காரரை தெரிந்து கொண்டிருக்கிறார்.

ஜினிவா இந்திய தூது.

லார்ட் லிட்டன் தலைவர்.

லண்டன் மே 2

சென்ற வாரம் காமன்ஸ் சபையில் கூறினபடி இந்திய மந்திரியும் இந்திய சர்க்காரும் ஜினிவாவுக்கு சர்வ தேச சங்கத்துக்கு போகும் இந்தியத்தூதுக்கு ஒரு தலைவர் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். லார்ட் லிட்டன் தலைவராக தெரிந்து கொள்ளப்படுவாரென்று பிரிபிரஸ் லண்டன் நிருபர் கூறுகிறார்.

பின்வந்த செய்தி.

லண்டன், மே 2

லார்ட் லிட்டன் இந்தியத் தூதின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மே தின கலகம்

ஒருவன் மரணம்—பலருக்குக் காயம்.

வார்சோ,மே 2

மே தின கொண்டாட்ட கடைசி நாட்களில் பல மாகாண பட்டணங்களில் கலகங்கள் நேரிட்டன. லோட்ஜ் என்னுமிடத்தில் பொதுவுடமைக் கட்சியார் நகர மண்டபத்தைக் கைப்பற்றி சோவியட் கொடியை ஏற்றினர்.

சோஸ்னோவிட்ஜ் என்னுமிடத்தில் நகர மண்டபத்தைக் கைப்பற்ற முயற்சித்த பொதுவுடமைக் கட்சிக் கூட்டத்தின் மீது போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் ஒருவன் கொல்லப்பட்டான். பலர் காயப்பட்டனர்.

கீழ் ஆப்பிரிக்கா சர்க்கார் யோசனை.

இந்தியர் மறுப்பு.

நைரோபி, மே 3

கீழ்ஆப்பிரிக்க சட்டசபையில்இந்தியப் பிரதிநிதிகளை நியமிக்கப் போவதாக சர்க்கார்கூறிய யோசனையை இந்திய சமூகத்தார் மறுத்து விட்டார்கள்.

"தேசோபகாரி" வழக்கு.

விசாரணை விபரம்.

இரங்கூன், மே, 2

"தேசோபகாரி" என்ற தமிழ் வாராந்தரப் பத்திரிகையின் உதவி மானேஜர் செல்லம் பிள்ளை தம் பத்திரிகையில் "நாம் நாய்களா" என்ற கட்டுரை எழுதியதன் சம்பந்தமாக அவர் மீது தொடரப்பட்டுள்ள ராஜ நிந்தனைக்குற்றமுள்ள வழக்கின் விசாரணை இன்று காலை ஜில்லாமாஜிஸ்டிரேட்டால்நடைபெற்றது. எதிரிகோர்ட்டுக்குவரவில்லை. எதிரியின்வக்கீல் வைத்தியரின் நற்சாட்சிப் பத்திரம் ஒன்றைக் காட்டி எதிரிக்கு வயிற்றுப் போக்கானதால் அவர் வர இயலாமலிருக்கிறதென்று கூறினர். உடனே மாஜிஸ்டிரேட் எதிரியை வரவழைத்தார்.

ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட் சிப் ளார்க், மார்ச்சு மாதம் 20ந் தேதி வரையில் இந்த பிரஸ் பப்ளிஷர் கே. என். சுப்பைய்யா நாயுடு ஓடிப்போய் விட்டாரென்று கூறினர். பிறகு சி. ஐ. டி, போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மேத்தா அவர்கள் ஜெனவரி மாதத்தில் மாந்தலேயில் நடைபெற்ற இந்து சபை மகாநாட்டுக்கு வந்திருந்த இரங்கூன் பிரதிநிதிகளின் ஜாப்தாவில் திரு. சுப்பையா நாயுடுவின் பெயரும் அடங்கியிருந்தது. மாந்தலே நாஷனல் ஹைஸ்கூல் பர்மியமாணவன் உட்பட 8 சாட்சிகள் இன்று விசாரிக்கப்பட்டனர். இத்துடன் வழக்கை மே மாதம் 15ந் தேதிக்கு ஒத்திவைத்துக் கொள்ளப்பட்டது.

அரசப் பிரதிநிதியின் சுற்றுப் பிரயாணம்.

ஜப்பல் சமஸ்தானத்துக்கு விஜயம்.

அரசப்பிரதிநிதி முகாம், மே, 2

மேன்மை தங்கிய அரசப்பிரதிநிதி அவர்கள் சென்ற திங்கட்கிழமையன்று சான்காரைக் கடந்து ஜப்பல் சமஸ்தானத்துக்குச் சென்றனர். அப்போது அவர் ஜப்பல் ராஜாவாலும், ஹில் ஸ்டேட்ஸ் சூப்பிரிண்டெண்டாகிய திரு. சாலிஸ்பரியும் எதிர் கொண்டு வரவேற்றனர். உடனே ஜப்பல் ராஜா அவர்கள் அரசப்பிரதிநிதிக்கு 1921 ம் வருடம் நடைபெற்ற நெருப்பு விபத்தால் ஏற்பட்ட பெரும்பாகத்தைக் காண்பித்தார். அரசப்பிரதிநிதி அவர்கள் மிகவும் ஊக்கமாக அப்பகுதிகளைப் பார்வையிட்டார்—

இன்று அரசப்பிரதிநிதி சாராஹனுக்குச் செல்லுவார். இவர் நாளைய தினம் சருக்குச் செல்லுவார். இவர் சனிக்கிழமை மாலையில் சிம்லா வந்து சேர்வார்.

அ. பிரஸ்.

திருவண்ணமலை.

ஆதிதிராவிடர்கள் ஐக்ய சங்கம்.

கண்ணப்பருக்கு வாழ்த்து.

இந்நகர் கோவில் அதிகாரிகள் மீது "திராவிடன்" ஆசிரியர் சனகசங்கர கண்ணப்பர் அவர்களால் தொடுக்கப்பட்டிருந்த வழக்கானது சென்ற ஒரு வருஷம் 4 மாதகாலமாக நடந்து வந்து 30-4-28 ல் எதிரிகளான கோவில் குருக்களுக்கு ரூபாய் 100 ம் மானேஜர் ராமநாத சாஸ்திரிக்கு ரூ 100 ம் ஆக 200 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அன்றியும், திருவாளர் கண்ணப்பர் அவர்களுக்கு ரூ 100 காம்பென்சேஷனும் எதிரிகளால் கொடுக்கும்படி தீர்ப்பு செய்யப்பட்டது. கண்ணப்பர் அவர்கள் நாயுடு குலத்தைச் சேர்ந்தவர் என்று, தெரிந்திருந்தும் ஆதிதிராவிடர்களுக்கு உழைப்பதால் பொருமை கொண்ட பார்ப்பனர்கள் அன்னவரை ஆதிதிராவிடர் என்றும் கோவிலுக்குள் செல்ல உரிமை அற்றவர் என்றும் சொல்லி கோவிலுக்குள் சென்ற போது கதவை சாத்தி விட்டனர். திரு. கண்ணப்பர் அவர்கள், ஆதிதிராவிடர்களும் கோவிலுக்குள் செல்ல உரிமை உடையவர் என்பதை நிரூபிக்கவே இவ்வழக்கைத் தொடுத்து இஞ்சித்தேனும் மனம் தளராது வழக்கை நடத்தி வந்தனர். பார்ப்பனர்களின் நயவஞ்சக சூட்சியையும் தாங்கள் பிர்மாவின் நெற்றியில் பிறந்தவர் ஆனதால் (பிராமணத்திகள் எந்த வழியாய் பிறந்தார்களோ?) பெரிய ஜாதிகள் என்று ஊர் சொத்துகளையும் சுவாமி சொத்துகளையும் திருடித்தின்று ஏப்பமிட்டு வந்ததையும் சகியாத ஸ்ரீ அருணசலீஸ்வரர் நமது கண்ணப்பர் சார்பாக நின்று அபராதத்துடன் அவர்களை அவமானமும் படுத்தி விட்டார். இது விஷயமாய் இந்நகர் நான்கு சேரிகளில் உள்ள ஆதிதிராவிடர்களும் அருந்ததி சபையாரும் திருவாளர் கண்ணப்பர் அவர்களை பஜனையுடன் எதிர்கொண்டு அழைத்து பெரிய ஆதிதிராவிட தெருவில் பெரியதோர் கூட்டம் கூட்டப்பட்டது. அது சமயம் உபாத்தியாயர் ஆர். ஆறுமுகம்பிள்ளை அவர்களால் திருவாளர் கண்ணப்பருடைய அரிய பெரிய ஊழியங்கள் மனோதைரியம் முதலியவைகளையும் நன்றாய் விளக்கிக் கூறியப்பின் கண்ணப்பர் அவர்களால் அரியதோர் உபந்நியாசம் செய்யப்பட்டபிறகு அவர் ஏராளமான கூட்டத்துடன் ரயில் ஸ்டேஷன் வரைசென்று வழிகூட்டி அனுப்பப்பட்டார். என்று சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

பல்கேரியாவில் பூகம்ப சேதம்

70 பேருக்கு காயம்

சோபியா மே 2,

வட பல்கேரியாவில் பலத்த புயல்காற்றடித்து ஸ்டேர் ஜாகோர் என்ற இடத்தில் வீட்டுக் கூரைகளும் ஒரு மசூதியும் சேதமாயின. பூமியதிர்ச்சியினுல்சங்கடப்பட்டிருந்த ஜனங்கள் இந்தப் புயலினால் மிகவும் கலவர மடைந்திருக்கின்றனர். 70 பேர் காயமடைந்தனர்.

பிரிட்டிஷ் இந்தியா, ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்.

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

மதராஸிலிருந்து ரெங்கூனுக்கு கப்பல் பிரயாணம்

(காலை 10 மணிக்கு)

" எரின்பூரா	4—5—28
" எக்மா	11—5—28

மதராஸிலிருந்து ஸ்ட்ரெயிட்ஸுக்கு கப்பல் பிரயாணம்

(மாலை 4 மணிக்கு)

டயிரியா	11—5—28
ரோண	18—5—28

இதர விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

பின்னி & கோ, மதராஸ் லிமிடெட்,

(4) ஏஜெண்ட்ஸ் மதராஸ்.

திராவிடன்

சென்னை 1928 மே 3

செங்கற்பட்டு ஜில்லாபோர்டும் கிராமசீர்திருத்தமும்.

சென்ற சனிக்கிழமை நடைபெற்ற செங்கற்பட்டு ஜில்லா போர்டு கூட்டத்தில் கிராம வாசிகள் முன்னேற்றத்துக்கு அடிப்படையானதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது பற்றி நாம் மகிழ்ச்சிப்பெருக்கடைகின்றோம். அக்கூட்டத்தில் "கிராமச் சீர்திருத்தச் சங்கம்" என்றதொரு சங்கம் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டது போற்றத்தக்கதாகும். இச்சங்கத்தின் நோக்கங்கள்

(1) கிராம வாசிகளின் தற்கால தாழ்ந்த நிலையை மேம்பாடுறச் செய்து, அவர்கள் செல்வத்தைப் பெருக்கிச், சுக வாழ்வு வாழச்செய்தல்.

(2) ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப் பஞ்சாயத்துக்கள் நிறுவி, கிராம வாழ்க்கையை சுகமுறச் செய்தல்,

(3) கிராம வாசிகளின் வறுமையைப் போக்கி, கிராமப் பெண்மக்களின் தற்கால இழிந்த நிலையைச் சீர்திருத்தி மேம்பாடுறச் செய்தல்"

என்பனவாம். இச்சங்கத்தையும் இச்சங்கத்தின் நோக்கங்களையும் நாம் முழுமனதுடன் ஆதரிக்கின்றோம். செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் எம். கே. செட்டியார் அவர்கட்கு கிராம வாசிகளின் முன்னேற்றத்தில் மிகக் கவலையுண்டு என்பதை நாம் அறிவோம். ஆகையினாற்றான் அவர் இப்பொழுது கிராமச் சீர்திருத்தச் சங்கம் ஒன்றும் நிறுவியுள்ளார்.

இச்சங்கத்தின் நோக்கங்களெல்லாம் மிக மேம்பட்டவை என்று நாம் சொல்லவும் வேண்டுமோ? இப்பொழுது நமது கிராம வாசிகளின் தாழ்ந்த நிலையை நோக்க நோக்க யார்தான் கண்ணீர் விடாதிருக்க முடியும்? கிராமவாசிகள் படிப்பில்லாமல், பிழைக்கும் வகை தெரியாமல், உழுத நிலத்தையே உழுதுகொண்டு, அரை வயிற்றுக் கால் வயிற்றுக் கஞ்சியுடன் உயிர் வாழ்கின்றார்கள். இவர்கள் உலகம் எப்படி நடைபெறுகின்றது; என்ன மாறுதல்கள் நாடோறும் நிகழ்கின்றன என்பதே தெரியாத கிணற்றுத் தவளைகளாக விருக்கின்றார்கள். கிராம வாசிகளில் பெரும்பான்மையோர் ரயில்களையும் மோட்டார்கார்களையும் கண்டால் பூதமோ, சாத்தானோ என்று இன்னும் பயப்படுகின்றார்கள் என்றால், நம் கிராமவாசிகளின் நிலையைக் கண்டு நாம் வெட்கப்படாது இருக்கவும் முடியுமோ? கிராமவாசிகளுக்குப் படிப்பென்பதே கிடையாது. 100இல் 99 பேர் அங்கோ! கையெழுத்தும் போடத்தெரியாதவர்களாகவே இருக்கின்றார்கள். இதனால் நம் நாட்டில் கிராமவாசிகள் யாவரும் உத்தியோகஸ்தர்கள் என்றால் நடுங்குகின்றார்கள்; ஏதோ கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்த ஒரு புரோகிதனுக்கு அடிமைப்பட்டு, அவன் சொல்லின்படி ஆடுகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

இனி இவர்கள் படிப்பில்லாதவர்களாய் இருக்கின்றபடியால் உழுது பயிர் செய்வதைத்தவிர வேறு ஒன்றுந்தெரியாது. உழுது பயிர்செய்வதிலுங்கூட பழைய குருடிகளாகவே இருக்கின்றார்கள். புது வழிகளைப் பின்பற்றுகின்றார்களில்லை! மற்றும் நில வருமானத்தைக் கொண்டு, எத்தனை மக்கள் தான் உயிர்வாழ முடியும்? பாட்டன் வயிறு வளர்த்துக் கொண்டிருந்த அதேநிலத்தில் அவன் மக்களும், அவன்பேரன்மார்களும், அப் பேரன்மார்களின் பிள்ளைகளும் அப் பிள்ளைகளுக்குப் பிள்ளைகளும், உழுது பயிர்செய்து வயிறு வளர்க்க வேண்டுமாயின் அது எப்படி முடியுமென்று கேட்கின்றோம். ஆகையினாலன்றோ நம் கிராமமக்கள் வேறுவகை பிழைக்கும் வகைதெரியாது ஆடுமாடுகள்போன்று மக்ளைமக்களையாய் இலங்கை, மலேயா, பிஜி முதலிய தோட்டங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றார்கள். இக்கொடுமை ஒழிந்து கிராமவாசிகள் செழிப்பாய் வாழ்ச்சியுடன் வறுமை இன்றி அறிவுடன் வாழவேண்டுமாயின், செங்கற்பட்டு ஜில்லா போர்டார் தீர்மானத்த வண்ணம் மேலே கூறிய நோக்கங்களுடன் அமைக்க கிராமசீர்திருத்தச் சங்கம் ஏற்படல் வேண்டும்.

மற்றும் இச்ஜில்லா போர்டார் ஒவ்வொரு கிராமத்திலும் வாசகசாலைகளும் புத்தகசாலைகளும், திறந்து இப்புத்தக சாலைகளில் பத்து ரூபாய் சம்பளத்தில் ஒரு வாசிப்போரை நியமனம் செய்ய முடிவு கட்டியிருக்கின்றார்கள். இவ்வாசிப்போனின் வேலை ஒவ்வொரு நாளும் இரண்டு மணி நேரம், ஒவ்வொரு புத்தகமாய் எடுத்துக் கிராமவாசிகளுக்குப் படித்துக்காட்டுவது. மற்றும் "கிராம சீர்திருத்தம்" என்ற மாதமிரு முறைப் பத்திரிகையும் இந்த ஜில்லா போர்டாரால் வெளியிடப்படும். எனவே இவ்வாறு கிராமமக்களின் முன்னேற்றம் செங்கற்பட்டு ஜில்லா போர்டார் முன்னிருக்கின்றார்கள். இத்தன்மைத்தே மற்றஜில்லாபோர்டாருமவேலைசெய்வார்களாயின், நம் நாட்டு கிராமவாசிகளின் வறுமைப் பிணி ஒழிக்கு நம் நாடு செல்வப்பெருக்கு அடையும் என்பது திண்ணம்.

முஸ்லீம் பெண்கள் படிப்பு.

சென்னைக் கார்ப்பரேஷன் முஸ்லீம் பெண்களுக்கு கட்டாயப் படிப்பு தொடக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருத்தல் பாராட்டத்தக்கதாகும். மற்ற வகுப்பு பெண்களெல்லாம் கல்வி கற்று வருகின்ற காலையில் முஸ்லீம் பெண்கள் மட்டும் ஏன் கல்வி கற்காது இருக்க வேண்டும் என்று நாம் கவலுறுகின்றோம். இப்பொழுது அவ்வருத்தமும் நீங்கிவிட்டது.

ஏன் தொடுத்தேன்?

(கண்ணப்பர்)

"நான் ஏன்கோவில் வழக்கைத் தொடுத்தேன்" என்பதைப்பற்றி இன்றுபலருமறியவேண்டும். "என்னை ஏன்தடுத்தார்கள்?" என்ற கட்டுரையைப் படித்தோர், "நான் ஏன்வழக்கைத்தொடுத்தேன்" என்பதையுமறிதல் நலம். என்னைக் கோவில் குருக்கள் தடுத்துவிட்டதால் எனக்கு [illegible] மோட்சம் இறந்து போய் விடுமென்ற ஆத்திரத்தால் நான் வழக்குத் தொடுக்கவில்லை. [illegible]

தான் என் உரிமையை நிலை நாட்டுவான் இவ்வழக்கைத் தொடுத்தேன்.

இனி இவ்வழக்கால் மற்றொரு உண்மையும் நிலை நிறுத்த ஏது உண்டாயிற்று. நான் ஆதிதிராவிடர்கள் வீட்டில் சாப்பிட்டதற்காகவும், கோயிலில் எல்லோரும் நுழைதற்கு உரிமை உண்டு என்று சொன்னதற்காகவும் கோவில் நுழையும் உரிமை இல்லை யென்று எதிரிகளால் வழக்காடப்பட்டது, இது தவறு என்று என் சார்பாய்ச் சாட்சியம் கூறிய காலஞ் சென்ற உயர்தர நீதிபதி சர், சதாசிவ ஐயர் அவர்கள் சாற்றினார்கள். மற்றும் ஆதிதிராவிடர்களெல்லாம் இந்துக்கள் அல்லவென்று எதிரிகளால் வழக்காடப்பட்டது. அதுவும் தவறு என்றார் சர். டி. சதாசிவ ஐயரவர்கள். இறுதியாக சர். டி. சதாசிவ ஐயரவர்கள் தம் சாட்சியத்தில் எல்லோரும் கோயிலுக்குள் நுழையலாமென்றும், சாதி வித்தியாசம் போகவேண்டுமென்றும் அறிவுறுத்தினார். இவ்வழக்கைத் தொடுக்காது இருந்திருப்பேனாயின், ஓர் உயர்தர நீதிபதி அவர்களின் வாயினின்றும் மேற்கண்ட உண்மைகள் வரமுடிந்திருக்குமோ?

மற்றொரு வேலை நிறுத்தம்

தீக்குச்சுச் சாலையில் தொந்திரவு

1500 பேர்கள் வேலையில்லா திருத்தல்

பம்பாய் மே 3

சலியானத்துக்கு அருகில்அம்பர்நாத்திலிருக்கும் மேற்கு இந்திய தீக்குச்சுத் தொழிற் சாலையின் 1500 தொழிலாளர்கள் தங்கள் குறைகளை தீர்க்க வேண்டுமென்று செவ்வாயன்று வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள். அவர்கள் குறைகள் பின்வருவன:

தற்செயலாய் நின்றுபோன நாட்கட்கெல்லாம் சம்பளம்வேண்டும். ஒரு நூறு டிரே தீப்பெட்டிக்குக் கூலி ரூபா 1-12-0 ஆகக் குறைக்கப்பட்டிருப்பதை ரூபா2-4-0 ஆக உயர்த்தவேண்டுமென்கின்றனர்.

வேலை நிறுத்தக்காரர்களின் கூட்டமொன்று திரு எஸ். கே. போல். எம். எல். சியின் தலைமையின் கீழ் நேற்றுக் கூடியது. தொழிற்சாலை மானேஜரும் அங்கு வந்திருந்தார். அவர் அவர்களின் குறைகளைகேட்க விரும்பினர்.

பி. பிரஸ்.

"முஸ்லிம் அவுட்லுக்"

திரு. டி, ஜி, அப்சன் எற்றுக் கொண்டார்

லாகூர் மே, 3,

திரு. டி.ஜி. அப்சன் அவர்கள் இன்று முதற் கொண்டு முஸ்லீம் அவுட்லுக் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை எற்றுக் கொண்டார்.

பிரீ. பிரஸ்

மங்களூரில் பஸ் விபத்து.

மங்களூர், மே, 1,

சங்கர் வித்தல் மோட்டார் பஸ் கம்பெனிக்குச் சொந்தமான ஒரு மோட்டார் பஸ் வண்டி புத்தூர் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தபோது பெந்தூரில் ஒரு பையன் மீது எறிவிட்டது. பையனுக்கு பலத்தகாய மேற்பட்டதால் அவன் சிறிது நேரத்தில் மாண்டான்.

—பிரீ பிரஸ்

குளத்தில் விழுந்திறந்தனர்.

சிறுவனின் பரிதாப மரணம்.

சென்னை, மே, 3

நேற்றுமாலை ஜார்ஜ் டவுன் பவழக்காரத்தெருவிலுள்ள கிருஷ்ணன்கோவில் குளத்திற்கு ஸ்நானம் செய்வதற்குத் தன்நண்பனுடன் சென்ற முனுசாமி என்னும் 12 வயதுள்ள சிறுவன் தண்ணீரில் மூழ்கிய பிறகு மறுபடியும் வெளியே வரவில்லை. அதையறிந்த அவனுடைய நண்பன் கூக்குரலிட்டதால் உடனே கூட்டம்கூடி சிறிது நேரத்தில் போலிசாரும் அங்குவந்து சிலரைத்தண்ணீரில்மூழ்கித் தேடிப்பார்க்கச்செய்தனர். ஆயினும்பிணம் அகப்படாமல் இன்று காலைதான் வெளியே மிதந்தது.

பால்காரன் மரணம்.

இன்றுகாலைஜார்ஜ்டவுன் கிருஷ்ணப்ப நாயக்கன்குளத்தில் 50 வயதுள்ள பால்காரன் பிணமொன்று மிதந்துகொண்டிருக்கக் காணப்பட்டது. இம்மரணத்தைக் குறித்துபோலீசார்விசாரித்து வருகின்றனர்.

வங்காள கிராம சுகாதார சீர்திருத்தம்.

கல்கத்தா, எப், 30

திரு. சி. ஆர். தாசின்திட்டம் என்று சொல்லப்படுகின்ற கிராமசுகாதார சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவர வங்காள அரசாங்கத்தார் முயற்சி செய்கின்றனர். சி. எ. பெண்டலி அவர்கள் தயாரித்த திட்டப்படி தாணுவுக்கு ஒரு சுகாதார உத்தியோகஸ்தர் வீதம் மாகாணம் முழுவதும் 600 உத்தியோகஸ்த தேவையாக இருக்கின்றது. இதற்காக வருடம் ஒன்றுக்கு 2000 ரூபாய் வீதம் 12 லட்ச ரூபாய் தேவையாக இருக்கின்றது. இந்த திட்டத்தை 3 வருடத்தில் நிறைவேற்றி வைக்கலாமென்று ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. இந்த வருடத்திற்கு வங்காள அரசாங்கத்தார் 6 லட்ச ரூபாய் கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே பயிற்சி பெற்ற 255 மனிதர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களெல்லாம் மாகாணம் முழுவதிலும் ஜில்லா போர்டுகளின் தலைமையின் கீழ் வேலை செய்து வருகின்றனர். இன்னும் 100 பேர் பயிற்சி யடைந்திருக்கின்றனர். பணக்கஷ்டத்தால் அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளவில்லை. 20 பேர் காத்வாவில் காலராவை எதிர்த்து போராடி வருகின்றனர். பாடா என்ற விடத்தில் வாரந்தோறும் 831 பேருக்கு அம்மை வார்க்கின்றது. சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் அதிக விரைவாக ஜனங்களுக்கு அம்மைகுத்தி வருகின்றனர். இவர்களுக்கு டாக்டர் ராயும் ஜில்லா மாஜிஸ்டிரேட் திரு. பெத்தியும் உதவி புரிந்து வருகின்றனர். சந்தாவில் வசிக்கூடிய படிப்பில்லாத ஜனங்கள் அம்மைகுத்திக்கொள்ள மறுத்துவந்தனர். ஆனால், மேற்கண்ட உத்தியோகஸ்தர்களின் முயற்சியால் சாந்தவர்கள் அம்மைகுத்திக் கொள்ளுகின்றனர்.

பிரீபிரஸ்.

சைமன் கமிஷன்.

சீக்கியலீக் ஆட்சேபனை.

அமிர்தசாஸ், மே, 2.

கமிஷன் ஒத்துழைப்புக் கமிட்டி நியமிப்பது சம்மந்தமாக பஞ்சாப் சட்டசபையில் கொண்டுவரப் போகும் தீர்மானத்தை முன்னிட்டு சீக்கியலீக் காரியதரிசி ஸ்ரீ. மாங்கல்சிங் சீக்கியமெம்பர்களுக்குப் பின்வருமாறு அறிவிக்கிறார்– 'சீக்கியலீக் ஜெனரல் கமிட்டி ஜெனவரி 29ந் தேதி செய்த தீர்மானத்தின் மீது சீக்கிய மெம்பர்கள் மீண்டும் கவனம் செலுத்த வேண்டும். வாக்காளர்களுடைய கட்டளையை நிறைவேற்றி வைப்பீர் களென எதிர் பார்க்கப்படுகிறது. அத்தீர்மானம் கமிஷன் சம்மந்தமான ஒவ்வொரு திட்டத்தையும் எதிர்க்க வேண்டுமென்றும், கமிஷன் ஒத்துழைப்புக் கமிட்டியில் எவ்வித சம்மந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், எல்லா சீக்கிய மெம்பர்களையும் கேட்டுக் கொள்ளுகிறது.

அ. பிரஸ்.

சர்வகலாசாலை நியமனங்கள்

உபசான்சலர் திரு. ராமுன்னி மேனன்.

(நமது விசேஷ நிருபர்.)

உதகமண்டலம், மே, 3

சென்னை சர்வகலாசாலை உபசான்சலராக திரு. ராமுன்னி மேனனும், சென்னை மெடிகல் காலேஜ் "பிஸியாலஜி" ஆசிரியராக காப்டன் கிருஷ்ணனும் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

கடலில் குதித்த சிறுவன்.

தண்டனைக்குப்பயந்துதற்கொலையா?

சென்னை, மே, 3

கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வந்திருந்த நிலக்கரிக்கப்பலாகிய "எஸ். எஸ். பாகன்" என்னும்கப்பலின் பட்லருடன் சச்சரவிட்டுக் கொண்ட சமையல் வேலை செய்யும் சிறுவன் ஒருவன் அச்சச்சரவில் கப்பல் காப்டன் பட்லருக்குச் சாதகமாக விருந்ததனுல் ஒருவேளை தன்னை அச்சச்சரவுக்காகத் தண்டிக்கக் கூடுமெனப்பயந்து அதிலிருந்து தப்புவதற்குக் கடலில் குதித்து விட்டான். ஆயினும் அப்பக்கம் வந்தபடவோட்டி சிறுவனை மூழ்கவிடாமல் காப்பாற்றிக் கரையேற்றினான். அச்சிறுவன் மீது தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக ஜார்ஜ் டவுன் போலிஸ் கோர்ட்டில் இரண்டாவது பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் முன் குற்றம் சாட்டி விசாரணைக்குக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

டாக்டர் சுதீந்திர போஸ்

பம்பாய் வருகை

பம்பாய், மே, 2

டாக்டர் சுதீந்திர போஸ் இன்று மாலை அமெரிக்காவிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்தார். அவரும், அவரது மனைவியாரும் உலக யாத்திரை செல்கின்றனர். சிலகாலம் இந்தியாவில் தங்கிவிட்டு பின்பு சீனாவுக்கும், ஜப்பானுக்கும் செல்வார்கள்.

பிரீ பிரஸ்

பேட்டி விபரம்

பம்பாய், மே 2

அமெரிக்கா அயோவா சர்வ கலாசாலையில் பிரபலராக யிருக்கும் டாக்டர் சுதீந்திரபோஸ் இன்று தமது மனையாளுடன் பம்பாய் வந்து சேர்ந்தார். பிரீபிரஸ் பிரதிநிதி அவரைப் பேட்டிகண்டபோது அவர் கூறியதாவது:—

எங்களுக்கு ஒருபோதும் உண்மையான விஷயங்கள் அறிவிக்கப்படாததால் நான் எவ்வித அபிப்பிராயமும் கூறமுடியாது. எங்களுக்குக் கிடைக்கும் செய்திகள் பிரிட்டிஷ் பத்திரிகைகள் மூலமாகவே அனுப்பப்படுகின்றன. நானும் எனது மனைவியாரும் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். காக்சியில் நடந்த சம்பவத்தைக் கேட்டதும் அமெரிக்காவிலுள்ள ஒரு நகரம் எங்களுக்கு ஞாபகம் வந்தது. நாங்கள் உலகயாத்திரை செல்கிறோம். இந்தியாவிலிருந்து சீனா, ஜப்பான் ஆகிய விடங்களுக்குச் செல்ல உத்தேசிக்கிறோம். என்றார்.

மிஸ்மேயோ புஸ்தகத்தைக் குறித்து அமெரிக்கர்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டபோது அவர் மிஸ்மேயோ புஸ்தகம் அமெரிக்காவில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது. அப்புஸ்தகம் பத்துப்பதிப்புகளுக்குக் குறைவில்லாமல் அச்சிடப்பட்டது. பொதுஜனங்கள் அதை ஏராளமாக வாங்கிப் படித்தனர். அத்தகைய உபயோகமற்ற புஸ்தகத்துக்கு அவ்வளவு தூரம் பொதுஜன ஆதரவு கிடைத்தது எனக்கு விநோதமாகவே தோன்றியது. மகாத்மா காந்தி, தாகூர் ஆகியோர் நேர்த்தியான புஸ்தகங்கள்எழுதியபோது அவைகளுக்கு விற்பனை கிடையாது. பொறுப்புள்ள சில பத்திரிகைகள், இந்திய மாதா போன்ற புத்தகங்கள் முழுப்பொய் என்றே கருதுகின்றன. நான் மிஸ்மேயோ புஸ்தகத்தை வாசிக்கும்போதெல்லாம் அதிலுள்ள விஷயங்கள் புள்ளி விபரங்களுடன் எழுதப்படாததால் என் மனம் துடித்தது. மிஸ் மேயோ எழுதிய புஸ்தகம் உப்பு பெறாது. அமெரிக்காவில் புத்திசாலிகளாயுள்ளவர்கள் அதை சிறிதும் உண்மையென்று நம்பவில்லையெனக் கூறுவேன் என்றார்.

இந்தியர்களின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி அமெரிக்கர்களின் அபிப்பிராயமென்னவென்று கேட்டபோது அவர், எங்களுக்குக் கிடைக்கும் கொஞ்ச செய்திகளும் பிரிட்டிஷ் பிரஸ் மூலமாக அனுப்பப் படுகின்றன. இந்தியாவின் உண்மையான நிலைமையைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது. பல மிதவாத கட்சி பத்திரிகைகள் இந்திய சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கின்றன. என்றாலும், அவைகள் அமெரிக்கர்களுக்கு படும்படியாக எடுத்துரைக்க முடியாமலிருக்கின்றன.

—பிரீ. பிரஸ்.

திரு. எஸ். ஆர். தாஸ்.

பிரிவி கவுன்ஸில் மெம்பராம்.

பம்பாய், மே. 2,

இந்தியா கவர்ன்மெண்டு சட்ட மெம்பர் ஸ்ரீ எஸ். ஆர். தாஸ், பிரிவி கவுன்ஸில் மெம்பராக நியமிக்கப் படுவாரென 'இந்தியன் டெய்லி மெயில்' ஒரு வதந்தி கிளப்புகிறது. இவ்வதந்திக்கு ஆதாரமிருக்கும்பட்சத்தில், ஸ்ரீ டி. எப். முல்லாபிரந்தர சட்டமெம்பராக நியமிக்கப்படுவார்.

—அ. பிரஸ்,

ராம்காலி கொலைவழக்கு.

எதிரிகளுக்கு போலீஸ் காவல்.

லாகூர் மே 2

ராம்காலி கொலைவழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் தனித்தனி விசாரிக்கப்படுவார்கள். ஜெயச்சந்த் என்னும் ஒருவர் கொலைசெய்யப்பட்டு அவருடைய பிரேதம் ஒருகால் வாயில் கிடந்ததாக கண்டுபிடிக்கப்பட்டது. ருபாக்ஸிங் என்பவர் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரிக்கப்படுவார். மற்ற இருவர்களும் அதற்கு உடந்தையாக இருந்து பிரேதத்தை காணாமல் செய்யும் பொருட்டு அப்புறப்படுத்திய தாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரிக்கப் படுவார்கள். வழக்கு விசாரணை முடியும் வரை எதிரிகள் போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பிரீபிரஸ்

பம்பாய் தொழிலாளர் கூட்டம்.

ஒரே சங்கத்திற்கு வேண்டுகோள்.

வாஷிங்டன் ஒப்பந்தம் உறுதி செய்யப்பட வேண்டும்.

பம்பாய், மே 2

மில் வேலை நிறுத்தம் மாறுதல் எதுவுமில்லாது அப்படியே நீடித்திருக்கின்றது. சந்தேகம் கொண்ட சில கோடிக்கம்புகளை இங்கும் அங்கும் தாக்கப்படுகின்றது.

பம்பாய் டெக்ஸ்டயில் தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களை ஒரே பெரிய வல்லமையுள்ள சங்கமாகச் சேரும்படித் தொழிலாளர்களை வேண்டியுள்ளது. தற்போதைய போராட்டத்தில் அவ்விதமான சங்கம் ஒன்று வேண்டியதின் அவசியத்தை உணரப்பட்டுள்ளது. டெக்ஸ்டயில் தொழிலாளர் சங்கத்தில் மொத்தம் 9000 அங்கத்தினர்களிருக்கின்றனர். 14000 ரூபாய்கள் ரிசர்வ பணம் இருக்கின்றது. அ. பிரஸ்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

பம்பாய் மே 2.

மார்வாரிவித்தியாலயா மண்டபத்தில் நேற்று மாலை கூடிய பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்த திரு. ஜோசி எம். எல். ஏ. தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைக் கண்டித்து, குறுக்கிட முடியாதபடிசட்ட இயற்றவேண்டுவது அவசியமெனக் கூறினர். அவர் இங்கிலாந்தில் இதுசம்பந்தமாயுள்ள நிலையை குறிப்பிட்டு, அங்கு முன்னுக கலக ஆக்டை வாசித்து, சுடுவதற்குமுன் கலககாரர்கள் கலைந்து செல்ல ஒருமணி நேரம் கெடுவு கொடுக்குமுன் தானைக்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தைரியம் கொள்ளார்கள் என்றும் கூறினர்.

கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

(1) வாஷிங்டனில் கூடிய அகில தேசிய தொழிலாளர்மகாநாட்டில் அதில் சேர்ந்துகொண்ட நாடுகளெல்லாம் சாதகமாகஒட்டுச்செய்த நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்னும் ஒப்பந்தத்தை உறுதி செய்யாததைப் பலமாய் இக்கூட்டம் கண்டிக்கின்றது.

(2) பிரித்தானியா அரசாங்கம் நாளொன்றுக்கு எட்டு மணிநேரம் வேலை செய்யவேண்டும் என்னும் ஒப்பந்தத்தில் முதலாளிகளுக்கு அனுகூலமாய்மாறுதல் செய்ய உத்தேசிப்பதை இக்கூட்டம் கண்டிக்கின்றது.

(3) வாரத்திற்கு 48 மணி நேரம் வேலை செய்ய வேண்டும், நாளொன்றுக்கு எட்டுமணி நேரம் வேலைசெய்ய வேண்டுமென்று இந்திய தொழிற்சாலை ஆக்டையும் இந்தியச் சுரங்கங்கள் ஆக்ட்டையும் மாற்றக்காலம் வந்துவிட்டதாய் இக்கூட்டம் அபிப்பிராயப்படுகின்றது.

(4) அமைதி ஒழுங்கு என்னும் பெயரால் கைத்தொழில் சச்சரவில் துப்பாக்கிகளையும் கத்திகளையும் உபயோகிக்கும் பழக்கத்தை இக்கூட்டம் கண்டிக்கின்றது. அதன் பலன் வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யப்படாது போயினும் தொழிலாளர்க்கு எதிரிடையாய் முதலாளிகட்கு உதவி செய்வதாய்முடிகின்றது.

(5) அரசாங்கம் முதலாளியாயிருக்கும் கைத்தொழில் சச்சரவில் துப்பாக்கிகளும் கத்திகளும் உபயோகப்படுத்தப்பட்டதாயின், அதில் வருத்தப்பட்ட கட்சியினர் அவ்விதம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் மற்றைய ஆயுதங்களை உபயோகிக்கவும் பொறுப்பாயிருந்தவர்கள் மீது அரசாங்கத்தின் அநுமதியின்றி வழக்குத்தொடர உரிமை இருக்கவேண்டுமென்றும் இக் கூட்டம் கூறுகின்றது.

மற்றொரு கூட்டம்.

மில் தொழிலாளரின் பெரிய கூட்டமொன்றுமே திருநாளைக் கொண்டாட நேற்று மாலை பாரலில் கூடியது. அதில் தலைமை வகித்த திரு. பிராடுலி இந்தியாவில் தொழிலாளர் இயக்கத்தை பலப்படுத்தும்படி வேண்டிக்கொண்டார். உலகிலுள்ள நல்ல சாமான்கள் ஒரு சிலருக்கு மட்டும் அன்று, அதை எல்லோரும் சேர்ந்து அநுபவிக்கவேண்டுமென்றும் கூறினர்.

கூட்டம் தொழிலாளர் ஒற்றுமை சம்பந்தமாயும் எட்டுமணி நேரம் வேலை செய்யவேண்டுமென்னும் ஒப்பந்தத்தை உடனே உறுதிசெய்யவேண்டுமென்றும், வாழ்க்கைக்கு குறைந்தது போதுமான கூலி கேட்டும், குழந்தைகளை வேலை வாங்குதல் கூடாதென்று கேட்டும், வேலையில்லாதவர்கட்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டுமெனக் கேட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றியது.—பி பிரஸ்

ஜாம் செட்பூர் வேலை நிறுத்தம்.

திரு ஆண்ட்ரூசின் புத்திமதி

நிலைமையில் மாறுதலில்லை

ஜாம் செட்பூர் மே 2

ஜாம் செட் கதவடைப்பு இன்னும் அப்படியே இருக்கின்றது. நிலைமை அமைதியாகவே இருக்கின்றது. வேலை நிறுத்தக்காரர்கள் ஜாம் செட்பூருக்கு அருகில் ஜக்சாலையில் தங்களின் சொந்தக் கூட்டமொன்று நேற்றுமாலை கூட்டினர். திரு மானக் ஹோமி தலைமை வகித்தார். ஒரு வேலை நிறுத்தக்காரர் கதவடைப்பு வெறும் பிதற்றலும் நாடகமுமேயென்றும், கம்பெனி அவர்களைநெடுநாள் வெளியே வைத்திருக்க முடியாதென்றும் கூறினர். அவர் தனது தோழர்களை உறுதியுடனிருக்கும் படியும் கூறினர். மற்றொருவர் வேலையில் சேர்ந்து எதிர்க்காமல் எதிர்த்தலைக்கொள்ளும்படியும், அவர்களை வெளியே பிடித்துத்தள்ளினால் அந்நாளைக்கும் கூலி கேட்கும் படியும் கூறினர். மற்றொருவர் தொழிலாளர் சபை நிர்வாகிகளை புதிதாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றார். திரு ஹோமி தொழிலாளர்களை அமைதியாய் இருக்கும்படியும் குழப்பங்கள்செய்யவேண்டாமென்றும் கூறினர். இங்குள்ள உயர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரை பேட்டி கண்டு பேசியபோது அவர் வேலை நிறுத்தக்காரர்களிடம் அநுதாபம் காட்டினதாகவும் கூறினர்.

டாட்டா கம்பெனி அறிக்கை.

பம்பாய் மே. 2

டாட்டா இரும்பு ஸ்டீல்.கம்பெனி கீழ்காணும் அறிக்கையை வெளியிட்டுள்ளது:—

பாயிலர் கவுஸ் வேலை நிறுத்தத்தினால் பவர் இல்லாது போயுள்ளமையினால் சில சோலிங் மில்கள் மேமுதல்தேதி முதல் மூடப்பட்டுள்ளன. இதனால் ஏற்கனவே வேலை நிறுத்தம் செய்திருப்பவர்கள்போக இன்னும் 2000 பேர்கட்கு வேலையில்லாதுபோயுள்ளது.

திரு. ஆண்ட்ரூஸிற்குத் தந்தி

ஜாம் செட்பூர் மே 2

ஜாம் செட்பூர் தொழிலாளர்களின் பெரும் கூட்டமொன்று நேற்றுமாலை திரு. டி. சி. ஆயுதா தொழிலாளர் சங்கத்தின் உதவித் தலைவர், தலைமையின்கீழ் கூடியது. அப்பொழுது அவர் சீட்டில், பாயிலர் கவுஸ் வேலை நிறுத்தக்காரர்கள் தங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான திரு, ஆண்டுரூசிற்கு தங்களின் குறைகளை கவனிக்கும்படி ஸ்டீல் கம்பெனி ஜெனரல் மானேஜரை வற்புறுத்தமாறு கேட்டு தந்தி கொடுத்துள்ளார்களென்றும், திரு. ஆண்ட்ரூஸ் தன் மூலம் அவர்களை தொழிலாளர் சங்கத்திற்கு விசுவாசமுடையவர்களாய் இருந்து அவர்களின் குறைகளை தீர்த்துக் கொள்ளும்படி அவர்கட்கு பதிலனுப்பியுள்ளார் என்றும், தொழிலாளர் சங்கம் இப்பொழுதும் அவர்களின் குறைகளைப் பற்றி மானேஜ்மெண்டுடன் போராடவும் அவசியமான கஷ்டநிவர்த்தி உதவி அவர்கட்கு அளிக்கவும் தயாராயிருக்கின்றதென்றும், ஆனால் இதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், தாம் ஜெனரல் மானேஜரிடம் திரு. ஆண்டுரூஸிற்கு அனுப்பிய தந்தியைக் காட்டியதாகவும், ஆனால்அவர் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் சங்கமொன்றிருக்கும் போது வெளியிலுள்ளாருடன் எவ்விதமான ராஜியும் பேச முடியாதென மறுத்து விட்டாரென்றும் கூறினர்.

பின் கூட்டம் மே திருநாள் கொண்டாட்டத்தீர்மானங்கள் நிறைவேற்றியது (பம்பாய் தொழிலாளர்கள்நிறைவேற்றிய தீர்மானங்களையெல்லாம் இதுவும்நிறைவேற்றியது.)

திரு. ஆயுதா ஜில்லா டிப்டியூ கமிசனர் ஜாம்செட்பூரில் ஆயுதம் பூண்ட படையினர் முதலாளிகட்கு உதவியளிக்கவோ அல்லது தொழிலாளர்களை ஆதரிக்கவோ வந்திருக்கவில்லையென்றும், சமாதானத்தை நிறுவவே வந்துள்ளனர் என்றும் தன்னுடைய உறுதிமொழியை தொழிலாளர்கட்குத் தெரிவிக்கும்படி தொழிலாளர் சங்க நிர்வாகிகளை கேட்டுள்ளாரென்றும், சீட்டில் பாயிலர் கவுஸ் தொழிலாளர்கள் சங்கத்தின் மூலம் தங்கள் குறைகளை தீர்த்துக் கொள்ள முயலாததினாலேயே இக்கஷ்டங்க மேற்பட்டுள்ளதென்றும், இதற்குக் காரணம் சுயநலமே என்றும், தொழிலாளர் சங்க மூலம் குறைகளை நிவர்த்திக்கொள்ள முயன்ற கூத்வென் லோக்கோ இலாகா முதலியவைகள் பயனடைந்துள்ளதென்றும், தற்போதைய நிலைமையைப்பற்றி யோசிக்க சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று வியாழக்கிழமை நடைபெறுமென்றும் கூறினர். பி. பிரஸ்.

இம்பீரியல் பாங்கியில் களவு

ரூ 8000-போன மாயம்

இன்னும் துலங்கவில்லை.

பம்பாய் மே 2.

பம்பாய் இம்பீரியல் பாங்கியில் இன்று பிற்பகல் ரூ 8000 களவுபோய்விட்டது. பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட் வேலைக்காரன் ஒருவனை, கோர்ட் பிரதம மாஜிஸ்டிரேட் மற்றைய உத்தியோகஸ்தர்கள் குமாஸ்தாக்கள் முதலியவர்கள் சம்பளத்திற்கு ரூ 8000 செக்கை மாற்ற அனுப்பியது. அவன் செக்கை மாற்றிப் பணத்தைகவுண்டரில் வைத்தான். அது மாயமாய் மறைந்துவிட்டது. தாணுக்காரர்கள் விசாரணை செய்து வருகின்றனர். —பி. பிரஸ்

ஹௌரா குப்பை கூட்டிகள் வேலை நிறுத்தம்

ராஜி நிபந்தனைகள்

கல்கத்தா, மே 2

ஹௌரா முனிசிபாலிட்டியின் தனிக் கூட்டமொன்றில் குப்பை கூட்டிகள் ராஜி நிபந்தனையான (1) ஒருவரையும் ஒறுத்தல் கூடாது (2) சம்பளத்தில் எல்லோருக்குத் எட்டணு உயர்வு கொடுக்க வேண்டும் (3) வேலை நிறுத்தக்காரர்கட்கு வேலை நிறுத்தக் காலத்திற்கும் சம்பளம் கொடுக்க வேண்டும் (4) வேலை நிறுத்தத்தின் போது அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள எல்லா கிரிமினல் வழக்குகளையும் வாபீஸ்வாங்கிக் கொள்ள வேண்டும் என்பவைகளை உறுதி செய்தது. இவ்விதமான வேலை நிறுத்தக்காரர்களின் கொடுமைகளை குறைக்க அரசாங்கத்தினிடம் கடன் வாங்கி சாக்கடை திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று தலைவர் கூறினர். —பி. பிரஸ்

கல்கத்தாவில் மாதர்கள் கூட்டம்.

கோசா ஒழியவேண்டும்.

கல்கத்தா மே 2

கோக்லே மெமோரியல் பாடசாலையில் மாதர்கள் கூட்டமொன்று நடைபெற்றது. அப்பொழுது மிஸஸ் எ. கே. ரே கோசாவை ஒழித்தல், பாலிவிவாகத்தை ஒழித்தல், பெண்களுக்கு ஆரம்பக் கல்வி ஏற்படுத்தல் முதலியவைகளில் இந்தியமாதர்கள் அதிக ஊக்கம் எடுக்கவேண்டிய வேண்டினர். சக்வாத் மெமோரியல் பெண்பாடசாலையை ஏற்படுத்திய மிஸஸ் உசேன் மற்றைய மாதர்களும் அவ்விதம் வேண்டியே பேசினர். ஹார்பிலாஸ் சர்தா மசோதாவை ஆதரித்தும் பையன்கள் பெண்கள் மணவயதை உயர்த்தி சட்ட இயற்றுமாறு வங்காளச்சட்டசபை அங்கத்தினர்களை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. —பிபிரஸ்

மாணவிகள் வேலைநிறுத்தம்

இந்திய அரசாங்கம் விசாரிக்கும்.

ஆஜ்மீர் மே 2

ஆஜ்மீர் பெண்பாடசாலை மாணவிகள் வேலை நிறுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை. ஆஜ்மீர் கல்வி அதிகாரிகள் சில பொறுப்புள்ள நிபந்தனைகள்மீதுஇத்தொல்லையைமுடிவுசெய்வதாய் உறுதிகூறினதாகவும், ஆனால் அவ்விதம்செய்யத்தவறிவிட்டனர் என்றும் தெரிகின்றது. பின்னர்குற்றம்இழைத்ததாய்கூறப்படும்உபாத்தியாயினி மிஸஸ் ராவிபாய் வேலை நிறுத்தம் செய்துள்ள மாணவிகளின் பெற்றோர்கட்கு எழுத்து மூலம் மன்னிப்பு அனுப்பினர். ஆனால் அதில் பெற்றோர்கள் திருப்தியடையவில்லை. மாணவிகளை நேர்மையாய் நடத்துவதாயும் கஷ்டப்பட்டு போதிப்பதாயும் எல்லோராலும் விரும்பப்படும் தலைமை உபாத்தியாயினி மிஸ்.தாசித்த மேல்அதிகாரியாக மிஸஸ் கான் ஏறிவிட்டார். உபாத்திமார்கட்குள்ளும்கல்வி அதிகாரிகட்குள்ளும் சொந்த விரோதங்கள் இருப்பதேஇத்தொல்லைக்குக் காரணமென்றும், எதிர்பாராத செய்திகள் வெளிவருமென்றும் கூறப்படுகின்றது. இதற்குவகுப்புவிரோதமேகாரணம் என்று நினைப்பி விடவும் சில இடங்களில் முயற்சி செய்யப்பட்டுள்ளதைப்பற்றி வருத்தப்படுகின்றது. இன்னோரன்ன காரணங்களால் நிலைமை அதிக சிக்கலாகி வருகின்றது. இந்திய அரசாங்கம்கல்வி அதிகாரிகள் அது சம்மந்தமானரிக்கார்டுகளை அனுப்பும்படிக் கேட்டுள்ளதாய் கூறப்படுகின்றது. —பி. பிரஸ்.

கல்கத்தா மே திருநாள்.

தொழிலாளர் சத்தியாக்கிரகம்.

போலீசாருடன் சச்சரவு.

கல்கத்தா மே 2

பாமங்கச்சித் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பின் நேற்றுத்தான் முதலாவதாக லில்லோ வேலை நிறுத்தக்காரர்கள் மூர்க்கமான மனப்பான்மை கொண்டு போலீசாருக்குத் தொந்திரவு கொடுத்தனர். கம்மியூனிஸ்டு திரு பிலிப்ஸ்பிராட்டின் தலைமையில் சுமார் 500 தொழிலாளர்கட்கு மேல் ஆக்ஸ்டர்லானி ஞாபகச் சின்னத்திற்குகீழ் கல்கத்தாவில் நடைபெற்ற மே திருநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள ஊர்வலமாய்ச் சென்றனர்.

கூட்டத்தில் திரு ஸ்பிராட் தாம் பேசியபோது தொழிலாளர்கள் தங்களின் வாழ்க்கை நிலையை விருத்தி செய்துகொள்ள முயலுவதிலும் தங்களை அந்நிய ஆட்சியிலிருந்து விடுவித்துக் கொள்ள முயலுவதிலும் தாம் அநுதாபம் கொள்வதாயும், இந்தியத் தொழிலாளர்கள் ரஷ்யாவின் கொள்கையைப்பின் பற்றவேண்டுமென்றும், அரசியல் விமோசனத்திற்கு நாடு போராடுவதுடன் இந்தியத் தொழிலாளர்கள் கலந்து கொள்ளவேண்டுமென்றும், வகுப்புச் சச்சரவு அவசியம்வேண்டுமென்றும், தொழிலாளர் இயக்க வெற்றிக்கு அது அவசியமென்றும், இதுவரை வேலை நிறுத்தக்காரர்கட்கு மாஸ்கோவிலிருந்து பணஉதவி வரவில்லை என்றும், ஆனால் அவ்விதமான உதவி வருமாயின் அதை வரவேற்பதாகவும் கூறினர்.

போலீஸாருடன் சண்டை

திரும்பிவரும்பொழுது வேலை நிறுத்தக்காரர்கள் தாங்கள் முன்னால் போலீசாருக்குத் தெரிவித்ததிற்கு எதிரிடையாக இரு கூட்டமாகப் பிரிந்தனர், அவர்கள் ஸ்டிராண்டுரோடில் பாதித்தூரம் போனபின்பு ஊர்வலத்துடன்வந்த ஒருவரை ஓர் சார்ஜெண்ட் அடித்ததாகக் கூக்குரலிடப்பட்டது. உடனே தொழிலாளர்கள் மூர்க்கங்கொண்டுதுடித்தனர். அவர்கள் தாணுக்காரர்களை திட்டி அவர்களை எள்ளி நகையாடினர். அவர்களின் பயமுறுத்தலான மனப்பான்மையைக் கண்டு தலைமையிடத்திலிருந்து உதவிக்கு இராணுவத்தை அழைக்கப்பட்டது. வழியில் எல்லாம் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகம் செய்தனர். அவர்கள் அடிக்கடி வீதியில் உட்கார்ந்து கொண்டனர். அவர்களை ஹௌரா பாலத்திற்கு வெளியில் கொண்டுபோய்விட தாணுக்காரர்கட்கு $1\frac{1}{2}$மணி நேரம் பிடித்தது. தொழிலாளர்கள் நேற்றிரவு நடந்துகொண்ட முறை ஹௌரா அதிகாரிகட்குக் கவலையை உண்டு பண்ணிவிட்டது. கி.பி.கோ 144 வது செக்சனை அநுஷ்டானத்திற்கு அநேகமாய் கொண்டுவரப்படுமெனக் கருதப்படுகின்றது. —அ.பிரஸ்.

சிலருக்கு காயம்,

கல்கத்தா மே 2

நேற்றிரவு லட்லா சணல் மில்லிலும் சங்கில் மில்லிலும் குழப்பமேற்பட்டது. அதில் சிலவேலை நிறுத்தக்கார் கட்கும் தாணுக்காரர்கட்கும் சிறிது காயமேற்பட்டுள்ளது. வேலை நிறுத்தக்காரர்களை அவர்கட்கு குடியிருக்கக் கொடுத்திருந்த இடத்தைக் காலி செய்யும்படி கேட்கப்பட்டதாயும், அவர்கள் மறுத்ததின்பேரில் சச்சரவேற்பட்டதென்றும் கூறப்படுகின்றது. அவ்விடத்தில் ஆயுதம்பூண்ட தாணுக்காரர்கள் பந்தோபஸ்து செய்து வருகின்றனர்.

தலைவர்கட்கு நோட்டீஸ்.

மில் தொழிலாளர் சங்கக் காரியதரிசியையும் திரு. ஸ்பிராட்டையும், மில் இடத்திற்குள் வரக்கூடாதெனத்தடுத்து மில் மானேஜர் அவர்கட்கு நோட்டீஸ் செலுத்தியுள்ளார். —பி. பிரஸ்

திரு. ஸ்பிராட்டின் செய்கைகள்.

கல்கத்தா, மே, 2.

தொழிலாளர் வேலை நிறுத்தம் சம்பந்தமாய் திரு. ஸ்பிராட் செய்துவரும் செய்கைகட்குஇங்கிலீஷ்மான்ஸ்டேட்ஸ்மன் பத்திரிகைகள் முதன்மை கொடுத்து வெளியிடுகின்றன. ஸ்டேட்ஸ்மன், அவரைபேட்டி கண்டு பேசியதில் பின்வருமாறு அவர் கூறியதாய் கூறுகின்றது:— வேலை நிறுத்தத்தில் நான் பலாத்காரமான செய்கையை கையாளச் செய்வதை வெறுக்கின்றேன். ஏனென்றால் அதனால் பயன் விளைகின்றதில்லை என்று நான் நம்புகின்றேன். பொதுவாய் எனது கொள்கைகள் வேறாக இருந்தும், லில்லோ வேலை நிறுத்தம் சம்பந்தப்பட்டமட்டில் நான் எதிர்க்காமல் எதிர்த்தலையே ஆதரிக்கின்றேன். பணமில்லாமையினால் ரயில்வே வேலை நிறுத்தக்காரர்கள் பட்டினிகிடக்க வேண்டி வருமாதலையினால் அவர்கள் தோல்வி உறுவர் என நன்கு உணர்கின்றேன். இந்த வேலை நிறுத்தத்தை சமாளிக்க சந்தர்ப்பங்களை உடைத்தெறிந்துவிட்டு தொழிலாளர் அமைதியின்மையை அப்படியே வைத்துக் கொண்டிருக்க ஓராண்டுகள் இங்கு தங்கி இருக்க உத்தேசித்துள்ளேன்.

அவரை கைது செய்யப் போவதாய் வதந்தி உலாவுவதைப் பற்றிக் கேட்டதற்கு அவர், நான் ஓரிடத்தில் பேசியதில் வேலை நிறுத்தக்காரர்களையும் மறியல்செய்பவர்களையும் தாக்கினால் பதிலுக்கு பதில்செய்யும்படி கூறினேன். இதுதான் காரணம் என்று மட்டுந்தான் நான் கூற முடியும், என்றார். பி. பிரஸ்.

இமயமுதல்— —குமரிவரை

சநாதன ஜமீன்தார்கள் சங்கம் என்ற பெயருள்ள புதிய சங்கம் ஒன்று பம்பாயில் நிறுவப்பட்டிருக்கின்றது. இதில் அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இச்சங்கமானது சைமன் கமிஷன் இரண்டாவது தடவை வருவதன் சம்பந்தமாக வேலை செய்வதற்காக ஏற்பட்டிருக்கிறதென்று சந்தேகிக்கப்படுகின்றது.

* * *

திரு. இராஜகோபாலாச்சாரி ஜம்னுலால் பஜாஜ், புரபுல்லா சந்திரராய் முதலியவர்கள் கோயில்வாயில் குதூகலமாக வரவேற்கப்பட்டனர். தாஸ் ஞாபகநிதிக்கு 4000 ரூபாய் அடங்கிய பணமுடிப்பு அளிக்கப்பட்டது. ஜம்னுலால் பஜாஜ் 1000 ரூபாய் நன்கொடையளித்தார்.

* * *

மாட்சிமை தங்கிய மைசூர் மகாராஜா அவர்கள் நேற்று காலையில் உதகமண்டலத்தில் மேன்மை தங்கிய கவர்னரைக் கண்டார்கள். அதன் பிறகு கவர்னர் சென்று மகாராஜாவை கண்டார்கள்.

* * *

மாட்சிமை தங்கிய மைசூர் மகாராஜாவின் சில்வர் ஜூப்லியை முன்னிட்டு சில்வர் ஜூப்ளி பிரசங்கத்தை நிகழ்த்தும்படி சர். சி. பி. இராமசாமி அய்யரை மைசூர் பல்கலைக்கழகத்தார் அழைத்திருக்கின்றனர்கள். சர். சி. பி. யின் முதல் உபந்நியாசம் ஆகஸ்டு மாத ஆரம்பத்தில் நடைபெறும்.

* * *

லக்னோ முனிசிபல் கௌன்சிலராகிய திரு. வின்செண்ட்லம் பாட்டி என்பவர் ஏமாற்றிய குற்றத்திற்காக நகர மாஜிஸ்டிரேட்டால் தண்டனை விதிக்கப்பட்டிருந்தார். செஷன்ஸ் நீதிபதி திரு. ஜே. எம். பாசு அவர்கள் எதிரியை விடுதலை செய்தார்.

* * *

இந்திய பாரஸ்ட் சர்விசுக்கு பயிற்சி பெறுவதற்காக அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க ஆகஸ்டுமாதம் 20-ந் தேதி டில்லியில் போட்டி பரீட்சை நடைபெறும்.

* * *

திருப்பதியிலுள்ள மிஷன் ஸ்கூல் அதிகாரிகள் அடுத்த ஜூலை மாதம் முதற்கொண்டு கிறிஸ்தவர்களல்லாதவர்களை சேர்த்துக் கொள்ளுவதில்லையென்று தீர்மானித்ததால் முகம்மதிய மாணவர்கள் கஷ்டப்படாமலிருக்க ஒரு முனிசிபல் ஹைஸ்கூல் திறப்பதென்று எப்ரல் மாதம் 28ந்தேதி கூடிய முனிசிபல் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. திருப்பதியிலுள்ள மற்றொரு ஹைஸ்கூலாகிய மகந்து ஹைஸ்கூலில் இந்துக்களல்லாதவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை. புதிய பாடசாலையை மிஷன் ஸ்கூலிலேயே வைக்க அநுமதி கோரப்படும்.

* * *

இந்தியா சட்டசபையிலும் சென்னை சட்டசபையிலும் பாலிய விவாகத்தைத் தடுக்கும் மசோதா நிறைவேறாமலிருக்க தஞ்சை இந்து டிராக்ட் சங்கத்தார் தஞ்சையில் சுற்றுப் பிரயாணம் செய்து பிரசாரம் செய்கின்றனர். கிராமங்களில் பிரசாரம் செய்ய பல அய்யர்கள் ஏற்பட்டிருக்கின்றனர். அதில் ஸ்ரீ காமகோடி மடம் ஏஜெண்டும் ஒருவர் கலியாண விஷயத்தில் இந்துமதத்திற்கு விரோதமாக அரசாங்கத்தார் தலையிடக் கூடாதென்ற மனு ஒன்று அரசப்பிரதிநிதிக்கு அனுப்புவார்களாம். அவசியம் ஏற்பட்டால் தூதுக் கூட்டம் ஒன்றையும் அரசப்பிரதிநிதியிடம் அனுப்பி வைதீகர்களின் அபிப்பிராயத்தை அரசப்பிரதிநிதியிடம் தெரிவிப்பார்களாம்.

* * *

சரஸ்வதி பிராமண சபையின் கூட்டம் ஒன்று டில்லியில் கூடியபோது அதில இந்தியா சரஸ்வதி மகாசபை 2-வது மகாநாட்டை கோடைகால இறுதியில் டில்லியில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

வங்காள சுயராஜ்ய கட்சி நிலைமை.

திரு. சுபாஷ் போஸ் கூறும் விவரம்.

பாம்பாய் மே. 2.

"திரு சுபாஷ் சந்திரபோஸ் பம்பாயில் பிரிபிரஸ் பிரதிநிதியல் பேட்டி கண்ட போது அவர் கூறியதாவது:—

சட்டசபை சுயராஜ்ய கட்சி

வங்காள சட்டசபை மந்திரிசபைமீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுப் போனது எங்களுக்கு ஆச்சரியமல்ல. மொத்தம் 140 மெம்பர்களில் 42 பேர்கள்தான் சுயராஜ்யக் கட்சி மெம்பர்கள். எங்களுடைய கட்சியில் மூன்று பேர்கள் வாதிருந்தும் ஐந்து ஓட்டுகளால் தான் தீர்மானம் தோல்வியடைந்தது. ஆகையால் தற்கால சட்டசபை அமைப்பின்படி நாங்கள் மற்றக் கட்சிகளின் பலத்தைக் கொண்டே வெற்றிபெற முடியுமென விளங்குகிறது. சென்ற வருஷம் ஆகஸ்டுமாதத்தில் நாங்கள் கொண்டு வந்திருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மற்றக் கட்சிகளின் ஆதரவைக் கொண்டே வெற்றி பெற முடிந்தது. இந்தத்தடவை முன் போல் மற்றக் கட்சிகளின் ஆதரவு அவ்வளவு அதிகமாயில்லாததாலும்எங்கள் கட்சியில் மூன்று மெம்பர்கள் வேண்டுமென்றே வராமலிருந்து விட்டதாலும் சில ஓட்டுகளால் தீர்மானம் தோல்வியடைந்தது. மேலும் மந்திரி கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் ஆகேஷிக்கத்தக்க விதமான முறைகளைக்கையாண்டதும் மற்றொரு காரணமாகும். இந்தத்தடவை எங்களுக்குத் தோல்வி ஏற்பட்ட போதிலும் மந்திரிகள் தங்களுடைய உத்தியோக காலத்தில் எவ்வித வேலைகளையும் செய்ய முடியவில்லை. ஆகையால் இன்னொரு தடவை மந்திரிகள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் சுயராஜ்யக் கட்சியாரல்லாதவர்கள் மந்திரிகளுக்கு விரோதமாகத் திட்டமாக ஓட்டுச் செய்வார்களென்று நான் சொல்லக்கூடும். 1921ம் வருஷத்தில் இருந்ததை விட இப்போது வங்காள சட்டசபை சுயராஜ்யக் கட்சி தொகையில் பலம் குறைந்திருந்த போதிலும் அது முன்னிலும் இப்போது கட்டுப்பாடுள்ளதாய் வருகிறது. சமீபத்தில் ஏற்பட்ட தோல்வியானது அவர்களுக்குள் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் உண்டு பண்ணிவிட்டது.

கார்ப்பொரேஷன் சுயராஜ்யக் கட்சி

கல்கத்தா கார்ப்பொரேஷனில் 1921ம் வருஷம் நடந்த பொதுத் தேர்தல் முதல் கொண்டே நாங்கள் சிறு பான்மையோராக இருந்து வருகிறோம். சென்ற வருஷம் ஆல்டர் மென் தேர்தலில் நின்ற ஐந்து சுயராஜ்யக் கட்சி மெம்பர்களில் ஸ்ரீஜே. எம் சென்குப்தா ஒருவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதிலிருந்து கார்ப்பொரேஷன் சுயராஜ்யக்கட்சியின் நிலைமை நன்கு விளங்குகிறது. என்றாலும் காங்கிரஸ் கட்சியார் ஸ்ரீ சென்குப்தாவை மேயராகத் தேர்ந்தெடுப்பதில் வெற்றி பெற்றார்கள். அதற்குக் காரணம் சில முகமதிய மெம்பர்கள் ஸ்ரீ சென்குப்தாவுக்கு ஓட்டுச் செய்வதாக ஒப்புக் கொண்டார்கள். இவ் வருஷம் ஐரோப்பிய மெம்பர்களும் நாமினேஷன் மெம்பர்களும், சில தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் சேர்ந்து, காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக ஒரு கூட்டுக் கட்சியை ஸ்தாபித்து,முகமதியர்களுக்கு உதவி செய்வதாக பெரும் பான்மை முஸ்லீம் மெம்பர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதனால் முஸ்லீம் சமூகம் நன்மை யடையவில்லை. காங்கிரஸ் கட்சியை முறியடிக்க ஹிந்து மெம்பர்களும் அதில் கலந்து கொண்டார்கள். இவ்வொப்பந்தம் நெடுநாளைக்கு நிற்காது என்பதை கல்கத்தாவில் ஒவ்வொருவரும் அறிவார்கள் ஏற்கனவே அக்கட்சியில் பிளவு ஏற்படுவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன காங்கிரஸ் மெம்பர்கள் பற்பல கமிட்டிகளில் ஸ்தானம் பெறுவதில் தடுத்தும் அக்கூட்டுக் கட்சி கார்ப்பொரேஷன் நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியவில்லை. சட்ட சபையைப் போல், கார்ப்பொரேஷனிலும் மூன்று மெம்பர்கள் கட்சித் துரோகம் செய்தார்கள். என்றாலும், எங்களுடைய கட்சி முன்னிலும் அதிகக் கட்டுப் பாடாக இருந்து வருகிறது. முகமதிய சமூகம், முஸ்லீம் மெம்பர்களின் செய்கையை ஆதரிப்பதில்லை. இது, மேயர் தேர்தலுக்கு முன்னும் பின்னும் நடந்த பொதுக் கூட்டங்களில் செய்யப்பட்ட பிரசங்கங்களிலிருந்து தெரியவரும். சென்ற தேர்தல், வகுப்புக் கலகங்களுக்குப் பின் நடந்தேறியதால் தான் இத்தகைய சங்கடம் எங்களுக்கு ஏற்பட்டது. அதன் பலனாக, வகுப்புக் கொள்கையும், தேசியத்துக்கு விரோதமாயுள்ளன பல மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். தற்காலம் வங்காளத்தில் எவ்வித மான உணர்ச்சியிருந்து வருகிறதென் பதை நகரயின் குஞ், குஷ்டி, ஹௌரா முதலிய இடங்களில் நடந்த முனிஸிபல் தேர்தல்களே விளக்கப்போதுமானது. அங்கு காங்கிரஸ் கட்சிக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. வங்காளத்தில் ஹௌரா இரண்டாவது பெரிய முனிஸிபாலிட்டியாகும். சமீப காலம் வரை அங்கு காங்கிரஸ் கட்சி எதிரிகளே எதிர்த்து நின்றது. கடைசியாக அது செல்வாக்கிழந்து விட்டது. தற்சமயம் வங்காளம் முழுவதும்காங்கிரஸ் கட்சி ஆதரிக்கப்படுகிற தென்பதில் சிறிதேனும் எனக்குச் சந்தேகம் கிடையாது. ஆனால் நாம் இப்போது நமது வேலைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முடித்தால் வங்காளம் முழுவதும் அதற்குத்தக்க பதிலளிக்கும்.

தொழிலாளர் கஷ்டம்.

இந்தியாவில் எங்கும் தொழிலாளர் போராட்டமிருந்து வருவதன் காரணத்தைப்பற்றி நான் கூற விரும்பவில்லை. அது உலகத்தில் எற்படக்கூடிய மாறுதலென்றே எனக்குப் புலப்படுகிறது. பம்பாயிலுள்ள தொழிலாளர்களின் போராட்டத்துக்குக் காரணமென்ன வென்பதை நான் திட்டமாக அறிந்து கொள்ளும் வரை, அதைப்பற்றி நான் எவ்வித அபிப்பிராயமும் கூறப்போவதில்லை. ஆனால், லில்லோ, காசிபூர் தொழிலாளர்கள் சம்மந்தமாக ஏற்பட்டுள்ள அமைதியின்மைக்கு முதலாளிகளே காரணஸ்தர்கள் என்று கூறுவேன். காசிபூர் லில்லோ ஆகிய தொழிற் சாலைகளில் ஏன் ஆட்களைக் குறைக்கவேண்டு மென்பது எனக்கு விளங்கவில்லை. ரயில்வேக்களுக்கு வேண்டிய கோடிக் கணக்கான சாமான்களை இங்கு சுலபமாகச் செய்யலாம். அவைகள் ஒவ்வொரு வருஷமும் கிரேட் பிரிட்டனிலிருந்தே வரவழைக்கப்படுகின்றன. இது தொழிலாளர்களுக்கு ஒரு சோதனை காலமாதலால் காங்கிரஸ் அவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டு மென்று உணர்கிறேன். அவர்களுடைய குறைகள் நியாயமான வைகளே.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை

சென்ற சில மாதங்களாக வங்காளத்தில் பற்பல சமூகங்களுக்குள் ஒற்றுமை வளர்ந்து வருகிறது. மாகாண சட்ட சபைகள் சம்மந்தமாகவும், காங்கிரஸ் திட்டங்களை நடத்தி வைப்பதிலும், குறிப்பாக, கமிஷன் பகிஷ்காரம் சுதேசி இயக்கம் சம்மந்தமாகவும், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒத்துழைத்து வருகின்றனர். நாம் நம்முடைய வேலைகளை ஒழுங்காகச் செய்து வரமுற்படுவோமானால், கூடிய சீக்கிரத்தில் வகுப்பு உணர்ச்சியை அடியோடு ஒழித்து விடலாமென்றும் ஒத்துழையாமை காலத்திலிருந்த ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்தி விடலாமென்றும் எனக்குத் திடமான நம்பிக்கையிருக்கிறது. நான் சிறையிலிருந்து வந்த பின்பு, வங்காளத்தின் நிலைமை சீர்பட்டு வருகிறது. நான் சிறையிலிருந்த காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் பிளவுகள் இப்போது வெகு துரிதமாக மறைந்து வருகின்றன. எல்லா வகுப்பினர்களும் தற்காலம் நெருக்கடியானநிலைமை ஏற்பட்டிருக்கிற தென்றும், இந்தியர்கள் தங்களுடைய வித்தியாசங்களை அகற்றி ஒற்றுமைப்படவேண்டு மென்றும் உணர்கின்றனர். நான் இதுவரை செய்துவந்த வேலைகளுக்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. சட்ட சபைகள், தற்கால ராஜிய வாழ்க்கையில் ஒரு முக்கிய விடமாகையால் நாம் சட்டசபை வேலைகளை முற்றிலும் புறக்கணித்து விடக்கூடாதென நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆகையால் நாம் சட்ட சபைகளில் நுழைந்து நமதுவேலைகளைச் செய்ய வேண்டும். சட்டசபை வேலைகளோடு, வெளியேயும் போதிய நிர்மாண வேலைகள் செய்யப்பட்டாலொழிய சட்டசபை வேலைகளால் பிரயோஜனம் ஏற்படாது. காங்கிரஸ், சட்டசபைகளை விட்டு விலகுவதால் நன்மை ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. அம்மாதிரி செய்தால் காங்கிரஸ் விரோதிகள் சட்டசபைகளைக் கைப்பற்றிக்கொண்டு தாங்களே உண்மையான ஜனப்பிரதிநிதிகளென பெருமைபேசிக் கொள்வார்கள். ஆகையால் சட்டசபை வேலைகளுடன் தேச நிர்மாணவேலைகளிலும் நாம் தற்சமயம் மிகுந்த ஊக்கம் செலுத்தவேண்டியது அவசியமாகும். —பிரீபிரஸ்

ஐரோப்பிய சுகாதார உத்தியோகஸ்தர்

போய் வதந்தியாம்

உதகமண்டலம், மே 2

ஐரோப்பியர் ஒருவர் சென்னை சுகாதார டைரக்டராக நியமிக்கப் போவதாகத் தெரிகிறதென "சுயராஜ்யா"வில் வெளிவந்திருக்கும் செய்திக்கு ஆதாரமில்லை யென்றும், அந்த விஷயமாக இன்னும் எதுவும் முடிவு செய்யப் படவில்லை யென்றும் தெரிகிறது. —அ. பிரஸ்

இந்தியா சட்டசபை

பெண்களுக்கு பிரதிநிதித்துவம்

சர்க்கார் பதில்

சென்னை மே, 2.

சென்னை இந்திய பெண்கள் சங்க கௌரவக் காரியதரிசி எழுதுகிறார்—இந்தியா சட்டசபையில் குறைந்தது இரண்டு பெண்களையாவது வைசிராய் நாமிநேஷன் செய்ய வேண்டுமென்று மேற்படி சங்கத்தார் கேட்டுக் கொண்டனர். சர்க்கார் அனுப்பியிருக்கும் பதில் எங்களுக்கு ஏமாற்றத்தைத் தருகின்றது. அதாவது "வைசிராய் மேற்படி சங்கத்தாரின் விருப்பத்திற்கு இணங்க தற்போது எதையும் செய்ய முடியாத தற்கு வருந்துகின்றார். இது எதிர்பாராத பதிலாகும். என்றாலும் 'வைசிராய் இது விஷயமாய் என்ன செய்யக் கூடு'மென்பதைப் பற்றி நாம் விசாரித்துவருகிறோம்"

அ. பிரஸ்.

தொழிலாளர் குழந்தைகள் விடுதி

மகாத்மா திறந்து வைத்தார்.

ஆமதாபாத் மே 1.

சேட் கஸ் தூரிபாய் லால்பாய்க்குச் சொந்தமான ராய்பூர் ஆலையில் ஏற்படுத்தப்படும் குழந்தைகள் விடுதியை மகாத்மா இன்று மாலை திறந்து வைத்தார். சேட்கஸ் தூரிபாய் தமது ஆலை இதுவரை தொழிலாளர்களுக்காகச் செய்துவந்ததெல்லாம் பூர்வாங்கமான வேலையென்று குறிப்பிட்டார்.

பின்பு மகாத்மாகாந்தி பேசுகையில், ஆலைச் சொந்தக்காரர்கள் தொழிலாளர்களைத் தங்களுடைய குழந்தைகளாகவும் சகோதரர்களாகவும் நடத்த வேண்டும். அவர்களிடம் நல்ல வேலை வாங்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் அவர்களைச் சரியாக நடத்துவது இந்தியர்களின் தர்மக் கொள்கையல்ல. அக்கொள்கையை ஆலைச் சொந்தக்காரர்கள் ஞாபகப்படுத்திக் கொள்வார்களானால் என் போன்றவர்கள் தொழிலாளர்கள் யூனியன்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. எனக்கு ஆமதாபாத் ஆலைக்காரர்களிடம் மிகுந்த நம்பிக்கையுண்டு. நான் ஆமதாபாத் வந்தது முதல் அவர்களுடன் நெருங்கிப்பழகிவருகிறேன். அவர்களிடம் ஜீவகாருண்யமிருப்பதனால் தான் ஆமதாபாத்தில் எவ்விதகஷ்டமும் நேரவில்லை.

அ. பிரஸ்

கிருஷ்ணா ஜில்லா போர்டு தகராறு

கலெக்டர் தலைவராக நியமிக்கப்பட்டார்

(நமது விசேஷ நிருபர்)

உதகமண்டலம், மே, 3

கிருஷ்ணா ஜில்லா போர்டு தகராறுகளை முன்னிட்டு மேற்படி ஜில்லா போர்டைத் திருத்தியமைக்க கலெக்டரை போர்டு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல் ஜாப்தா தயாரிக்கப்படாததால் தாலூகா போர்டுகள் தேர்தல்களும் தடைப்பட்டுவிட்டதால் தாலூகா போர்டுகளுக்கும் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்களைத் தலைவர்களாக நியமித்து போர்டுகளைத் திருத்தியமைத்துத் தேர்தல்கள் நடத்தத்தக்க ஏற்பாடுகள் செய்யும்படி அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

முதலாவது பார்ப்பனரல்லாதார் மகாநாடு

வரவேற்புக் கமிட்டி கூட்டம்

மதுரை ராமனுதபுரம் ஜில்லா முதலாவது இளைஞர் மகாநாட்டின் வரவேற்புக்கமிட்டிக்கூட்டம் மே மாதம் 6ந்தேதி சிவகங்கா காஸ் மாபாஷிட்டன் கிளப்பில் நடைபெறும். பார்ப்பனரல்லாத இளைஞர் எல்லோரும் அக் கூட்டத்துக்கு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாலுகா போர்டு தலைவர் ஸ்ரீ ராமசந்திர சேர்வை வரவேற்புக் கமிட்டி தலைவர்.

அ. பிரஸ்

மலையாள குடிவாரமசோதா.

சட்ட மெம்பரால் திருத்தப்படலாம்.

(நமது விசேஷநிருபர்)

உதகமண்டலம், மே, 3

மலையாளக் குடிவார மசோதாவைக் குறித்த ராகவய்யாகமிட்டி அறிக்கை இன்னும் வெளியாகவில்லை யெனத்தெரிகிறது. கனம் சட்ட மெம்பர் திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் சில விஷயத்தைக்குறித்து நன்காலோசித்து தக்க ஏற்பாடுகள் செய்யக் கூடுமெனத்தெரிகிறது.

மகாராஷ்டிர மகாநாடு

விஷயாலோசனைக்கமிட்டி கூட்டம்

பூரண சுயேச்சைத்தீர்மானம்.

பூனா, மே, 2

மகாராஷ்டிர மாகாண மகாநாட்டின் விஷயாலோசனைக்கமிட்டி கூட்டம் ஒன்று இன்று திரு. சுபாஷ் சந்திர போசின் தலைமையின் கீழ் கூடிய போது சைமன்கமிஷனை பகிஷ்கரிப்பதென்றும், பூரணசுயேச்சை வேண்டுமென்றும், சுதேசி சாமான்களையே உபயோகப்படுத்த வேண்டுமென்று ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அ. பிரஸ்.

ஜில்லா மாஜிஸ்டிரேட் கொலை வழக்கு

எதிரிக்கு பைத்தியமா?

கல்கத்தா மே.2.

டேவிஸ் கொலை வழக்கு இன்று காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கோர்ட்டில் மூச்சு விடமுடியாதபடி ஜனங்கள் கூடியிருந்தார்கள். எதிரி பஜ்லால் ரஹிமான் தாம்ஏதோ சொல்ல விரும்புகிறவன் போல் வாயில் வந்தபடி உளறினான். உடனே எதிரிக்கு நல்ல புத்திசுவாதீனமிருக்கிறதா வென்று பார்க்கும் பொருட்டு ஸிவில் சர்ஜன் வரவழைக்கப்பட்டார். எதிரியை 10 நாட்கள் வரை டாக்டர் பார்வையில் வைத்திருக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்திரவிட்டிருக்கிறார். இதனால் வழக்கு மே மாதம் 14ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிரீ. பிரஸ்.

பிக்கானீர் ரயில் விபத்து

அபாயமில்லை

பிக்கானீர் மே, 2

ஒரு இஞ்சினும் இரண்டு சாமான் வண்டிகளும், தோலிப்பாகலுக்கும், ஹனுமான் காருக்கும் நடுவே 115 வது மைலில் தண்டு வாளத்தைவிட்டு இறங்கிவிட்டன. அதனால் நேராகச்செல்லும் வண்டிப் போக்கு வரத்துகள் தடைபடுத்தப்பட்டன. பிரயாணிகள் அங்கிருந்து வேறு வண்டியில் கடத்தப்பட்டனர், ஒருவருக்கும் காயமேற்படவில்லை. இன்று வண்டிகள் நேராகச் செல்கின்றன.

பிரீ. பிரஸ்.

அடுத்த காங்கிரஸ்.

வரவேற்பு தலைவர் பதவிக்கு போட்டி.

கல்கத்தா, மே, 2,

கல்கத்தா காங்கிரஸ் வரவேற்புக் கழகத்தலைவர் பதவிக்கு பல உள்ளூர் சுயராஜ்யக் கட்சித்தலைவர்கள் போட்டி போடுவதனால். ஏற்கனவே கட்சியில் ஏற்பட்டிருந்த பிளவு அதிகப்பட்டு விட்டதெனத் தெரிகிறது. இப்போது ஸ்ரீ சென்குப்தா, நிர்மல சந்திரர், ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் ஆகிய மூவரும் அபேட்சகர்களாக நிற்கிறார்களெனத் தெரிகிறது. கட்சி மூன்று பிரிவாகப் பிரிந்து ஒவ்வொன்றும் ஒவ்வொருவரை ஆதரிக்கின்றது. பிரீ. பிரஸ்

கொல்லத்தில் வேலை நிறுத்தம்.

மே தின கொண்டாட்டத்துக்கு ஆக்ஷேபனை.

திருவனந்தபுரம், மே. 3.

கொல்லத்தி லுள்ள ஹாரிசன் கிராஸ்பீல்டு, தாமஸ் ஸ்டீபன், ஆகிய ஐரோப்பியக் கம்பெனிகளிலுள்ள தொழிலாளர்கள் நேற்று மத்தியானம் 12 மணி முதல் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். மேதினக்கொண்டாட்டத்தை முன்னிட்டு தொழிலாளர்களுக்கு ரஜா கொடுக்க அதிகாரிகள் மறுத்ததைக்கண்டித்தே அவர்கள் வேலைநிறுத்தம்செய்தார்களாம்.

அ பிரஸ்.

உதகமண்டலத்தில் பனிக் கட்டி மழை

டென்னிஸ் பந்தயம் நிறுத்தப்பட்டது

(நமது விசேஷ நிருபர்)

உதக மண்டலம், மே, 3

நேற்று மாலை உதக மண்டலத்தில் பலமான பனிக் கட்டி மழை பெய்தது. இதனால் இங்கு நடக்க விருந்த டென்னிஸ் பந்தய விளையாட்டுகளும் நிறுத்தப் பட்டன.

ஆஸ்பத்திரியில் தற்கொலை

வெள்ளை சிப்பாயின் விபரீதச்செயல்

ஜபல்பூர், மே, 1

ராணுவசிக்னல் தேர்ச்சி ஸ்தாபனத்தின் ஆசிரியரானடாய் ஜபல்பூர் ராணுவ ஆஸ்பத்திரியிலிருக்கும்போது தன் கழுத்தை அறுத்துக் கொண்டிறந்தார். அவர் இங்கிலாந்துக்குத் திரும்பிச்செல்ல ஏற்பாடு செய்திருந்தும் சில காலமாக ஜுரமாயிருந்ததால் பிரயாணம் தள்ளி வைக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தார். இவ்வாறு அவர் திடீரென்று தற்கொலைபுரிந்து கொண்டதற்கு எவ்வித காரணமும் தெரியவில்லை. அவர் தம் தாயுக்குக்கடிதமெழுதக்கருதி "அன்பு மிக்க அன்னைக்கு" என்று எழுதியதுடன், பிறகு கை தடுமாறி காகிதத்தில் கண்டபடி கிறுக்கி விட்டிருப்பதாகத் தெரிகின்றது. இதனால் அவருக்கு திடீரென்று மனோநிலை தடுமாறி இத்தகைய விபரீதச் செயலுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

விலக்கச் சென்றவன் மரணம்.

கோவையில் கோர சம்பவம்.

கோயம்புத்தூர், மே, 1.

வேளாள வகுப்பைச் சேர்ந்தவனும், கூலித்தொழில் செய்பவனுமான கீழ்தாண்டி என்பவன் சென்றசனிக்கிழமையன்றிரவு தன் மனைவிக்கும் வைப்பாட்டிக்கும் தனக்கு மேற்பட்டிருந்த சச்சரவில் தலையிட்டு விலக்கிவிட வந்தமனிதனைக் கத்தியால் குத்திக்கொன்று, தன் மனைவியையும் பலத்த காயப்படுத்தியதாகத் தெரிகிறது. அவன் வசிக்கும்தெருவிலேயே அவன் வைப்பாட்டியும்வசித்து வந்தாள். தன் மனைவிக்கும் வைப்பாட்டிக்கும் சச்சரவேற்பட்டிருந்ததைக் குறித்து கீத்தாண்டி தன் மனைவியைச் சண்டைபோட்டு அடித்தபோது ஒருவன் குறுக்கிட்டு விலக்கி விட்டதால் அவனைக் கீத்தாண்டி குத்தி வீழ்த்தியதாயும், காயத்தால் அம்மனிதன் உடனே இறந்துபோனதாயும் சொல்லப்படுகின்றது. அவனுடைய மனைவியும் பலமான காயங்களுடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றாள், இச்சம்பவம் நிகழ்ந்தும் அவன் ஓடிவிட்டான். போலீசார் விசாரித்து வருகின்றனர்.

சிறு பெண் விற்பனை

இருவர் கைதியாயினர்

பலாகர், மே, 1

குலாப் என்னும் ஸ்திரீயும், அவளுடைய நண்பனுகிய சுந்தர தேவலால் என்பவனும் 15 வயதுள்ள சுகதேவி என்னும் சிறு பெண்ணை இந்தூரிலிருந்து நாசோரம் செய்து அழைத்துச் சென்று அப்பெண்ணை விற்க முயன்றதாக குஜராத்போலீசாரால் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர். இத்தகைய இழி தொழிலில் ஈடுபட்ட எதிரிகளிருவரும் கைதி செய்யப்பட்டு காவலிலிருக்கிறார்கள். அச்சிறு பெண்ணை விசாரணை முடியும் வரை அனாத ஆஸ்ரமத்தில் வைத்திருப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது.

சட்ட மெம்பர் சுற்றுப் பிரயாணம்

சென்னெட் நாயர் காட்டுக்கு விஜயம்

(நமது விசேஷ நிருபர்)

உதகமண்டலம், மே, 3

புதிய சட்டமெம்பர் கனம் திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் பாலக்காட்டுக்கு விஜயம் செய்து சென்னெட் நாயர்காட்டு அபிவிருத்தி திட்டத்தைக் கவனிப்பார் எனத்தெரிகிறது. மேலும் அவர் நெடுங்காலமாகச் சென்னை சர்க்காரால் முக்கியமாக ஆலோசிக்கப்பட்டுவரும் மரம் அறுக்கும் மில்களைச்சென்று பார்வையிடுவதுடன், காட்டுக்குள் சென்று மரம் வெட்டப்படும் விதம், அவற்றை ஏற்றியனுப்பும் முறை முதலியவற்றையும் பார்வையிடுவாரெனத் தெரிகின்றது.

பின்னர் கோயம்புத்தூருக்கு விஜயம் செய்யும்போது விடுதலை பெற்ற கைதிகளின் உதவிச்சங்கக் கட்டடத்தைத் திறந்துவைத்து,சிறைச்சாலைக்கும், காட்டிலாகா கலாசாலைக்கும் விஜயம் செய்வாரெனத் தெரிகிறது.

புதியசட்ட மெம்பருக்கு வாழ்த்து.

விக்டோரியா பப்ளிக் ஹாலில் பெருங் கூட்டம்.

சென்னை பிராமணரல்லாதார் பெருமகிழ்ச்சி.

சென்னை. மே, 3

திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் சென்னை சர்க்கார் சட்ட மெம்பராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டுவதன் பொருட்டு நேற்று மாலை சென்னை திராவிட சங்கத்தின் ஆதரவில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் ராவ் பகதூர் டாக்டர் ஸி. நடேச முதலியார் அவர்கள் தலைமையில் பெருங் கூட்டம் கூடியது. கூட்டத்திற்குத்திரளாக மாணவர்களும், பிரபலஸ்தர்களும், ஏனைய பிராமணரல்லாத நகரவாசிகளும் வந்திருந்தனர். நேற்று கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுள் முக்கியமாக சர். கே. வி. ரெட்டி நாயுடு, ராவ் பகதூர் டாக்டர். ஸி. நடேச முதலியார், ஸ்ரீமான்கள் வி. சக்கரை செட்டியார், எ. சிவராம மேனன் வி. சிவபிரகாசமுதலியார், எம். தாமோதரம் நாயுடு, ஆர். மதன கோபால் நாயுடு, சுரேந்திர நாத் ஆரியா, ஜி. செல்வபதி செட்டியார், எல். வி. குருசாமி, டி. எஸ். நடராஜப் பிள்ளை, எஸ். ஜி. ரங்கராமாநுஜம், பி. என். மார்த்தாண்டம், பிள்ளை கே. வி. மேனன். ஜே, எஸ். கண்ணப்பர், தீனதயாளு முதலியார், கே. ராகவய்யா, நரசிம்முலு நாயுடு, ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் முதலியவர்களும் மற்றும் பலரும் வந்திருக்கக் காணப்பட்டனர். அக்கூட்டத்துக்கு ராவ்பகதூர் டாக்டர் நடேசமுதலியார் தலைமை வகிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுவதாக ஸ்ரீமான் வி. சிவப்பிரகாசமுதலியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, திரு. டி. எஸ். நடராஜப் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு பெருத்த கரகோஷத்தினிடையே டாக்டர் நடேசமுதலியார் கூட்டத் தலைமை வகித்தார்.

டாக்டர். நடேச முதலியார்.

அக்கிராசனர் டாக்டர் நடேச முதலியார் அவர்கள் தமது முகவுரையில் கூறியதாவது:-திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் சென்னை சட்டமெம்பராக நியமிக்கப்பட்டதைக் குறித்து பாராட்டி நம் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்வதன் பொருட்டு இன்று திராவிட சங்கத்தினாதரவில் இங்குகூடியிருக்கின்றோம். பிராமணரல்லாதாரியக்கம் துவக்கப்பட்டது முதற்கொண்டும், அதற்கு முன்னரும் இச்சங்கம் பாராட்டத்தக்க வேலை செய்து வருவதை நீங்கள் நன்கறிவீர்கள். பதினேழு வருடங்களுக்குமுன் நமது காலஞ்சென்ற தலைவர்கள் டாக்டர் நாயரும், சர் தியாகராய செட்டியாரும் ஒன்று சேர்ந்து பிராமணரல்லாத மக்கள் முன்னேற்றத்திற்காக உழைக்க நமது இயக்கத்தை ஸ்தாபித்தனர். பிராமணரல்லாதாருக்குச் சங்கடமான நிலைமை ஏற்படும் போதெல்லாம் சென்னை திராவிட சங்கம் அவ்வப்போது உதவிபுரிய முன்வந்து சங்கடங்களை நீக்கிவைத்திருக்கின்றது. சில வருடங்களுக்குமுன் மிக நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருந்த போது திராவிட சங்கத்தின் ஆதரவில் இங்குக் கூடிய பெருங் கூட்டமொன்றில் நமது மாகாண சர்க்கார் சட்டமெம்பர் பதவி ஒரு பிராமணரல்லாதாருக்களிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தினோம். மக்களுள் நூற்றுக்கு 97 வீதமானவர்கள் பிராமணரல்லாதாராயிருந்தும் பிரிட்டிஷ் சர்க்கார் நமது நேர்மையான உரிமைகளையும் கோரிக்கைகளையும் கவனியாது அலட்சியம் செய்து வருகின்றது. சர்க்கார் ராஜாவிஸ்வாசிகளான நண்பர்களைப் புறக்கணித்து விரோதிகளை சந்தோஷப்படுத்தும் சூழ்ச்சியை மேற்கொண்டிருக்கின்றது. இதனால் நண்பர்கள் நம்பிக்கை யிழந்து விரோதிகளாகி விடுகின்றனர் என்பதை உணரவில்லை போலும். பிராமணரல்லாத மக்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பல கஷ்டமான நிலைமையிலும் பேருதவி புரிந்து வந்திருக்கின்றனர். மகாயுத்தத்தின் போது பிரிட்டிஷ் சர்க்கார் பெருந்தொல்லையிலீடுபட்டுத்தடுமாறி நிற்கும் நிலையில் சென்னை மாகாண பிராமணரல்லாதார் தான் அதற்குப் பேருதவியளித்தனர். (கரகோஷம்) சென்னை சர்க்காரின்கீழ் பரிபாலன இலாகா போலீஸ் இலாகா முதலியவற்றின் அதிகாரம் ஒரு குறிப்பிட்ட வகுப்பு ஆசாமி கையிலிருந்தமையால் நமது பிராமணரல்லாத மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டு வந்தனர். இத்தகைய சங்கடத்தை நீக்குதற்கு நாம் சட்ட சபையில் எவ்வளவு முயற்சி செய்தும் அத்தொல்லை ஒழிவதற்குக் காலம் வராமலிருந்தது. சென்ற பிப்ரவரி மாதந்தான் பிரிட்டிஷார் நமது நேர்மையான உரிமைகளை ஒரு சிறிதாவது உணரத்தலைப்பட்டனர் என்று சொல்ல வேண்டும். இன்னும் அவர்கள் சரிவர கண் திறக்கவில்லை என்றே சொல்லுவேன். சட்டமெம்பர் பதவி பிராமணரல்லாதாருக்களிக்க படவேண்டுமென்பதை வற்புறுத்த சென்னை திராவிட சங்கத்தின் ஆதரவில் இங்கு பெருங் கூட்டங்கூட்டி அதனைவற்புறுத்தி பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இந்தியா மந்திரிக்கும் பல தந்திச்செய்திகள் அனுப்பி பெருங் கிளர்ச்சிசெய்தோம். அவ்வாறிருந்தும் பிரிட்டிஷ் சர்க்கார் தமது மயக்கத்திலிருந்து விடுபடாது மீண்டும் ஒரு பிராமணரையேநியமித்தனர். அதிர்ஷ்டவசத்தினால் அவர் அவர்களையே முட்டாள்களாக்கக் கூடியவாறு ஒன்றை நினைத்து ஒன்று செய்வதற்கொப்ப அந்த ஸ்தானத்திலிருந்து விலகினர். மீண்டும் நமது கிளர்ச்சி பலப்பட்டு தந்திகள் பல அனுப்பப்பட்ட போது தான் இந்தியா மந்திரியும், அதிகாரிகளும் கண் விழித்தனர். இந்நியமனம் ராஜீய சந்தர்ப்பத்தை முன்னிட்டதாவென்று நான் சொல்லமுடியாது. ஒரு வேளை பிராமணரல்லாத மக்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காக இந்நியமனம் செய்யப் பட்டிருக்குமோ வென்றும் சிலர் கருதுகின்றனர். எப்படியாயினும் இப்பதவி ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடமேயிருந்து வந்ததால் ஏகபோக உரிமை பாராட்டும் வகுப்பைச் சேர்ந்த சுயராஜ்யக்கட்சியார் தமது சூழ்ச்சிகளுக்கு ஏற்ற சாதனமாகக் கொண்டு நமக்குப் பல இன்னல்களும் விளைத்து வந்தனர். யாராவது மற்று எவரையாவது சங்கடப்படுத்தினால் அப்போது எல்லாம் ஜஸ்டிஸ்கட்சியார் செய்தது என்றுதான் சொல்லப்பட்டு வந்தது. இத்தகைய விஷமப் பிரசாரத்திற்கும் பல குறும்புச் செயல்களுக்கும் இத்தகைய உயர்ந்த நியமனங்களும் அவர்களுக்கு ஒருவிதத்தில் பக்கபலமாயும் உதவியாயுமிருந்தன. இந்நிலைமை ஒழிந்து நமது பிராமணரல்லாத பிரபலஸ்தர் ஒருவர் அதிலும் விசேஷ அனுபவமும் திறமையும் மிகுந்த கிருஷ்ணன் நாயர் அவர்கள் சட்ட மெம்பராய் நியமிக்கப்பட்டதுபற்றி நாம் விசேஷ மகிழ்ச்சியடைகின்றோம்.

சர்.கே.வி. ரெட்டிநாயுடு.

அடுத்த படியாக பெருத்த கரகோஷத்தினிடையே சர்.கே.வி. ரெட்டிநாயுடு அவர்கள் "திவான்பகதூர் எம்.கிருஷ்ணன் நாயர் அவர்கள் சென்னை சட்டமெம்பராக நியமிக்கப்பட்டதைக் குறித்து சென்னைபிராமணரல்லாதாரின் இப்பொதுக் கூட்டத்தார் தமது மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்" என்னும் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசுகையில், திவான்பகதூர் எம். கிருஷ்ணன்நாயரை அறியாதார் உங்களுள் ஒருவருமிருக்கமாட்டீர்கள் என்பது நிச்சயம். அவர் தென் இந்தியாவிலுள்ள உத்தம நகரவாசிகளுள் முதன்மையானவர் என்று சொல்வது மிகையாகாது. (கரகோஷம்) நான் அவரை சென்ற இருபத்தைந்து வருடங்களாக நன்கறிவேன். அவர் ஒருபோதும் கோபமடைந்ததும் ஒருபோதும் பொய் சொன்னதுமில்லை. (கேளுங்கள்) அவ்வித அருங்குணங்களுடைய ஒருவரை உத்தமர் எனச்சொல்வதில் என்ன தடை? மலையாளத்திலிருந்து பல விவேகிகளும் உத்தமர்களும் தோன்றி யிருக்கின்றனர். நமது காலத்திலேயே இப்பெரும் இயக்கத்தை ஸ்தாபித்த நமது மாபெருந்தலைவர் டாக்டர் டி. எம். நாயர் அவர்களும் மலையாளத்தில் பிறந்தவர்தான். (பெருத்த கரகோஷம்) நாட்டின் நலத்திற்காக, தாம் வகித்திருந்த இந்தியா சர்க்கார் நிர்வாக சபை மெம்பர் பதவியை ராஜிநாமா செய்த பெரியார் சர் சங்கரன் நாயர் அவர்களும் மலையாள வாசிதான். (கரகோஷம்) மற்றும் பல பிரபலஸ்தர்களான ஜட்ஜிகளும் பெரியார்களும் மலையாளத்தில் தோன்றியிருக்கின்றனர். திரு. கிருஷ்ணன் நாயர் அவர்களும் மலையாள வாசி என்பது அந்நாட்டுக்கே ஒரு மதிப்பை யளிக்கவல்லதாயிருக்கின்றது. இத்தகைய நியமனத்தைக் குறித்து சென்னை பிராமணரல்லாதார் சந்தோஷிக்க இதுவே போதிய காரணமாகும். திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர் தற்போது இதன் இந்தியா எதிர்பார்த்திருக்கும் பல தேசிய ராஜீய வாதிகளை விட பலவாற்றானும் மேலானவர் என்பதில் சந்தேகமில்லை. (கரகோஷம்) அவர் மிண்டோ மார்லி சீர்திருத்தத்திற்கு முற்பட்ட கால முதற்கொண்டிருந்தே சட்டசபை மெம்பராக நம்மக்களுக்காக உழைத்து வருகின்றார். அவர் பேச்சை கேட்போர் யாரும் அவரை உண்மையான உத்தம தேசபக்தர் எனச்சொல்லாதிருக்கமுடியாமல் அவர் திருவாங்கூர் பிரதம நீதிபதியாயும் திவானாகவும் வேலை பார்த்து விசேஷ அனுபவமும்திறமையுமுடையவராயு மிருக்கின்றார். கவர்னர் திவான்பகதூர் கிருஷ்ணன் நாயர் தான் இத்தகைய உத்தியோகத்திற்கு லாயக்குள்ளவர் என்று பட்டதனால் தான் அவரை நியமித்தார் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய நியமனத்தால் ஜஸ்டிஸ் கட்சியின் இருபிரிவுகளையும் ஒன்றாக்கி ஐக்கியப் படுத்தும் அம் சமாயிற்று என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (பெருத்த கரகோஷம்) கோவை தீர்மானத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள மறுத்து மந்திரி சபை எதுவாயினும் பிராமணரல்லாத மந்திரிகளின் ஆட்சிக்கு ஆதரவளிக்க வேண்டுமென்பது எங்கள் கருத்தாயிருந்தது. இரட்டையாட்சியைக் கொல்ல வேண்டுமென்ற கருத்துடையவர்களும் திரு. கிருஷ்ணன் நாயரின் ஐக்கிய சக்தியால் மந்திரி சபைக்கு ஆதரவளிக்க கூடுமென்று நம்புகிறேன். இந்நியமனத்தால் இயல்பான கிளர்ச்சியும், இயல்பான கிளர்ச்சிக்கட்சியும் வெற்றிபடைந்ததென்று சொல்லுவேன், இந்நாட்டில் பிராமணரல்லாதார் நூற்றுக்கு 97 வீதமானவர்களாயும் நூற்றுக்கு நூறு வீதமான வரிசெலுத்துபவர்களாயும், நாட்டில் பெரும்பான்மையான நிலபல முடையவர்களாயுமிருந்தும் அவர்களுக்கு நாட்டின் நிர்வாகத்தில் போதிய பங்கில்லாதிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். மந்திரி சபையைக் குறித்து வெளியே எவ்வளவு பேசிய போதிலும் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் தேசோத்தாரகர் என்ற பெரும் பெயர் படைத்தவர்களும் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஜில்லா போர்டு முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் சில நியமனங்கள் வாங்கிக் கொடுப்பதற்காக மந்திரிகளின் அறைகளில் சென்று தொங்கிக் கொண்டிருந்தார்கள். (வெட்கம்) இனி இத்தகைய சூழ்ச்சிகள் எவையும் பலியா, திவான்பகதூர் கிருஷ்ணன் நாயரின் நியமனம் இயல்பான கிளர்ச்சியின் பெரும் வெற்றி என்பது மறுபடியும் வற்புறுத்திக்கூற விரும்புகின்றேன். சட்ட சபையிலுள்ள ஜஸ்டிஸ் கட்சிக்காரர் இந்நியமனத்தைச் சர்க்காரிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கியதாகச் சொல்லும் வதந்தி வீண் புரளியேயாகும். கவர்னர் விஷயங்களைச் சீர்தூக்கி தீவிர ஆலோசனையின் பின்புதான் இத்தகைய நியமனம் செய்திருக்கின்றார் என்பது முக்காலும் உண்மை. இந்நியமனம் ஜஸ்டிஸ் கட்சியின் செல்வாக்கின் பயனுய் ஏற்பட்டதென்றாலும் அதுவும் இயல்பான கிளர்ச்சியின் வெற்றி என்பதில் என்ன சந்தேகம்? கவர்னர் இயல்பான முறையில் நன்காலோசித்து அப்பதவிக்குத் தகுதியான ஆற்றலும் அனுபவமும் உடைய ஒருவரை நியமித்திருப்பது விசேஷமாக பாராட்டத் தக்கது. சென்னையில் சீர்திருத்தங்கள் விசேஷ வெற்றியுடன்நடத்திக்காட்டப்பட்டிருக்கின்றதென்பதைப் பல பிரபலஸ்தர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். இதன்சம்பந்தமாக சைமன் கமிஷனைக் குறித்தும் இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டுவதும்என் கடமையாயிருக்கின்றது இந்தியா சட்டசபையைக் குறித்தமட்டில் அது பிராமண ரல்லாதாரின் பிரதிநிதித்துவ மானதெனச் சொல்ல முடியாது. (கேளுங்கள்) சென்னை மாகாணப் பிரதிநிதிகள் என்னும் பேரால் அங்கு சென்றிருப்பவர்களில் பத்தில் எட்டுபேர் பிராமணரல்லாதார் நன்மைகளுக்கு உலைவைக்கும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாகும். அத்தகைய ஏகபோக உரிமைக்கொள்கையை உடைத்தெரிவதற்கோ இன்று நாம் கிருஷ்ணன் நாயர் நியமனத்தைப் பாராட்டக் கூடியிருக்கின்றோம். இந்தியா சட்ட சபை இந்தியாவின் பிரதிநிதித்துவமான சபை எனச் சொல்லிக் கொள்ளப்பட்ட போதிலும் தென் இந்தியாவைக் குறித்தமட்டில் அதுபிரதிநிதித்துவமான சபையாகாது (கேளுங்கள்) அது. பிரதிநிதித்துமான சபையாயிருக்க வேண்டுமாயின் மறு தேர்தல் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். சென்ற தேர்தலில் பெரும் பாலும் பிராமணரல்லாதார் இந்தியா சட்ட சபைக்கு அபேட்சகர்களாக நிறுத்தப்படவேயில்லை. இந்தியா சட்ட சபைக் கமிட்டி பிரதிநிதித்துவமானதாயிருக்க வேண்டுமாயின் அதற்குப் புது தேர்தல் ஏற்பட வேண்டியதவசியம். அவ் வாயின்றி ராயல்கமிஷன் இந்தியா சட்ட சபைக் கமிட்டி நியமித்து பின்னும் அச்சபைக்குப் பல சாதகங்களும் உரிமையும் வழங்குமாயின் பிராமணரல்லாதாராகிய நாம் அதனை ஆக்ஷேபித்து கண்டிக்கவேண்டியதுநமது முதற்கடமையாகின்றது. இந்தியா சட்ட சபையில் இம்மாகாணத்தின் பிரதிநிதிகள்என்றுசொல்லிக்கொள்பவர்கள் அங்கு பேரும் பெச்சுகள் ஆகாயமளாவ வெள்ளையர் மெச்சிக் கொள்ளப் பேசிவிட்டு இங்குவந்து வருணாஸ்ரதர்மத்தை ஊட்டி வளர்க்கின்றனர் (வெட்கம்) கோடிக்கணக்கான ஏழை ஆதிதிராவிட மக்களின் உரிமைகளை அலட்சியம் செய்து மானிடர்களாகக் கருதாது மிருகங்களுக்கும் இழிவாக நடத்தி வருவதை ஒழிக்க கருதாதவர்களும், வைக்கம் போரில் ஒரு சிறு விரலையும், அசைக்கக் கருதாதவர்களும், கல்லிடைக் குறிச்சி அக்கிரஹாரத்தை ஆதரித்த பெரியார்களும்இந்தியா சட்டசபையில் இம்மாகாணத்தின் கோடிக்கணக்கான மக்களுக்குப் பிரதிநிதிகளா யிருக்கின்றனர்! இத்தகையவர்களடங்கிய கமிட்டியை பிரதிநிதித்துவமான கமிட்டி என்று சொல்லக்கூடுமா? இதனை நாம் அப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? பிராமணரல்லாதாருக்கு ஒருவிதத்திலும் பிரதிநிதித்துவ மற்றதான அக்கமிட்டியை நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. இந்நியமனத்தைக் குறித்து நாடு முழுதும் பிராமணரல்லாதார் திருப்தியும் மகிழ்ச்சியு மடைந்திருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஏகபோக உரிமை பாராட்டும் சுதந்திரம் ஒழிந்து உண்மையான திறமையும் அனுபவமுமுள்ள நேர்மையான உரிமை கொண்ட பிராமணரல்லாதார் ஒருவர் நியமிக்கப்பட்டதை நம்பெரிதும் பாராட்டுகின்றோம் எனக் கூறினர்.

திரு. வி. சக்கரை செட்டியார்,

அடுத்தபடியாக திரு. வி. சக்கரை செட்டியார் தீர்மானத்தை ஆமோதித்துப்பேசுகையில், உத்தியோகஸ்தர்களைக் குறித்து தாம் சந்தோஷிக்கவில்லையாயினும் இம்மாகாணத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் பொது வாழ்வில் செல்வாக்கைச் செலுத்தி நன்மையோ தீமையோ விளைக்கத்தக்கதாயிருப்பதால் தாம் ஒரு வகையில் கிருஷ்ணன் நாயர் அவர்கள் நியமனத்தைக் குறித்துச் சந்தோஷிக்காமல் இருக்க முடியாதென்றும், அவர் பிராமணரல்லாதார் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வார் என்பதில் சந்தேகமில்லை என்றும், இந்நியமனம் வெளியிடப்பட்ட பிறகும் கூட சில தேசிய பத்திரிகைகள் சந்தேகத்திலுழன்று வந்திருக்கின்றன வென்றும், இந்தியாவைக் குறித்த மட்டில் ராஜவிஸ்வாசமென்பது ராஜீய அவசியாவசியத்தை யொட்டிய செய்கைகளென்றே சொல்லவேண்மென்றும் கூறினர். பின்னும் அவர், பிராமணர்களுள் இருபிரிவாக ஒரு பிரிவார் உத்தியோகங்களைக் கைப்பற்றி அதன் செல்வாக்கை நாட்டின் பொது வாழ்வில் புகுத்துபவர்களாயும், மற்றொரு பிரிவார் இன்றைக்கே சுயராஜ்யம் பெற்றுவிடுபவர்கள் போல ராஜீயக் கிளர்ச்சி செய்பவர்களாயிருக்கின்றனர். சமீபத்தில் பெஸண்டு அம்மையார் எழுதிய ஒரு வியாசத்தைப் படித்தேன். அவர் பிராமணர்களை இனி உத்தியோகங்களை ஒழித்துத் தமது பண்டைக் கால தர்மத்தை கைக்கொள்ளும்படி யோசனை கூறுகின்றார். இதை அவர்கள் ஒப்புக்கொண்டு எல்லோரும் உத்தியோகங்களைக் கை கழுவிவிட்டு வெளியே வருவார்களா? இவ்வாறு முன்னர் டாக்டர் சுப்பிரமணிய ஐயரும், பிறகு ரங்காச்சாரியும், முடிவில் மயிலை சீமானும் (நகைப்பு) கடைசியாக அம்மையாரும் கூறும் ஆலோசனைகளை பிராமணர்கள் குப்பைத் தொட்டியில் தான் தள்ளியிருக்கின்றனர். திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் தமது உத்தியோகத்தைவிட்டு விலகும்போது பிராமணரல்லாதாரின் திறமையையும் மேன்மையான போக்கையும் உலகினருக்கு நன்கு நிரூபிக்கத்தக்க பல பாராட்டத்தக்க வேலைகளைச் செய்யக்கூடுமென்று உறுதியாய்ச் சொல்லுவேன். பிராமணரல்லாதவர்கள் பெரிய உத்தியோகம் வகித்தபின் பிராமணரல்லாத மக்கள் குறைகளைக் கவனிப்பதில்லை என்ற பொதுப்படையான குறை இவர் விஷயத்தில் பொய்த்துப் போகுமென்றே நம்புகின்றேன் எனக்கூறினர்.

பிறகு கான்பகதூர் ஹாஜி மகமது அப்துல் அஜீஸ்சாகிப் பகதூர் அவர்களும் திரு. பி. என். மார்த்தாண்டம் பிள்ளையவர்களும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்கள்.

திரு கண்ணப்பர்.

அடுத்தபடியாக திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், நான் இத்தீர்மானத்தை ராஜவிஸ்வாசியாகவோ அல்லது இயல்பான கிளர்ச்சிக்காரனகவோ ஆதரிக்க வரவில்லை. (நகைப்பு) ஆனல் பிராமணரல்லாதார் என்ற முறையில் இத்தீர்மானத்தை ஆதரிக்க முன் வந்திருக்கின்றேன். (பெருத்தகரகோஷம்) திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர் நியமனத்திற்காகநாம் கவர்னரை பாராட்டவேண்டிய அவசியமில்லை என்றே தோன்றுகிறது. நாம்பிராமணரல்லாதார்ஒருவருக்கு அந்த உத்தியோகமளிக்கப்பட வேண்டுமெனக் கூட்டம் கூட்டி வற்புறுத்தியும் அப்பதவியை ஒரு சாஸ்திரிக்கு கொடுத்தார். அவர் சனிக்கிழமை உத்தியோகம் பெற்று செவ்வாய்க்கிழமை விலகினர். இவர் தெரியாத்தனமாகச்செய்த செய்கை பெரும் தேசபக்தி நிறைந்ததென நம் எதிரிகள் கூச்சலிடுவதுடன் நில்லாது கிருஷ்ணன் நாயர் உத்தியோகம் ஏற்றுக்கொண்டதைக் கண்டிக்க வெட்கம் கெட்டு வெளிப்பட்டு விடுகின்றனர். இவ்விஷயத்தில் பிராட்வே மின்சார வைத்தியர் (பெருத்த நகைப்பு) உலகத்திலில்லாத ராஜீய வாதி ஆகிவிட்டார். இவர் மானம் அவமானமின்றி பிராமணர்கள்கூட்டச் சொல்லுவதற்கு வாய்கூசும் வார்த்தைகளைச் சொல்லித்திரிகிறார். பிராமணர்கள் சொல்லிக் கொடுத்தவற்றை அப்படியே பீச்சுக்கூட்டங்களிலும் பிறவிடங்களிலும் கக்குகின்றார். இவர் உளறுவது தமிழ்நாடு பத்திரிகையில் விசேஷமாக விளம்பரம் செய்யப்படுகின்றது. இப்பேர்ப்பட்ட துரோகி பிராமணரல்லாதார் கூட்டத்தில் பிறந்ததற்காகவருந்துகின்றேன். கோவை தீர்மானத்தைக் குறித்துச் சிலர் முட்டாள்தனமான அர்த்தம் செய்து கொண்டு பேசுகின்றனர். இரட்டை யாட்சியைக் கொல்வதென்ற பேச்சு அதில் ஒன்றுமில்லை. மாகாண சுயாட்சி கிடைக்கும் வரை நாம் உத்தியோகமேற்க முடியாதென்றும், நிர்வாக சபையில் பிரத்தியேக இலாகாவில் ஒருவர் முறணப்பட்டிருக்கும் வரை நாம் ஒத்துழைக்க முடியாதென்றும் தற்போதுள்ள மந்திரி சபை மீது நம்பிக்கையில்லையென்றும், ஆதலால் இம்மந்திரி சபையை ஆதரிக்க முடியாதென்றும், கனம். பனகால் ராஜா வரவு செலவுத் திட்ட வாதத்தின்போது இரண்டாண்டுகளுக்கு முன் நிலைமையை நன்கு விளக்கிப் பேசியிருக்கின்றார். திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் இவ்வுத்தியோகத்திற்குப் பல விதத்திலும் லாயக்குடையவராயும்,நமது கட்சியின் உபதலைவராயு மிருக்கின்றார் பிராமணரல்லாத மந்திரிகளாயிருந்தால் நாம் அவர்களை ஆதரிக்கவேண்டுமென்று சர் கே. வி ரெட்டி நாயுடு அவர்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. வைத்திய வாதராஜுலு நாயுடுக்கு மந்திரியானல் நாம் ஆதரிக்க முடியுமா? (நகைப்பு) அல்லது சடற்கரையில் சத்தியமூர்த்திக்குப் பின் ஜாலர் அடிக்கும் குழந்தைகளும், சீனிவாசய்யங்காருக்குத்தக்கவாறுகூத்தாடும்போலி பிராமணரல்லாதவர்களும் மந்திரிகளானல் நாம் ஆதரிக்க முடியுமா? நிற்க கொல்லங்கோடு போன்ற பிராமணரல்லாதாருக்கு இச்சட்டமெம்பர் பதவி யளிக்கப்பட்டிருக்குமாயின் நாம் அதனை ஆதரிக்க முடியுமா? நமது கட்சியில் சேர்ந்தவராய் பிராமணரல்லாத மக்கள் உரிமைகளையும் நன்மைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் ஊக்கமும் உறுதியு முடையவர்களைத்தான் நாம் ஆதரிக்க முடியும். (கரகோஷம்) கிருஷ்ணன் நாயர் நியமனத்தால் பிராமண உலகமே நடுக்கமெடுத்து விட்டது. (கரகோஷம்) இதனாலும் முக்கியமாக நான் இந்நியமனத்தை மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றேன் எனக் கூறினர்.

ஸ்ரீமதி அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள்.

அடுத்தபடியாக திரு. கே. வி.மேனன் அவர்களும், திரு. சுரேந்திரநாத் ஆரியா அவர்களும் தீர்மானத்தை ஆதரித்தும், திவான்பகதூர் கிருஷ்ணன் நாயரைப் பாராட்டியும் சில வார்த்தைகள் பேசிய பிறகு ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் தீர்மானத்தை ஆதரிக்கையில் திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் நெடு நாட்களாக ராஜீயத் துறையிலுழைத்து வந்திருப்பதுடன் நிர்வாகத் துறையிலும் போதிய ஆற்றலும் அனுபவம் முடையவரா யிருக்கின்றார். நாம் இந்நியமனம் பெற்றவர் பிராமணரல்லாதாரா யிருப்பதற்காக சந்தோஷிப்பதாக நினைத்து விடக்கூடாது. திவான்பகதூர் எம் கிருஷ்ணன் நாயர் நமதிபக்கத்தில் எக்காலத்திலும் மாறாத அன்பும் ஆதரவுமுள்ளவரா யிருந்திருப்பதுடன், பிராமணரல்லாத மக்களுள் எத்தகைய ராஜீய அபிப்பிராய முடையவர்களுடையவும் நன்மதிப்பையும் பெற்றவராயுமிருப்பதே முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. திருவாங்கூரில் அவர் நீதிபதியாயும் திவானுயும் பிராமணரல்லாத மக்கள் முன்னேற்றத்தில் விசேஷ ஊக்கங்காட்டியுழைத்துத் தாழ்த்தப்பட்டமக்களுக்குப் பேருபகாரியாயு மிருந்திருக்கின்றார். திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர் உழைப்பை மெச்சி திருவாங்கூர் அரசர் அவரைத்திவனுயிருந்து விலகும்போது அவருக்குப் பெருத்தக் கௌரவங்களுக்கிடையேவீரசங்கிலியும் பரிசளித்திருப்பதாகத் தெரிகிறது. (கரகோஷம்) தாமிருக்கும் கட்சியிலிருந்து சமயத்திற்கேற்றவாறு பிறழாமல் எந்நிலையிலும் விஸ்வாசத்துடன் உழைத்த அனுபவமும்திறமையும் மிகுந்த திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களுக்கு இப்பதவியளித்ததை நான் பெரிதும்

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

வெள்ளையூர் வாலிபர் சங்கம்.

இப்பெயருடைய இச்சங்கம் இவ்வூரில் ஏறக்குறைய எழெட்டு வருடங்களுக்கு முன்னரே ஸ்தாபிக்கப்பட்டு ஆரம்பத்தில் பல பிரயோசனமான ஜனசகாயத்திற்குரிய வேலைகள் செய்திருந்த போதிலும் இடையில் நேரிட்ட பலகாரணங்களினால் பேருறக்கம் கொண்டிருந்தது. தற்போது ஸ்ரீமான் ராயவேல் உடையார் அவர்களின் பேராதரவு கொண்டு மறுபடியும் இந்தச் சங்கம் புத்துயிர்கொண்டு வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறது. இந்தச் சங்கத்திற்குத் திருவாளர்கள் ராயவேல் உடையார் அவர்கள் பிரசிடெண்டாகவும், மு. சொக்கலிங்க உடையார், ரா. சொக்கலிங்க உடையார் மு. வேலாயுத உடையார், மோ. சு. குப்புசாமி உடையார் முதலிய நால்வரும் நிர்வாகசபை மெம்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பல புதிய அங்கத்தவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். இந்தச்சங்கத்திற்கு நன்கொடையாகக் கொடுக்கும் தொகைகளுடன் ஒவ்வொரு மெம்பரும் வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று சந்தா செலுத்த வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். இத்தொகையினைக் கொண்டு 'குடி அரசு' 'திராவிடன்' தன. இன்னுஞ் சில பத்திரிகைகள் பத்திரிகைகள் வா வழைக்கப்படுகின் வரவழைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்தில் ஷை யூர்கிராம முனிசிப்பும் கர்ணீகரும் ஐக்கிய நாணய சங்க பிரசிடெண்டாரும் காரியதரிசியும்; வில்லேஜ் பஞ்சாயத்து பிரசிடெண்டும் மற்ற மெம்பர்களும் இவ்வூர் இடைக்கல் பாரஸ்டு பஞ்சாயத்து மெம்பரும் பாண்டூர் பாரஸ்டு பஞ்சாயத்து மெம்பரும் போர்டுஸ்கூல் உபாத்தியாயரும் அபிமானமுள்ளவர்களாக இருந்து சங்கம் ஒங்குமாறு சொல்லிவரும் புத்திமதிகள் போற்றத்தக்கவைகளே. இந்தச்சங்கம் இவ்வாண்டில் செய்த முதல் வேலை மிகப்போற்றத் தக்கதே. இந்த ஊரில் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறக்கும்பொழுதே அந்தக்குழந்தைகளின் முதல் தலைமயிர் திருப்பதி, பழனி, முதலிய தூர தேச சுவாமிகளின் சந்நிதியில் மொட்டை அடிக்கப்படும் என்று பிரார்த்தனை செய்து கொள்வது வழக்கம். இவ்வாறு அவர்கள் செய்யும் பிரார்த்தனையைக் குறைகூற நாம் முன்வரவில்லை. ஆனால், ஏரிகரைகளிலும் சப்பாத்திகளிலும் முளைக்கும் முள் செடிகள் எப்படிகவனிக்கப்படாமல் இருக்கிறதோ அப்படியே அந்தக் குழந்தைகளின் தலைமயிர் பல வருஷங்களாக கவனிப்பதில்லை. இவ்வாறு கவனிக்காமல் இருக்கவே குழந்தைகள் தலைமயிர் சிக்கு பிடித்து ஈரும் பேனும் கொண்டதாக சீழும் புண்ணும் நாற்ற மெடுக்க மிக்க கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த மடச்செய்கையை யார்தான் வெறுக்காமல் இருக்க முடியும்? இந்தச்செயலைபறிந்தவாலிபர்சங்கத்தினர் மேற்படிகுழந்தைகளின் பரிதாபநிலைமையை அறிந்து அவர்களின்பெற்றோரைக்கண்டு அவர்களின் மூடச்செய்கையைக் கண்டித்து இருபத்தேழு குழந்தைகளின் தலைமயிர் இதே கிராமத்தில் ஒரே தினத்தில் மொட்டை அடிக்கப்பட்டது. அந்தக்குழந்தைகளை இப்பொழுது பார்க்குங்கால் மிக அழகுள்ளவர்களாயும் ஆரோக்கியம் உள்ளவர்களாயும் காணப்படுகிறார்கள்.

இந்த ஊரில் இருபது முப்பது வயதுக்கு மேல்பட்டு கலியாணம் ஆகாத ஆண்பிள்ளைகள் பலர் இருக்கிறார்கள். இவர்களின் பெற்றோராகிலும் சரி, அல்லது அந்த ஆண் பிள்ளைகளாயினும் சரி, கல்யாணம் செய்துகொள்ளும் விஷயத்தில் சற்றும் ஊக்கமில்லாதவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அப்படியே சந்நியாசியாக இருந்துவிட்டால் அவர்கள் பால் மிக்க நன்றியறிவுள்ளவர்களாக இருக்கிறோம். ஆனால் இவர்கள் கிழவயதாகி பால்ய பெண்களை கலியாணம் செய்துகொண்டு தம்பதி சகிதம் வாழும் வாழ்கை மிககுறைவுபடும் என்றுதான் வருந்துகிறோம். நாளது ஆனிமீ 30தேதிக்குள் வயதுவந்தவர்கள்எல்லாம் கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்றும் மணம்செய்துகொள்ளாமல் இருக்கும் மனமுடையவர்களையும் மேற்படியாருக்கு பெண் கொடுக்க இசையும்பெரியோர்களையும் மிகத் தாழ்மையுடன் இந்த வாலிபர் சங்கத்தினர் கேட்டுக்கொள்ளுகிறார்கள் என்று சங்க அங்கத்தினர் ஒருவர் எழுதுகிறார்.

பாராட்டி இத்தீர்மானத்தை ஆதரிக்கின்றேன் எனக்கூறினர்.

பிறகு தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறை வேறியது.

மற்ற தீர்மானங்கள்

பின்னர் திரு பாலசிங்கம் சத்திய நாடார் அவர்களால் "சட்ட மெம்பராக திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களை சட்ட மெம்பராகத் தெரிந்தெடுத்ததைக் குறித்து சென்னை வாசிகளாகிய பிராமணரல்லாதாரின் இப்பொதுக் கூட்டம் கவர்னருக்கும் இந்தியா மந்திரிக்கும் தனது நன்றியையும் வந்தனத்தையும்தெரிவித்துக்கொள்ளுகிறது" என்னும் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசுகையில், திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயருக்கு இப்பதவியளிக்கப்பட்டதைக் குறித்துத் தமது வகுப்பாராகிய இந்திய கிறிஸ்தவ வகுப்பாருக்கும் விசேஷ திருப்தி யேற்பட்டிருப்பதாகக் கூறினர்.

பின்னும் இத் தீர்மானத்தை ஸ்ரீமான்கள் எ. சிவராம மேனனும், கே. ராகவய்யாவும், எல். வி. குருசாமியும் ஆதரித்துப் பேசிய பின் தீர்மானம் ஏகமனதாக நிறை வேறியது.

முடிவில் "இத் தீர்மானங்களை கவர்னர், இந்தியா மந்திரி, கிருஷ்ணன் நாயர் முதலானவர்களுக்குத் தெரியப்படுத்தும்படி அக்கிராசனரைக்கேட்டுக்கொள்ளப்படுகின்றது" என்னும் தீர்மானம் முறையே ஸ்ரீமான்கள் ஆர். மதன கோபல் நாயுடு அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, வி. சிவப்பிரகாச முதலியாரால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறிய பின், அக்கிராசனர் சுருக்கமான முடிவுரை கூறிய பிறகு, வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

திரிச்சினாப்பள்ளி ஜில்லா போர்டு தலைவர் பதவி.

(நமது நிருபரிடமிருந்து)

இச் ஜில்லா போர்டு தலைவராக இருந்தவர்து இதுபொழுது வளர்ச்சி நெறி அமைச்சர் (அபிவிருத்திரி மந்திரி) பதவி ஏற்றுக் கொண்டுள்ள உயர் திரு. எம். ஆர். சேதுரெத்தினம் அய்யரவர்கள் இன்றுவரை தனது திரிச்சினாப்பள்ளி ஜில்லா போர்டு தலைவர் பதவியை ராஜிநாமா செய்யவில்லை. "பல அங்கத்தினர்களால் என் ராஜிநாமா செய்யவில்லை என்று நேரில் கலந்து கேட்டவர்களுக்கு இன்று, நாளை, என்று முப்பது கெடுவுகள் வரை ராஜிநாமா செய்ய நாள் பார்த்தும் (நாள் கிட்டாமல்) உதகமண்டலம் சென்று ராஜிநாமா செய்து விடப்போவதாகச் சொல்லிப் போய் விட்டார். இந்த நிலையில் பொது ஜனங்களும் அங்கத்தினர்களும் திரு. எம். ஆர். சேதுரத்தினம் அய்யரின் மனப்பான்மைஇன்னதென்று கொள்ளவிரும்புவதோடு 'கூழுக்கும்ஆசை மீசைக்கும் ஆசை' என்றவன் பழமொழிக்கு இலக்கியமாகாமல் பதவி இரண்டில் ஒன்றை வைத்துக்கொண்டு ஒன்றை விடவேண்டும். இதுதான் முறையாகும். இதன்றி மனப்பால் குடித்துக்கொண்டு மந்திரி வேலைக்கு எங்கு ஆபத்து வருமோ. என்று வந்தால் ஜில்லா போர்டுத் தலைவர் பதவிகையில் இருப்பதாகவும் நினைத்து இரண்டில் ஒன்று உறுதிசெய்துகொள்ளலாமென்ற தனக்குள் நினைத்துக் கொண்டிருப்பாரானல், தனது பதவியில் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார் என்பது பொது ஜனங்கட்கு நன்கு விளங்கிவிடும். இனியேனும் பொது ஜனங்களின் நன்மைக்குரிய முறையான நோக்கப்படி நடந்து கொண்டால் யாருக்கும் நன்மையுண்டு.

குப்புசாமி முதலியாரின் ராஜிநாமா.

30—4—28

வேலூர் அ. குப்புசாமி முதலியார் காங்கிரஸ் சந்தா அங்கத்தினர் பதவி தவிர நிர்வாக மெம்பர் பதவியும் ஜில்லா கமிட்டி மாகாணகமிட்டி மெம்பர்கள் பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டார். இன்று முதல் மாகாண கமிட்டி மூலமாக செய்யும் பிரசாரத்தையும் நிறுத்திக் கொண்டார். இனிமேல் தமிழ்நாட்டில் நண்பர்கள் பிரசாரத்திற்கு அழைத்தால், நான் செய்ய வேண்டிய கடமைகள், மஹாத்மா காந்தி அடிகளுடைய திட்டம், லாலா லஜபதிராய் உபதேசம், கதர் மதுவிலக்கு தீண்டாமை, தேசிய கல்வி கவர்மெண்டாருடைய அநீதிகள், சட்டமறுப்புக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள், வகுப்பு துவேஷத்தை கண்டித்தல், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் கண்டித்தல், இந்து முஸ்லீம் ஒற்றுமை, சைமன் கமிஷன் பஹிஷ்காரம் சட்டசபை பஹிஷ்காரம் வேஷதாரி சுயநலமுள்ள தலைவர்களை கண்டித்தல், உத்தியோகம் ஏற்கும் கக்ஷியை கண்டித்தல், பால்ய விவாஹத்தை... கண்டித்தல், விதவா விவாஹத்தை அனுஷ்டானத்திற்கு கொண்டு வருதல், பொட்டு கட்டும் தொழிலை வொழித்தல், ஜனங்களுக்கு கவர்மெண்டார் பேரில் அதிருப்தி உண்டாக்குதல், கோவில்களில் நாடார் வணிக செட்டியார் ஒதுக்கப்பட்டவர்களுக்கு உரிமை கொடுப்பது,சமுதாய விஷயங்களில் சீர்திருத்தத் திமிர் பிடித்த எந்த ஜாதியாய் இருந்தாலும் அவர்களை கண்டித்தல், நாம் சுயராஜ்யம் அடையவேண்டியதற்கு எந்த எந்த வழியில் கவர்மெண்டாரை அடக்குவதற்கு வேலை செய்யவேண்டிய விஷயங்களை பற்றி பிரசங்கம் செய்வார். இந்த அபிப்பிராயங்களால் தான் நமக்கும் சென்னையில் இருக்கும் தற்காலம் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லி கொண்டிருக்கின்ற நண்பர்களுக்கும் தகரார் ஏற்பட்ட விஷயத்தில் நமக்கு சேர வேண்டிய அலவன்சு தொகையை கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். இதனால்தான் என்னை நேற்று கூடிய காரியக்கமிட்டியில் பிரசாரத்திற்கு நியமனம் செய்யவில்லை. அவருக்கு மாதம் மாதம் 30 ரூபாய் கொடுத்துவிடுங்கள். அவர் வேலூரிலேயேஇருந்துவிடட்டும் என்றுதீர்மானம் செய்திருகின்றார்கள். இது எவ்வளவு பொறுப்பு வாய்ந்த சபை என்று நீங்களே யோசித்து பாருங்கள். என்று குப்புசாமி முதலியார் எழுதுகின்றார்.

திண்டுக்கல்.

தாலூகா காங்கிரஸ் கமிட்டி.

29—4—28

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

ஷை கூட்டம் 28-4-28 தேதி மாலை காங்கிரஸ் ஆபீஸ் கட்டடத்தில் தலைவர் திரு. ராமலிங்கம் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற அப்போது அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்:—சைமன் கமிஷன் பகிஷ்கார பிரசாரத்திற்காக ரூ 30 அனுப்புவதாக வாக்களித்து முன்னடியே வேலை துவக்கச் சொல்லி அவ்வேலை முடிந்து சுமார் 3மாத காலமாகியும் குறித்தகாலத்தில் பணம்அனுப்பாமல் முன்பின்முரண்பட்ட பதில் தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி இடமிருந்து கிடைத்திருப்பதற்கு இச்சபை வருந்துவதோடு அவ்விதம் ஒவ்வாத அக்கமிட்டி கடிதங்களின் சுருக்கங்களையும் ஷை த. கா. கா. கமிட்டிக்கு அனுப்பியும் ஆங்கில அதிகார வர்க்கத்தினர் கையாண்டுவரும் முறையைமேற்படி கமிட்டி அநுசரிக்காமல் ஏற்கனவே வாக்களித்தபிரகாரம் பணத்தை உடனே அனுப்புவதோடு இத்தகைய செய்கைகள் தமிழ்நாடு தலைமை கமிட்டியிலேயே இனி ஏற்படாமல் இருக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறது.

சித்திரை திருவிழா:—இவ்வூர் காளாஹத்தீஸ்வரர் தேவஸ்தானத்தின் புதிய டிரஸ்டி (மானேஜர்) திருவாளர். எஸ். எம். வி. அங்கமுத்துப் பிள்ளை அவர்களின் நன் முயற்சியால் சொஸ்திவாசனம் அதாவது பார்ப்பனர்கள் சுவாமிக்கு பின் வேதம் ஓதுதல் தேவாரக் கோஷ்டி முதலிய வைபவங்களுடன் சுவாமியை வெகு சீக்கிரம் புறப்பாடு செய்து விழா வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருச்சினாப்பள்ளி

தொழிலாளர் தினம்

(நமது சொந்த நிருபர்)

மேமாதம் முதல் தேதியாகிய செவ்வாய்க்கிழமை உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தென்னிந்திய ரயில்வே இஞ்சினீரிங் ஒர்க்ஷாப் தொழிலாளர்கள் தங்கள் ஒர்க்ஷாப் முன்னிலையில் பெரிய கூட்டம்ஒன்றை மாலை 5 மணிக்குமேல்கூட்டி தொழிலாளர்தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடினர்கள் அக்கூட்டத்திற்கு ஏராளமான தொழிலாளர்கள் வந்திருந்தார்கள். மற்றும் பல தொழிலாளர்களும் பொன்மலை ரன்னிங்ஷெட், காங்கி தொழிலாளர்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. சில பிரமுகர்களும் வந்திருந்தார்கள். தொழிலாளர் தினத்தைச் சந்தோஷமாகக் கொண்டாட எண்ணி வாத்தியக்கருவிகள் முதலானவைகளுடன் பஜனை செய்யவும் ஏற்பாடாயிருந்தது. அக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் அடைக்கலசாமிபிள்ளை தலைமைவகித்தார்.

தலைவர் முகவுரையாகப் பேசுகையில் தொழிலாளர் தினக் கொண்டாட்டத்தின் அவசியத்தைப்பற்றியும்,தொழிலாளர் சிக்கன திட்ட விஷயமாக ஏஜெண்டின் சமீபசுற்றுத்திரவையும்விளக்கிக்காட்டிய பின்கோயம்பத்தூர் தொழிலாளர்இயக்கத் தலைவர் திருவாளர் என் எஸ். ராமசாமி அய்யங்கார் அவர்களை அறிமுகம் செய்துவைத்தார்.

திருவாளர் என்.எஸ். ராமசாமி அய்யங்கார் ஏஜண்டின் சுற்றுத்திரவு மிகவும் அநீதமென்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்திருக்கின்றாரென்றும், முதல் சுற்றுத்தாவில் 8000 தொழிலாளர்களில் 3000 தொழிலாளர்களை விலக்குவதாகச் சொன்னாரென்றும், பின்னால் வெளியிட்ட உத்தரவில் 6000 தொழிலாளர்களில் 3000 தொழிலாளர்களை விலக்கப் போவதாக அறிவித்திருக்கின்றாரென்றும் தொழிலாளர்களை ஏமாற்றி வெளிப்படுத்தி இங்கிலாந்து முதலான இடங்களிலிருக்கும் தொழிலாளர்களின் நன்மையைக் கவனித்து செய்வதாக தெரிகிறதென்றும்,இந்திய தொழிலாளருக்கு யாதொரு நன்மையும் ஏற்படாதென்றும் தொழிலாளர்கள் ஏமாறமடையும்படி ஒரு மாதம் சம்பளம் இனாமாகக் கொடுப்பதாக தெரிவித்திருக்கின்றாரென்றும், அவ்விதம் பெறும்தொகை எவ்வளவு காலத்திற்குத் தொழிலாளர்களுக்குப் போதுமானதாக யிருக்குமென்றும்,அதை நம்பி பலர் மோசம் போகப் போவதாகத்தெரிகிறதென்றும், இவ்விதமான அறிக்கைகளுக்கெல்லாம் தொழிலாளர்கள் ஏமாந்து போகக்கூடாதென்றும் எல்லோரும் ஒற்றுமையாக யிருந்து காரியங்களை செய்தால் நல்ல பலன் கிடைக்கு மென்றும், மற்றதொழிலாளர்களிடம் அவர்களுடைய குறைகளை சொன்னால் அவர்களும் ரயில்வே தொழிலாளர்களின் பால் அன்பு கூர்ந்து உதவுவார்களென்றும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய காலம் ஏற்பட்டால் அவர்களும் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்ய சாதகமாக யிருக்கு மென்றும், அவர்களையும் உற்சாகப் படுத்த வேண்டுமென்றும் எவ்வளவுக் கெவ்வளவு தொழிலாளர்கள் ஒற்றுமையாக யிருக்கின்றார்களோ அவ்வளவுக் கவ்வளவு நன்மை ஏற்படுமென்றும் விபரமாகச் சொல்லி தொழிலாளர்தினத்தை எல்லோரும் சிறப்பாகக் கொண்டாட வேண்டு மென்றும் சொன்னார்.

வொர்க்ஷாப்பிலிருந்து பட்டரைகளை பொன்மலைக்கு மாற்றப்படும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ராஜிநாமா செய்யவேண்டு மென்றிருப்பதை மாற்றி "மூன்று மாதத்திற்குள்" என்று உத்திரவிடும்படியாக அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

எல்லா தொழிலாளர்களுக்கும் சுந்தனம் கற்கண்டு முதலானவைகள்வழங்கப்பட்டபின் கூட்டம் இரவு 7-மணிக்குக் கலைக்கப்பட்டது.

ஏஜெண்டுகள் தேவை

பலவித அலங்கார (Fancy) சாமான்களும், சாதாரண சாமான்களும் விற்பனை செய்யும், அவைகளுக்கு ஆர்டர் வாங்கி யனுப்பவும் ஒவ்வொரு ஜில்லாவிலும் சோல் ஏஜெண்டுகள் தேவை. சம்பளம் ரூ 30. ஆபீஸ் செலவுகளும், விற்பனைக்குத் தக்க கமிஷனும் கொடுக்கப்படும்.

ஏஜண்டுகளிடம் ஒப்புவிக்கப்படும் சரக்குகளுக்காக 200 ரூபா டிபாசிட் கட்டவேண்டும். மற்றும் விபரங்களுக்கு. கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும் ஆங்கிலோ இந்தியன் டிரேடிங்கம்பனி, மல்லேஸ்வரம் போஸ்ட். பெங்களூர். 17—4—28.

(80 எ.)

கப்பல் விஷயங்கள்

துறை முகத்திலிருக்கும் கப்பல்கள்

2-5-28

பெயர்	போகும் ஊர்	புறப்படுந்தேதி மே மாதம்
எரின்புரா	ரங்கூன்	4—
எல்வின்	மார்ஸேல்	—
பாதுவா	ராட்டர்டாம்	—
பெகம்	கல்கத்தா	—
க்ளான் மக்னூட்டன்	கல்கத்தா	5—
மார்கா	மார்ஸேல் லண்டன்	—
உம்சிங்கா	ரங்கூன்	3—
மீடியா	கல்கத்தா	4—
மக்டூர்	— —	4—
ஸ்டார்ம்பெல்ஸ்	கல்கத்தா	4—
எச். எம். ஷ்ரிபயர்	—	—
ஹின்னய்	—	—

எதிர் பார்க்கப்படும் கப்பல்கள்.

பெயர்	போகும்ஊர்	எதிர்பார்க்கப்படும் தேதி மே மாதம்.
டோக்ரா	பம்பாய்	5—
டிரிகிவ்	கல்கத்தா	8—
ஸிட்டி ஆப் யார்க்	லண்டன்	8—
மெரீன் ஸானுடோ	கல்கத்தா	8—
ஜாடென்	அமெரிக்கா	8—
ஓர்ஸியோலோ	ஜெனோவா	7—
க்ளான்ஸின்க்ளேர் லண்டன்	ராட்டர்டாம்	8—
ஹிகார்	ரங்கூன் கல்கத்தா	5—
மசல்	கல்கத்தா	7—
டைரியா	பினங்	7—
எத்மா	ரங்கூன்	9—
க்ளான்மெகன்ஸி	கல்கத்தா	9—

வியாபார விஷயங்கள்.

நாணய மாற்றல்.

(3—5—28)

	விற்கிற விலை,	வாங்குகிற விலை
லண்டன்மேல் தந்தி	17 31/32 பெ.	
லண்டன் மேல் தரிசனம்பெ,	18 பெ.	18 1/8பெ
லண்டன் மேல் 3-மாத தவணை உண்டி		18 9/32 பெ.
லண்டன் மேல் 6 மாத தவணை உண்டி		18 19/32 பெ.

பிரான்ஸ்மேல் தரிசனம்— ரூ 100-க்கு 920 ப்ராக்

பெல்ஜியம் மேல் தரிசனம் ரூ, 100 க்கு 257

ஜர்மனி மேல் தரிசனம் ரூ, 100-க்கு 150 மார்க்

அமெரிக்கா மேல் தரிசனம்— 100 பொன் டாலருக்கு ரூ. 274 ரூ 269

பினங், சிங்கப்பூர் மேல் தரிசனம்— 100 டாலருக்கு ரூ. 156 ரூ. 150

ஹாங்காங்மேல் தந்தி அல்லது தரிசனம் 100 டாலருக்கு ரூ. 145

ஷாங்காய் மேல் தந்தி அல்லதுதரிசனம் 100 டயிலுக்கு ரூ. 175

ஜப்பான் மேல்தந்தி அல்லது தரிசனம்— 100 யென்னுக்கு ரூ. 132

ஜப்பான் மேல் 60 நாள் டி. பி. 100 யென்னுக்கு ரூ. 127.

ஜாவாமேல் தந்தி அல்லது தரிசனம்— ரூ. 100க்கு 89 கில்டர் 92 கில்டர்

இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா நடப்பு வட்டி— 7o/o

பாங்க் ஆப் இங்கிலாந்து வட்டி 4½o/o

சர்க்கார் பத்திரங்கள்.

3½o/o இந்தியா சர்க்கார் பத்திரம் ரூ 75-0 முதல் ரூ 76-0

4o/o கடன் (1760 70) ரூ 87-3 ரூ 88-3

5o/o யுத்தக் கடன் (2929-47) ரூ 99-10 ரூ. 100-10

5o/o கடன் (1945-55) ரூ 106-1 ரூ 107-1

5o/o இந்திய சர்க்கார் ... ... பாண்டுகள் 1933 ... ... ரூ 101-12 முதல் ரூ 102 12

5½o/o யுத்த பாண்டுகள் 1928 ரூ 104-12 முதல் ரூ 105-12

6o/o கடன் 1930 ரூ 102-7- ரூ 103-7

6o/o இந்தி சர்க்கார் பாண்டுகள் 1931 ரூ 103-10 ரூ 104-10

6o/o கடன் 1932 ரூ 105-5 ரூ 106-5

6¼o/o மைசூர் சர்க்கார் கடன் (1940) ரூ 113 முதல் ரூ 114

6½o/o மைசூர் சர்க்கார் கடன் (1941-51) ரூ113ரூ 114

7o/o மைசூர் சர்க்கார்கடன்(1931) ரூ105-8ரூ 106-8.

இம்பீரியல் பாங்கி ஆப் இந்தியா (ரூ 500) ரூ 1445 முதல் ரூ 1455

இம்பீரியல் பாங்கி ஆப் இந்தியா ரூ (125) ரூ 355- ரூ 360—

விளம்பரம்.

நமது வாசனை திரவியங்கள், அலங்காரசாமான்கள்விற்பனையை அபிவிருத்தி செய்வதற்காக கீழ்க்கண்டவர்களை நமது ஜில்லா ஏஜெண்டுகளாக நியமித்திருக்கிறோமென்று நமது வியாபாரிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்:—

1. திரு. ரல்லப்பல்லி வெங்கடேஸ்வரராவ், எல்லூர், மேற்கு கோதாவரி ஜில்லாவுக்கு.
2. திரு. வி. டி. வி. ரங்காச்சாரிகாரு. நெல்லூர் ஜில்லாவுக்கு.
3. திரு. பி. ஆர். கிருஷ்ண ஐயர் அவர்கள். குருவாயூர், மலையாள ஜில்லாவுக்கு.
4. திரு. வி. மாயாண்டு அவர்கள், புதுக்கோட்டைக்கு

பொது ஜனங்கள் எம்மை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

புரோப்ரைட்டர்,
ஆங்கிலோ இந்தியன் டிரேடிங் கம்பனி.
பெங்களூர், மல்லேஸ்வரம் போஸ்ட்.
(100)

Printed and Published by J. S. Kannappar, for the S I P Association Ltd., "Justice" Printing work's 14 Mount Road, Madras.